# நாவலன்

சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம்

sity of Jaffna
70.73
CAI
AR; MAIN)

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ARCHIVES

University of Jaffna
250050
Library



இழந்த கண்ணொளியை
திரும்பவும் ஒளிபெறச்செய்யும்

Regd. No 2036

M.K. ஜெகநாதன்

பெரிய கடை

யுநானி கண் வைத்தியநிலையம் யாழ்ப்பாணம்

ஏழைகளுக்கு இலவச வைத்தியம் KMJ

## சிரநேத்திராஞ்சனத் தைலம்

இத்தைலத்தைத் தினந்தோறும் 20 சொட்டு வீதம் தலையில் தேய்த்து வாரமிருமுறை வெந்நீரில் ஸ்நானஞ் செய்தால், கண் புகைச்சல், கண்குத்து, கண்ணீர் வடிதல், கண்சொறிதல், கண் கூசல், பூவளசாறுதல், கண்ணில் பூவிழுதல், அந்தி மாலைக்கண் முதலிய கண்சம்பந்தமான சகல ரோகங்களையும், மூக்கடைப்பு, மூக்கால் நீர் வடிதல், தும்மல் முதலிய பீனிசவகைகளையும் பித்த மயக்கம், ஒரு தலைவலி, கபால இடி, சொறி, சுழற்சி ஆகிய ரோகங்களையும் தீர்த்து உடல்சம்பந்தமாக ஏற்படக்கூடிய இருமல் இளைப்பு, நரம்புத்தளர்ச்சி முதலிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, முகவசீகரத்தையும், குளிர்ச்சியையும், ஞாபகசக்தியையும் கொடுக்கும்.

அஸ்மா, கசம், நீரழிவு முதலிய ரோகங்களுக்கும்
ஓரளவு சுகங்கொடுக்கும்.

காலம் நீடித்த கண் நோயாளிகள் நேரிலோ அல்லது கடிதமூலமாகவோ விபரம் தெரிந்துகொள்ளலாம். சீயாக்காய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். 3 முழுக்கு வெந்நீரில் ஸ்நானம் செய்தபின் பச்சைத்தண்ணீரில் ஸ்நானம் செய்யலாம்.

2 அவுன்ஸ் சீசா ரூபா 3-25 4 அவுன்ஸ் சீசா ரூபா 5-50

மு. க. ஜெகநாதன்,

யூநானி கண்வைத்தியர், பெரியகடை, யாழ்ப்பாணம்.

ARCHIVES

*Phone No. 161* *Telegrams:* JEWELLERS.

# L. K. Shaikna Lebbay Bros.,

*63, KANNATHIDDY, JAFFNA.*

**As Education is Indispensable to Men**
**Personal Adornments to Women.**
**Jewels Adorn a Person.**
**For Your Jewels go to L. K. S. Bros.**

**ORDERS PROMPTLY EXECUTED**

*

கல்வி இல்லாமல் மனிதர் இல்லை;
ஆபரண மில்லாமல் அழகில்லை
ஆபரணம் எவரையும் அழகுசெய்யும்
ஆபரணங்களை எல். கே. எஸ். பிரதர்களிடம்
வாங்குங்கள்

ஓடர்கள் குறித்த தவணையிற்
செய்து கொடுக்கப்படும்.

**எல். கே. செய்க்னு லெப்பை பிரதர்ஸ்**

63, கன்னதிட்டி
யாழ்ப்பாணம்

போன்: 161. தந்தி: JEWELLERS.

370.73
CAI AR
NOV 12 1947
UNIVERSITY OF JAFFNA LIBRARY
JAFFNA COLLEGE LIBRARY 1872

உ

சிவமயம்

# நாவலன்

சைவாசிரிய கலாசாலை

மாணவர் சங்க வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நூலகம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

சர்வசித்துஸு ஐப்பசிமீ

250050

250050

ARCHIVES

சுன்னுகம்
திருமகள் அழுத்தகம்

# விஷய சூசிகை
## CONTENTS


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோத்திரம் ... ... ...<br>'Prayer' | v |
| 2. | தமிழ்த்தாய் வணக்கம் ... ...<br>Invokation to Mother Tamil | v |
| 3. | நாவலன் வருகை ... ...<br>Hail! Navalan | vi |
| 4. | நாவலன் ... ... ...<br>Ourselves | 1 |
| 5. | சைவாசிரிய கலாசாலை ... ..<br>Saiva Training College | 4 |
| 6 | இலக்கியம் கற்பித்தல் ... ...<br>Teaching of Literature | 9 |
| 7. | காவியமும் ஓவியமும் ... ...<br>Literature and Painting | 21 |
| 8. | 4-ம் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கு:<br>தசமபின்னமும் சாதாரணபின்னமும் .<br>Decimal and Common Fractions for Stds. IV & V | 24 |
| 9. | சாத்திரம் கற்பித்தல் ... ...<br>Teaching of Science | 31 |
| 10 | 'அவள்' ... ... ...<br>"She" — a poem | 39 |
| 11 | வார்தா கல்வித்திட்டம் ... ...<br>The Wardha Scheme of Education | 41 |
| 12 | குழந்தை உள்ளத்தின் வளர்ச்சி—<br>அதன் தடைகளும் துணைகளும் ..<br>Child Mind — Its Difficulties and Growth | 4[illegible] |
| 13. | சைவாசிரிய கலாசாலைப் புராணம் ...<br>Saiva Training College — Its Purana | 51 |
| 14. | இலக்கணம் கற்பிக்கும் முறை ... ..<br>Teaching of Grammar | 54 |
| 15. | பூமிசாஸ்திர பாட உபகரணங்கள் ... ...<br>Apparatus for Geography Teaching | 60 |

பக்கம்

16. இயற்கையின் சுவை ... ... ... 65
Appreciation of Nature

17. மனோராச்சியம் ... ... ... 66
The Imagination — A Short Story

18 மொன்ரிசூரி முறை ... ... ... 69
Montessori Method

19. ஒரு துமி : முதற்றுமி ... ... 76
A Drop : The first drop

20. மௌன வாசிப்பு ... ... ... 78
Silent Reading

21. மாணவர் தேர்ச்சிச்சங்க அறிக்கை ... ... 85
Report of the Students' Association

22. பத்திராசிரியர் குறிப்புகள் ... ... 87
Editorial Notes

23. கற்றுத் தேர்ந்த மாணவர்கள் — (1938 - 1947) ... 90
Names of Old Students of the College from 1938

## படங்கள்
## ILLUSTRATIONS

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் முகப்பு
Sri La Sri Arumuga Navalar

2. திரு. ச. அட்சலிங்கம் அவர்கள் ... 9
S. Adchalingam Esqr.

3. திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ... 33
S. Rajaretnam Esqr.

4. திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் ... ... 53
S. Swaminathan Esqr.

5. திரு. பொ. கைலாசபதி அவர்கள் ... ... 65
P. Kailasapathi Esqr.

6. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ... 81
Pandit S. Kanapathippillai Avargal

7. ஆசிரியரும் ஆசிரிய மாணவரும் ... ... 87
Present Staff & Students - in - training

JAFFNA COLLEGE
1872.
LIBRARY

உ

சிவமயம்

# தோத்திரம்

" சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்."

— ஆறுமுகநாவலர்

★

## தமிழ்த்தாய் வணக்கம்

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.

— பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

# நாவலன் வருகை

தெய்வத் தமிழும் சிவமதமுந்
தேயத் தீய பரசமயத்
திமிரம் பரவ யாழ்நாட்டார்
திகைக்குங் காலைச் சிவனருளால்
துய்ய திருநீற் றொளிபரவத்
துகடீர்ந் தினிய தமிழோங்கச்
சொல்ல வினிக்கு நல்லூரிற்
றோன்று மாறு முகனென்னும்
ஐயன் மருமா னாகியவன்
அரிய தொண்டு முறைபேணி
ஆசார்க் கினிய மதிதந்தே
யாண்டு தோறு மலருமெம
சைவ மணக்குந் தமிழ்மணக்குந்
தண்ணு ரிதமே வருகவே
சகல ஞான நாவலனுந்
தபன வருக வருகவே!

— பண்டிதர், இ. நமசிவாயம்

NOV 12 1947

JAFFNA COLLEGE 1872. LIBRARY

சைவோத்தாரணர்; செந்தமிழ் வள்ளல்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

# நாவலன்

நாவலன் தனது ஒன்பதாவது பராயத்தில் தன்னை அலங்காரம் செய்து ஆசிரியர் முன்னிலையிலும், அறிஞர் முன்னிலையிலும் உலாவி வந்தான். இன்று அவன் தனது பத்தொன்பதாவது பராயத்தில் மறுபடியும் வெளிவந்திருக்கிறன். இடையேயுள்ள காலம் யுத்த நெருக்கடியான சமயமாதலால் அவன் அலங்காரபூஷிதனுய் வெளிவர முடியாது போயிற்று. அவன் தனது வீட்டிலேயே தனது சூழலிலேயே தங்கவேண்டியதாயிற்று. தான் மறுபடியும் தன்னை அலங்கரித்து வெளிவரத்தக்க சந்தர்ப்பம் வந்துவிட்டதென்று சென்றவருடம் அவன் தனது தந்தையாரை நெருக்கினுன். சில கஷ்டங்கள் காரணமாய் அதுவுந் தடைசெய்யப்பட்டது. இம்முறை வெளிவந்தே தீருவதென்று கங்கணங்கட்டினுன். அவனின்று வாலிபனல்லவா? ஆகவே தடையனைத்தையும் மீறி உங்கள் முன்னிலையில் வந்து நிற்கிறன். அவனை வரவேற்பது உங்கள் கடமை. அவனை வரவேற்று உபசாரஞ் செய்துவிட்டால்மாத்திரம் போதாது. அவன் கூறும் புத்திமதிகளையும் கேட்கும்படி நெருக்குவான். அவன் இன்று வாலிபன். ஆகவே அவன் மற்றவர்களுக்குப் புத்தி கூறக்கூடிய ஆற்றல் தனக்கு இருப்பதாக எண்ணுவதிற் பிழை ஒன்றுமில்லையல்லவா?

இன்று நாவலன் மனத்தில் தாங்கமுடியாத குறை ஒன்று இருக்கிறது. அதை எவ்வளவு அடக்க முயன்றும் அவனல் அதை யடக்க முடியவில்லை. இதுவரையும் இலக்கிய இலக்கணங்களை ஓரளவிற்கு விருத்தி செய்வதற்கு ஆதாரமாயிருந்த தமிழ்ப் பாடசாலைகள் எல்லாம் இன்று ஆரம்ப பாடசாலைகளாய் மாறி இருப்பதைக் காணக் காண அவன் மனம் மிகவும் வருந்துகிறது. இதுவரையும் ஆங்கில பாடசாலைகளாயிருந்து இன்று உயர்தர பாடசாலைகளாய் மாறிய பாடசாலைகள்மூலம் தமிழ் குறிப்பிடத்தக்க அளவுக்கு விருத்தியடையுமென்பதிலும் அவனுக்குப் போதிய நம்பிக்கை கிடையாது. அவ்விடத்திலுள்ள தமிழாசிரியர்கள் தமது சகோதர ஆசிரியர்களுடன் ஒப்புநோக்கும்போது தாயில்லாப் பிள்ளைகளாக

இருக்கிறார்களென்பதையும் அவர்கள் தாயில்லாப் பிள்ளைக ளாகத்தா னிருக்கவேண்டுமென அரசாங்கம் தீர்ப்பளித்த தென்பதையும் நினைக்க நினைக்க அவன் மனம் மிக வருந்து கிறது. இதுவே அவனை மிகவும் இளைக்கச்செய்யும் ஒரு முக்கிய சம்பவம். இது மிகவும் வெட்கக்கேடான—'துரோகமான'— சம்பவமெனினும் துக்கப்படுவதொன்றன்மூலம் இது நிவிர்த்தி யாகிவிடாது. இக்குறையை நீக்க ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். எது எங்ஙனமாயினும் ஆசிரியர்கள் ஆரம்ப பாடசாலைகளிற் புதிய முறைகளை உபயோகித்து பாலரை நன்கு பயிற்றுதலிலும், அழகிய—இனிய செய்யுட்களைத் தெரிந் தெடுத்து ஆரம்ப வகுப்புகளில் இலக்கிய ரசனைபெற உதவி செய்வதிலும் பெருமுயற்சிசெய்து குழந்தைகளின் முகமலர்ச்சி என்னும் இனிய பதிலுபகாரமொன்றனையே குறிக்கோளாகக் கொண்டு தம் கடமையைச் செய்வார்களாக

ஆசிரியர்கள் சிறிது ஆங்கிலம் பயிலவேண்டுமென்பது நாவலன் விருப்பம். ஆங்கிலபாஷையை எழுத வாசிக்கத்தக்க அளவுக்கு ஒவ்வொரு ஆசிரியரும் தம்மைத் தயார்செய்து கொள்ளவேண்டும். இவ்வுதவியினுற் பிறநாட்டுச் சாத்திரங் களை அறிந்துகொள்ள முடியும். கூடுமாயின் சிங்களம் பயில் வதற்கும் முயற்சி செய்வது நன்று.

இன்னெருவிஷயத்தில் நாவலன் மிகுந்த சந்தோஷமடை கிருன். எதிர்காலத்தில் தமிழ் அரசாங்கபாஷையாக வர விருப்பதால் தமிழை அங்ஙனமாக்குங்கால் ஏற்படக்கூடிய தடைகளைத் தகர்த்தெறிவதில் ஆசிரியர்களும் அறிஞர்களும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று ஆங்கிலம் அர சாங்க பாஷையாயிருப்பதால் அதிற் காணப்படும் தமிழி லில் லாத சில சிறப்பியல்புகளைத் தமிழிற் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். நாம் சிங்களத்தைப் பயின்று அரசியலில் பங்குபற்றும் மாணவர்களை யுற்பத்திசெய்யவேண்டும். அங் ஙனம் செய்யின் சிங்களவர்களும் தமிழைப் பயின்று தமிழின் சிறப்பியல்புகளை அறிந்து தமிழைக் கௌரவிக்கும் சந்தர்ப்பம் ஏற்படச் செய்யலாம்.

இறுதியாக ஒருவார்த்தை; பாடசாலைகளிற் சமய வளர்ச் சியின்பொருட்டு ஆசிரியர்கள் ஆவன செய்யவேண்டும் சமய

பாடங்களும்பகிரங்கபரீட்சைகளுக்குப் பாடமாக்கப்பட்டிருக்கு மிக்காலத்து ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளில் சமயசம்பந்த மான சிலகதைகளையும் இனிய தேவார திருவாசகபாடல்களையும் பாலர் பயில்வதில் முயற்சிசெய்தால் அது சிரமக்குறைவுடன் போதிய பயனை அளிக்கும். இவைகளே நாவலன் குறிக்கோள் கள். இவை நிறைவேறின் நாவலன் மனம் களிக்கும். இவை நிறைவேறுமாறு ஆசிரியர்களின் முகத்தைப் பரிதாபத்துடன் நோக்குகிறுன். கடவுளருள் கிடைப்பதாக என்று வணங்கு கிறுன்.

❋

"கல்வியறி வொழுக்கங்களாலும் ஈசுர பத்தியினு லும் சிறந்து விளங்கும் போதகர்களைக் கொண்டு, தேவா லயங்களிலும், புண்ணிய தீர்த்தக்கரைகளிலும், மடங்களி லும், சனங்களுக்குச் சமயத்தைப் போதிப்பித்தல் வேண் டும். இதுவே எல்லாத் தருமங்களினும் மிக மேலாகிய தருமம். இத் தருமம் இல்லாவிடத்து மற்றைத் தருமங் கள் பயன்படாவாம். கடவுளுடைய குணங்களையும், மகி மைகளையும், அவரை வழிபடும் முறைமையையும், அவ் வழிபாட்டாலே பெறப்படும் பயனையும் அறியாதவர், கட வுளை வழிபட்டு உய்வது எப்படி? அவர்களுக்குத் தேவா லய முதலியவைகளினுலே பயன் யாது?"

--நாவலர்

❋

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூமை ரொன்றையு முணரா ரந்தோ.

—சிவஞானசித்தியார்

# சைவாசிரிய கலாசாலை

(கு. கணபதிப்பிள்ளை)

I

வெள்ளைக்காரர் வருவதற்கு முன்பு திண்ணைப் பள்ளிக் கூடங்கள் மூலமாகக் கல்வி ஊட்டப்பட்டு வந்தது. ஒரு கிராமத்தின் ஒரு மூலையிலே கற்றறிந்த பெரியவர் ஒருவர் இருப்பார். அவரிடம் பல மாணவர்கள் சென்று அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கல்வி பயில்வார்கள். அரசினருக்கும் கல்விக்கும் எவ்வித தொடர்பும் இருக்க வில்லை. ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட குருகுல முறைக் கல்வியே அவர்களால் அநுட்டிக்கப்பட்டது.

வெள்ளைக்காரர்கள் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்கள். அதற்கு முன்னமேயே பாதிரிமார்கள் பலர் வந்து இறங்கி விட்டார்கள். பாதிரிமார் கிராமந்தோறும் சென்று தம் சமயக் கோவில்களைக் கட்டி, அதற்குப் பக்கத்திலே பாட சாலை ஒன்றையும் ஆரம்பித்து, வறிய பிள்ளைகளுக்கு உடு புடைவை முதலியன கொடுத்துத் தங்களுடைய பாடசாலைக்கு அழைப்பித்து ஓர் ஆசிரியரை நியமித்துக் கல்வி ஊட்டினுர் கள். உண்மையில் அவர்கள் கல்வி ஊட்டவில்லை. தம் சமயத்தையே ஊட்டிவந்தனர். "தோல் இருக்கச் சுளை வாங் கினுர்கள்." சைவப் பெற்றுேர்களினது இறைப்பணமே அவர் கள் தம் பிள்ளைகளை மதம் மாற்ற உதவியது பிள்ளைகளின் தேர்ச்சிக்கேற்ப அவ்வாசிரியர்களுக்கு வேதனம் கொடுத் தார்கள். பரசமய இருள் நாட்டைச் சூழ்ந்துகொண்டது.

நாவலர் பெருமான் இவ்விருளைப் போக்கி நாட்டை ஒளி பெறச் செய்யும் ஞானபானுவாக உதித்தார். சைவப் பிரசங் கங்களினுலும், பிரசுரங்களினுலும், மக்களைத் தட்டி எழுப் பினுர். நாவலர் பிறந்திலரேல் நமது சைவமெங்கே? அருந் தமிழ் எங்கே? தம் வாழ்க்கையையே சைவத்திற்கும் தமி

ழிற்குமாக அர்ப்பணஞ் செய்தார். இதன்பொருட்டு எத்தனையோ கனவுகள் கண்டார். பல அவர் கண்முன் நிறைவேறின. சமய மாற்றத்துக்குப் பாடசாலைகளே மூலகாரணமாய் இருப்பதைக் கண்ட நாவலரவர்கள் 'சைவப்பிள்ளைகள் சைவாசிரியர்களாற் சைவப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கப்படவேண்டும்' என்று எண்ணினார்கள்.

இற்றைக்கு 20 வருடங்கட்குமுன்—சைவ வித்தியா விருத்திச்சங்கம் தொடங்குவதற்குமுன்—அங்கே ஒன்று இங்கே ஒன்றாகச் சில சைவ பாடசாலைகளே இருந்தன. அப் பாடசாலைகளிற் கல்வியூட்டும் ஆசிரியர், பெரும்பாலும் கிறீஸ்தவ சமயத்தினராயே இருப்பார். எவராவது ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து, பயிற்சி பெற்ற ஆசிரியராக வர விரும்பினால், அவர் கிறீஸ்தவராக மதம் மாறவேண்டும். இந்த வேலையை தெல்லிப்பழையிலே இருந்த கலாசாலை செய்துவந்தது. அதிற் பயிற்சிபெற ஒரு சைவ மகன்—பெயர் அருணாசலம்—போனார். அதிற் சேர்ந்த சைவர்கள் ஞானஸ்நானம் பெற்றுவிட்டார்கள். ஆனால் அந்த (காரைநகர்) அருணாசலம் மாத்திரம் அதற்கு மறுத்துவிட்டார். அன்றுதொடக்கம் அவருக்கு 'சைவாசிரியர்களை உண்டாக்கவேண்டும்' என்றவோர் பைத்தியம் பிடித்துக்கொண்டது. அதற்காக அவர் 30 ஆண்டுகள் படாத பாடு பட்டார். அதன் பயனாக அரசினரும் ஒருவாறு மனம் இளகி, கோப்பாயில் ஐக்கிய போதனாசாலையை ஆரம்பித்தனர். ஒரு சில சைவாசிரியர்கள் வருடந்தோறும் வெளிப்பட்டனர். வெளிப்பட்டும், அவர்கள் படிப்பிப்பதற்குச் சைவப் பாடசாலைகள் கிடைக்கவில்லை எனவே, அவர்களும் உத்தியோகத்திற்காகக் கிறீஸ்தவர்களாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சைவப் பாடசாலைகள் தாபிக்கலாமோ என்றால் சட்டம் இடங்கொடுத்தாற்றானே! 'தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடானல்லவா? சைவர்களிடம் அவர்களுடைய பழைய பனையோலைச் சட்டங்களிருந்தனவேயன்றி, அவர்கள் பாடசாலைகள் கட்டுவதற்குச் சட்டங்களில்லை. சட்டத்தைச் சட்டசபைமூலம் 1924 ம் ஆண்டிலே மாற்றினார்கள் சை. வி. வி. சங்கக் காரியஸ்தரவர்கள். அதனால் சை. வி. வி. சங்க மூலமாகவும் வேறாகவும் ஊரெங்கும் சைவ பாடசாலைகள் தொடங்கலாயின. அதனால், சைவ பாடசாலைப்

பஞ்சம் போய் ஆசிரியர்ப் பஞ்சம் பரவியது. இதனை நீக்கச் சங்கம் தனது சிரேட்ட புதல்வனை—சைவ உலகின் சுடரொளியை—தமிழ்ச்சாகியத்தின் பெரு நன்மைக்காக (பெற்று) அளித்தது. அதுதான் சைவாசிரிய கலாசாலை.

## II

சைவாசிரிய கலாசாலை, 1928-ம் ஆண்டு ஐப்பசி மாதம் சைவ வி. வி. சங்கக் காரியஸ்தரும் நாவலர்க்குப்பின் நாவலராய்ப் பணியாற்றும் பெரியாருமாகிய திரு.சு. இராசரத்தினம் அவர்களால் தொடங்கப்பட்டது. அக்காலத்தில் திரு. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள் அதிபராகக் கடமையாற்றினுர் கள். 1929-ம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் இன்று வரை, மயிலிட்டி. திரு. சி. சுவாமிநாதன் B. A., அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகிறுர்கள்.

திருநெல்வேலி வாசிகளால் உபகரிக்கப்பட்டதும் விலைக்கு வாங்கப்பட்டதுமான நிலத்தில் ஆறுமுகநாவலர் மண்டபம், இராமநாதன் மண்டபம் என்ற இரு கட்டடங்களில் கலாசாலை நடைபெற்று வந்தது. 1930 ம் ஆண்டில் கிணறு அமைக்க, சித்தியவான் N. கணபதிப்பிள்ளை அவர்கள் 1500 ரூபா உதவினுர்கள். இவ்வாண்டில் தெருவும் அமைக்கப்பட்டது. 1935-ம் ஆண்டில் கலாசாலை வளவிற்குள் சாதன பாடசாலை அமைக்கப்பட்டது; குழாய்மூலம் தண்ணீர் கொடுக்கும் வசதியும் செய்யப்பட்டது.

காவியபாடசாலை ஒன்றைச் சங்கம் இவ்வாண்டில் தாபித்ததால், அதில் சம்ஸ்கிருத, தமிழ் (பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புக்களும்) சிங்கள வகுப்புக்களும் நடைபெற்றன. மூன்று வருட ஆசிரியப்பயிற்சி பெற்றவர்கள், ஷ வகுப்புகளிற் கற்றுத் தேர்ச்சி பெறக்கூடியதாய் இருந்தது. இத்தகைய பாடசாலை ஒன்று இருத்தல் நலம் தருவதாகும்.

எங்கள் நூல்நிலையம், 1928-ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. 850 நூல்கள்வரை இதில் இருக்கின்றன. சைவப் பெரியார் சிலர் நூல் பல உதவியுள்ளார்கள். எங்கள் கலாசாலை தொடங்கிய சில வருட காலத்தினுள்ளே, அளப்பரிய

நன்மையைத் தமிழிற்கும் சைவத்திற்கும் செய்ததைக் கண்ணுற்ற மலாய்நாட்டு நம் சகோதரர்கள், 12,500 ரூபா கொண்டபெருநிதியைத்திரட்டி, கலாசாலைக்கெனப்புதியவோர் கட்டடத்தை 1936-ம் ஆண்டு கட்டுவித்து உதவினார்கள்.

விடுதிச்சாலைகளின் உபயோகத்திற்காக 12,500 கலன் கொள்ளக்கூடிய தண்ணீர்த்தொட்டி ஏறக்குறைய 2500ரூபா பொருட்செலவில் 1944-ம் ஆண்டு கட்டப்பெற்றது. புதுத் தொட்டிக்கேற்ற புதிய—2500 ரூபா பெறுமதியுடைய—நீரிறைக்கும் யந்திரமொன்றை 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் 1946-ம் ஆண்டு பரோபகாரமாக வழங்கினார்கள்.

எங்கள் புதிய விடுதிப் படுக்கை அறை—சுப்பிரமணிய மண்டபம்—12,500 ரூபா செலவிற் கட்டப்பட்டது. இது சை. வி. வி. சங்கத் தலைவர் டக்டர் S. சுப்பிரமணியம் அவர்கள் J. P., 'ஈழகேசரி' அதிபர் ஆகிய சைவப் பெருமக்களின் நன்கொடையின் பேறாகக் கட்டப்பெற்று, கல்வி மந்திரியவர்களால் (25-4-45 ல்) திறந்து வைக்கப்பட்டது. சை. வி. வி. சங்கத்திற்கு உதவிபுரிகின்ற பெரியார்கள் சைவ உலகின் பாராட்டுதலுக்கு என்றும் உரியவர்களாவர். மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க சைவாபிமானிகள் மேலும் மேலும் சை. வி. வி. சங்கத்தை ஆதரிப்பார்களாக.

எங்கள் கலாசாலை இதுவரை 450 பயிற்றப்பட்ட சைவாசிரியர்களைத் தமிழுலகிற்கு நல்கிவிட்டது. ஒருசமயம் 115 மாணவர்கள் பயிற்சிபெற்ற காலமும் உண்டு. இவ்வருடம் 13 மாணவர்கள் மாத்திரம் பயிற்சி பெற்று வருகிறோம்.

அடுத்த 1948-ம் ஆண்டு தொடக்கம் புதுத் திட்டப்படி புதுமுறையில் கலாசாலை நடைபெறும் என அறிகின்றோம். அது கல்வியின் பலதுறைகளிலும் முற்போக்குடையதாய் மிளிருமென்று சொல்லப்படுகிறது. வாழ்க கலாசாலை!

அன்று நாவலர் பெருமானும், அருணாசல உபாத்தியாயரும் கண்ட கனவு—கொண்ட எண்ணம்—இன்று நனவா

யிற்று. சைவ வித்தியா விருத்திச் சங்கம் காரணகர்த்தா வாயிற்று. அது நமது வாழ்த்தையும், சைவர்கள் வாழ்த்தையும் பெறுக.

பொங்குந் தமிழ் மணம்! எங்கும் சிவமயம்!

❊

## 'நாவலர் கண்ட கனவு'

''நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கள் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணம் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையரு முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்''

❊

''கிறீஸ்தவர்கள் யாழ்ப்பாணத்துப் பள்ளிக்கூடங்களெல்லாந் தங்கள் ஆதிக்கத்திலிருந்த காலத்திலே சைவர்கள் ஆசிரியர்களாகாதவாறு ஐந்தாம் வகுப்புக்கு மேலே கிராமப் பள்ளிக்கூடங்களிலே வகுப்புக்கள் வையாமலும், தங்கள் ஆசிரிய கலாசாலைகளிலே சேருகிறவர்களைக் கிறிஸ்தவர்களாக்கியும், தங்கள் நோக்கங்களை நிறைவேற்றுதற்கே அநாதசாலைகள், விடுதிப்பெண் பாடசாலைகளைத் தாபித்தும் நன்ருகப் பல்லிலே பட்டவர்கள். ஏகபோகமாய் வாழ்ந்த இவர்களுக்குச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் முளைத்து, சைவாசிரிய கலாசாலையைத் தாபித்துச் சைவ ஆசிரியர்களைச் சிருஷ்டிப்பதையும், சைவப்பள்ளிக்கூடங்கள் தாபிப்பதையும், சைவ ஆண் பெண் அநாத சாலைகளை நடத்துவதையும் சகிக்க முடியவில்லை.''

— ஸ்ரீ. சு. இராசரத்தினம்

சை. வி. வி. ச. வெளியீடு.

சைவ வித்தியா விருத்திச் சங்க
வித்தியாசாலைகளின் "மனேஜர்"



திரு. ச. அக்ஷலிங்கம் அவர்கள்

# * இலக்கியம் கற்பித்தல்

## 1. இலக்கியம் இன்னதென்பது :—

மனித இலக்ஷியங்களைச் சொல்லுவதற் கெழுந்த நூல் வகைகள் பல. அவைதாம் சாத்திரமென்றும் தோத்திர மென்றும் நீதியென்றும் பல துறைப்பட்டன. அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு இலக்கியமென்றே பெயர். இலக்ஷியம் என்ற வடமொழி தமிழில் இலக்கியம் என வழங்கும். இலக்ஷி யத்தைப் பூர்த்தி செய்வதில் ஏனையவற்றிலும் பார்க்க இணை யின்றி உயர்ந்தமையின் இப்பெயர் எய்திற்றுப்போலும். அன்றி, நீதிநூல் முதலியன ஒவ்வொரு சாராருக்கே பயன் படுகின்றன. இது பெரும்பாலாருக்கு (யாவருக்கும் என்று கூடச் சொல்லலாம்)ப் பயன்படுகின்றது. இன்னும், இனிதாக வும் எளிதாகவும் பயன்படுகின்றது. இந்தக் காரணங்களா லும் இந்தவகை இலக்கிய மென்ற பெயர் எய்திற்று எனலாம்.

இலக்கியம் - இலக்கு - நோக்கம் என்பன ஒரு கருத் துடையன. இலக்ஷியத்தைப் பூர்த்தி செய்வதில் ஏனைய நூல் வகைகளிலும், இலக்கியம் தனக்கு இணையில்லாதது என்றபடி.

பால் இனிதாயிருந்துகொண்டே மருந்துமாகிறது போல, இலக்கியம் இனிதாயிருந்துகொண்டே இலக்ஷியத்தைப் பூர்த்தி செய்கிறது.

## 2. இலக்கிய நோக்கம் :—

அழகுக் கூடாக உண்மையை யநுபவிக்கச் செய்வது. அநுபவித்தல் என்பதைத் திரிகரணங்களுமொத்து நுகருதல் அல்லது சுவைத்தல் என்று சொல்லலாம். இங்கே உண்மை யென்றது இலக்ஷியத்தை. நித்தியமான – சிறந்த இலக்ஷியம் உண்மை வடிவாயிருக்கும்; அழிவில்லாதது. அழகு அப் படிப்பட்ட உண்மையைப் பற்றியிருப்பது; அதனின் வேறு காதது; இயற்கையானது. இயற்கை யழகே யழகு.

---

*இது, பண்டிதர், சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய விரி வுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட சில குறிப்புகளின் தொகுதி.—ப. ர்.

உண்மையை நுகர்தற்கண் எழும் சுவைகளில் எட்டு வகையுண்டு. ஒவ்வொரு சுவைக்கும் ஒவ்வொரு மெய்ப்பாடுண்டு. மெய்ப்பாடு வெளித்தோற்றம். இது இன்ன சுவையை நுகருகிறான் என்பதை யறிதற்கு உபகாரமானது. மெய்ப்பாடும் எட்டுவகை.

சுவைகள் அநுபவித்தற்குரியவைகள். சந்திரமதி புலம்பல் கண்ணீர்விட்டு அழுதற்குரியது. இங்ஙனமே சிறுத்தொண்டர் பிள்ளையை யறுத்தது — தருமர் துகிலுரியப் பொறுத்தது — கண்ணப்பர் கண்ணப்பியது — இராமர் "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என்றது — அரிச்சந்திரன் "கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலேன்" என்றது — நளன் தூதுபோனது — கன்னன் கவசகுண்டலமீந்தது — வள்ளலொருவன் ஔவையிடம் வழிபறி செய்தது — இவையெல்லாம் வெவ்வேறு சுவைகள் மெய்ப்பாடுகளுடன் நுகரவேண்டியவைகள்; உண்மைகள் — இலக்ஷியங்கள். இந்த உண்மைகளைப் பொதிந்திருப்பவைகள் அழகுகள் (நடையமைதிகள்). அவைதாம் அம்மை முதலிய எண்வகை வனப்புப்போலும்.

கடற்கரைப்பூண்டு காற்றுக்கசைந்தது — வானம்பாடி கீதமிசைத்தது — கரிக்குருவி காலையிற் கத்தியது — மயில் தோகைவிரித்தாடுவது — கிளி சொன்னதைச் சொல்வது — சந்திர சூரியர் தோன்றி மறைவது — அருவி பாய்ந்தோடுவது — இவைகள் நுகரவேண்டியவைகளுக்கு உபகாரமாகும் போது, பூவோடு சேர்ந்த நாரும் சிறப்பாவது போல, தாமும் இலக்கியமாகின்றன. தனித்தவழி அவை இலக்கியமாதலில்லை.

"முதல் கரு உரிகள் முறை சிறந்தன" என்பது தொல்காப்பியம். உரி கண்போன்றது. முதல் கருக்கள் கண்ணினைக் காக்கின்ற இமைகள். கண்ணே பிரதானம். உரியே நுகர்தற்குரியது. உரிதான் எண்வகைச் சுவைக்கும் உரியதாய், முதல் கரு என்ற அழகான கவசங்களைத் தரித்திருப்பது. உயிரினமைதியிற் றோன்றுவன வனப்புக்கள்.

முதல் கரு வருணனைகளையே இலக்கியமென்று கூத்தாடுவாருமுளர். அது 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்' போலும்.

## 3. இலக்கிய வடிவம் அல்லது தோற்றம் :—

புலமை யுள்ளவர்களின் பாட்டிலும், அவர்கள் எழுதிய வசனத்திலும், அவர்கள் பேச்சிலும் உருவமெடுக்கின்றது. பேச்சிலக்கியம் தோன்றி மறைவது; நிலையற்றது. மற்றவை களிற் பாட்டுப் பெரும்பான்மையானது. வசனம் சிறு பான்மையானது.

வசனங்கள் பெரும்பாலும் கருத்தறிதலுக் குரியவைகள். அவைகள் இலக்கியங்களல்ல. அவ்வாறே பாட்டுக்களிலும் இலக்கியமல்லாதவைகளு முண்டு. புலமையற்ற வித்துவான்க ளியற்றிய பாட்டுக்கள் அப்படிப்பட்டவைகள். சொல்விற்பத் திக்குரிய அந்தாதி, சிலேடைகளும் இலக்கிய வரிசையிற் சேராதன.

திருவள்ளுவர் உயர்ந்த இலக்கியம். ஆனால், எல்லாரா லும் ரசிக்கக் கூடியதன்று. சொல்லுவோர், படிப்போரின் (கேட்போர்) பேதத்தால், அது இலக்கியமல்லாத நீதிநூல் என்ற பிரிவைச் சேர்ந்திருக்கின்றது. கம்பர் எல்லாரும் ரசிக்குமிலக்கியம். அதனாலே வள்ளுவர் அதிற் குறைந்த தென்று கருத்தல்ல.

பாட்டெல்லாம் இலக்கிய மென்றொரு எண்ணம் இப் பொழுது நிலவுகின்றது. இது தவறு. இலக்கியங்களெல்லாம் பாட்டுக்களுமல்ல; பாட்டுக்களெல்லாம் இலக்கியங்களுமல்ல. வசனத்திலும் இலக்கியமுண்டு; இலக்கியமல்லாத பாட்டுக் களுமுண்டு. இலக்கியம் படிப்பிக்கும் முறை வேறு. இலக் கியமல்லாத பாட்டுப் படிப்பிக்கும் முறை வேறு.

## 4. இலக்கியப் பிரிவும் தெரிவும் :—

பாலர்வகுப்பு இலக்கியம், கீழ்வகுப்பு இலக்கியம், மேல் வகுப்பு இலக்கியம் என இலக்கியத்தை மூன்று பிரிவு செய்து கொள்ளலாம். இனித் தெரிவு.

இலக்கிய ஆசிரியர் நல்ல இலக்கியங்களில், உயிரான சிறந்த பகுதிகள் — நல்ல வருணனைகள் — புலவர்களின் சீவியத்தில் நூதனமான பகுதிகள் தொகுத்து வைத்திருக்க வேண்டும். நாட்டுப் பாடல்கள், பள்ளு முதலிய பிற்கால

பிரபந்தவகைகள் உயர்ந்த இலக்கியங்க ளாகாமலிருக்கலாம். ஆனால் சந்தவின்பம், சொற்சித்திரம், ஓவிய இயற்கை, சாதாரண அழகு பொதிந்தவை. அவைகளில் ஒழுக்கக் கேட்டை விளையாத பாடல்கள் தெரிந்து கொள்ளலாம். இக்காலத்தில் இசைத் தட்டுக்களிலும், சினிமாக்களிலும், சாதாரண — கீழ்தர உணர்ச்சிகளைக் கிளர்ச்சி செய்யும் பாடல்கள், சம்பாஷணைகள் வெளிவருகின்றன. சிற்றின்பக் கீர்த்தனங்கள் பல. அவை விலக்கப்பட வேண்டியவை. அப்படிப்பட்டவைகள் ஆசிரியர் படிப்பியாமலே பிள்ளைகளை அணுகி விடுகின்றன. அவற்றிற் பிள்ளைகளுக்கு அவர்க ளறியாமலே ஈடுபாடு முண்டாய்விடுகிறது. வாய், முன்பின் பாராமற் பாடிவிடுகின்றது. இது சகவாச தோஷத்தால் வருவது. இதி லாசிரியர் சாவதானமா யிருக்கக்கடவர்.

ஆசிரியரின் தெரிவுகள் அவருக்குப் பிடிப்பானவைகள். அவைகளெல்லாம் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப் பொருந்தா. படிப்பிக்கிறதற்குப் பிள்ளைகளின் வயசு, அநுபவம், விவேகம், சுவை — இவைகளுக்கு இயையப் பிறகு ஒரு தெரிவு நடாத்த வேண்டும்.

பாலர்கள், சந்தவின்பம் — சொற்சித்திரம் (அஃதாவது எதுகை மோனை யடுக்குகள்) — இவற்றிலார்வமுடையர். சொற்கள் அவர்கள் ஆட்சிக்குட்பட்டனவாய் — திருத்த மானவையாய் — வெளிப்படையானவையாய்—எளியனவாய்— கருத்துத் தெளிவானவையா யிருக்கவேண்டும். தாளக்கட்டும், அபிநயமுமே கருத்தை வெளிப்படுத்தக் கூடியனவாதல்வேண்டும். கருத்தாழம், கருகல், கடின சொல்லுள்ளவை விலக்கப் படல்வேண்டும்.

பிரதான விஷயம் ஒன்று: பாட்டு, சொல்லும் பொருளும் ஓசையும் ஒத்துமுடிகின்ற கனிந்த புலவர்களின் பாடல் களா யிருத்தல்வேண்டும். அவர்கள்தாமும் பாலர்களுக் கென்று பாடாமல், அவர்கள் பாடியவைகளில் பாலர்களுக் கேற்றனவென்று தெரிந்தவைகளாதல்வேண்டும். மாசு மறு வற்ற இயற்கைப்பாடல்க ளாதல்வேண்டும்.

இக்காலத்திலே எண்ணிறந்த பாடல்கள், இலக்கியக் கதைகள் பத்திரிகைகள் தோறும் பாலர்களுக்கென்று வந்து

குவிகின்றன. பாலர் பகுதியென்றொரு பகுதி பத்திரிகைகளில் ஒதுக்கி வைக்கப்படுகின்றது. பாலர்மலர்களென்று தனிப் பத்திரிகைகள், புத்தகங்களும் வருகின்றன. பிள்ளைப்பாடல்களென்று சில பதிப்புகளுமுண்டு. இவைகளெல்லாம் ஆசிரியருக்கு உதவியானவை. இவைகளிற் றெரியக்கூடியவை பத்து வீதத்துக்கு மேலிருப்பது அரிது. ஆசிரியர் அவைகளை அப்படியே பாலர்கள் முன்னிலையிற் கொட்டிவிடாது, கண்ணப்பர்போல் அவைகளை மென்று தின்று சுவைத்து, செவிக்கும் நாவுக்கும், மனசுக்கும் இனியவைகளைத் தெரிந்து, படிப்பிக்கவேண்டும். இடைநிலை மயக்கம் விளங்காமல், 'வில்த்திறன்' என்று எழுதும் காலமிது. சொன்னிலை மயக்கம் — அஃதாவது தொடர்களிற் சொற்களிணைசையினையபு — இதனை உணர்வதெங்ஙனம்? அன்றி, இந்தப் பொருளுக்கு ஏற்ற சொல்லிது என்று அறிவதெப்படி? இவையொன்று மறியாதவர்கள் இழுக்குடைய பாட்டுக்களைப் பண்ணிவிடுகிறார்கள். அவற்றை இசையால் மூடிக்கட்டவும் முயற்சிக்கிறார்கள். இது, அழகு கெட்ட ஒருத்தியை இரவல் நகையால் அலங்கரிப்பதாயிருக்கும். இப்படிப்பட்ட பாடல்கள் பிள்ளைகளின் இளஞ் செவியையும் நாவையும் கெடுத்துவிடும். பிற்காலத்திலிவர்களுக்குச் செக்கும் சிவலிங்கமும் சரியாய்விடும். பாலர்களுக்குப் பாட்டுத் தெரிவது மிகக் கடினமானதொரு வேலையென்பதை ஆசிரியர்கள் உணரக்கடவர்கள்.

பாலப்பருவத்துக்கு மேற்பட்ட கீழ்வகுப்பாருக்கும் ஷெ இலக்ஷணங்களெல்லாம் பொருந்தும். அதனோடு அவர்கள் சாதாரண பொருளமைப்பையும் ரசிக்கக்கூடியவர்கள். காளமேகம், ஔவையார், புகழேந்தி முதலியவர்களின் தனிப் பாடல்களை நன்கு சுவைப்பார்கள். பள்ளு முதலிய பிரபந்த வகைகளிலும் இவர்கள் சுவைக்கக்கூடிய அநேக பாடல்களுண்டு.

மேல் வகுப்புக்களுக்குப் பொருள் சிறிது ஆழமாகலாம்; உயர்ந்த பாத்திரங்களின் குணவிசேஷங்களாகலாம். மனத்திற் பதிந்து சிந்தனையைக் கிளர்ச்சிசெய்வனவாதல்வேண்டும். இவை சாதாரண உணர்ச்சியைக் கிளர்ச்சிசெய்யும் கீழ்தர பாடல்களில் வேறுபட்ட, உயர்தர சாதியைச்சேர்ந்த, உத்தம ரத்தினங்கள் என்ற உணர்ச்சியைத் தருவனவாதல் வேண்டும்.

ஒருகாலத்தில், கீழ்தர பாடல்களிற் றீண்ட அருவருப்பு விளை விக்கக்கூடியன வாதல் வேண்டும்.

இவை, கம்பராமாயணம், பாரதம் — இவைகளிற் சில சந்தர்ப்பங்கள், நல்லவருணனைகள், சங்கப்பாட்டுகளில் விளங் கக்கூடியவைகளாகலாம்.

மேல்வகுப்பு மாணவர்கள், புலவர்களையும் பாடல்களை யும் இலக்கியங்களையும் தாரதம்மியங்கள் தெரிந்து நிறுக்கும் தராசுகளாதல் வேண்டும். புலவர்களின் சீவியம், இலக்கிய விமர்சனம் இவர்களின் வசன இலக்கியமாகலாம்.

## 5. இலக்கியம் ஏன் படிப்பிக்கவேண்டும்?—

அழகுக்கூடாக உண்மையைச் சுவைக்கும் சக்தியை விருத்தி செய்வதற்காகத்தான் படிப்பிக்கவேண்டும். உண் மையை நுகர்தல்தானே மனித லக்ஷியம். தூய அழகு உண் மையின் பிரதிவிம்பம். உண்மை ஒளி. அழகு அதன் பிர காசம். அழகை—அஃதாவது உண்மையை—எவ்வளவு தூரம் நுகர மாணவன் பயின்றிருக்கின்றான் என்பதுதான் இலக்கி யக் கல்வியின் பயன்.

## 6. இலக்கிய ஆசிரியன் :—

மயக்கந் தெளியாத பூரண குடிகாரனோடு இலக்கிய ஆசிரியனை ஒப்பிடலாம். இவனுடைய குடி இலக்கியக் குடி. எந்தப் புஷ்பத்தில் சிறிது மது இன்னும் சேர்க்கலாமென்று தேடியலையும் வண்டாயும் அல்லது தேனீயாயு மிருப்பான். அவனுடைய கீதம் இலக்கிய கீதம். அவனுடைய களி இலக் கியக் களி. அவன் நாயா யிரான்; காக்கையா யிருப்பான். "காக்கை கரவா கரைந்துண்ணும்." இந்த இலக்கியக் குடி காரனுக்குக் கூடிக் குடிப்பதிலே ஆர்வம். புதியதொரு மது கிடைத்துவிட்டால், அவன் குதித்துக் கூத்தாடி, தன் குழுவை யழைத்து, கூடிக் குடிப்பான். அவனுக்குப் புதுப் புது இலக் கியமே உணவு; அதுவே தண்ணீர். இலக்கியந்தான் அவன் சுவாசம். அவன் செவிகள் இலக்கியமல்லாதவைகளைக் கேட் டாற் செவிடாய்விடும். அவன் நா இலக்கியமல்லாதவைகளைக் கண்டால் ஊமையாய்விடும். ஒருதரம்தாலும் உச்சரிக்க

மாட்டாது. கண்கள் இலக்கியமல்லாத காட்சிகளைக் காண மாட்டா.

நல்ல கருத்துக்களையும், அதற்கு அதுதானென்று சொல்லத்தக்க பாடல்களையும் சுண்டிப்பார்த்து எடுக்கக்கூடியவன். பாட்டில் உயிர் துடிக்குமிடத்தைச் சுட்டிக் காட்டத்தக்கவன். பாட்டுக்கேற்ற ஓசை, தாளத்துக்கேற்ற ஆட்டம் கைவந்தவன்.

சரி, இனிக் கிராமப் பள்ளிக்கூடத்துக்குப் போவோம். அங்கே, ஒரு உபாத்தியாயரும், ஐந்து வகுப்புகளுமிருக்கும். எல்லாப் பாடத்திற்கும் ஆசிரியர் அவர்தான். அவர் இலக்கியப் பாட்டிலே, சரித்திரம்—பூமிசாஸ்திரம்—சுகாதாரம்—கணிதம்—எழுவாய் பயனிலை—பகுபதமுடிவு—எல்லாம் படிப்பித்து இறுமாப்போடு இருப்பார். அவர் ஒரேயொரு குறைதான் செய்திருப்பார். அது, இலக்கிய பாடத்திலே இலக்கியம் படிப்பியாமை. அவரிடம் அகப்பட்ட இலக்கியமும், குறிச்சிபுக்க மான்போல எறியும் குத்தும் அடியும் பட்டு, படுகாயங்களோடு பிணமாய்க் கிடக்கும். மாணவர்கள் பாவம்! தென்னுலிராமன் வளர்த்த பூனைக்குட்டிபோல, பாலைப் பார்த்துக்கொண்டே முனகுவார்கள்.

இதுதான் இப்பொழுது சீர்திருந்திய நகர பாடசாலைகளிலும் நடக்கின்றது. உபாத்தித் தொழில் வயிறு கழுவுகிற தொழில்; சுகமாக வருமானம் பண்ணுகிற தொழில். மூளை விருத்தியில்லாதவர்கள் — வேலையற்றவர்கள் — வேறு வசதியில்லாதவர்கள், கோவிற் குருக்களாய்ப் போகிருர்கள் அல்லது உபாத்தியாயர்களாய் வருகின்ருர்கள். இலக்கிய 'மேட்டர்' இப்பொழுது பள்ளிகளில் நடக்கிறது.

ஆசிரிய கலாசாலைகளிலே, சர்க்கரையை வாயிற் போடுவதில்லை. ஆனுல், அதன் குணதோஷம் ஆராயப்படுகிறது; அவ்வளவுந்தான். பயிற்றப்பட்ட அந்த உத்தமாசிரியன்—வித்தியாபகுதியா லங்கீகரிக்கப்பட்ட அவன்—தனது நாட்டாண்மையினுலே, ஒரு பள்ளிக்கூடத்தைச் சுவீகரித்துக்கொண்டு, இருப்பைப்பூவைச் சர்க்கரையென்கிருன். அவனையசைக்க ஆராலும் முடியாது. அவனுக்கங்கே ஆடும். அந்தக் கிராமசனங்கள், தங்கள் அருமைக் குழந்தைகளை அவனுக்காக

அக்கினியில் ஓமஞ்செய்யத் தயாராயிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் ஒரு பகன் எங்கேயோ ஒரு ஊரிலிருந்தாலும். இது பழைய பாரதம். இந்தப் புதிய பாரதத்தில், எல்லாப் பள்ளிகளிலும் எண்ணிறந்த பகர்களிருக்கின்றார்கள். எத்தனையோ கலாசாலைகள் அவர்களை உற்பத்திசெய்து தள்ளுகின்றன.

புலவன் பிறக்கிறான் அப்படியே இலக்கிய ஆசிரியனும் பிறக்கிறான். அவனைத் தேடிப் பிடிப்பது வித்தியாபகுதியின் கடன். அவன் வித்தியாபகுதியைத் தேடிப் பிடிப்பதில்லை.

## 7. இலக்கியத்தை முகஞ் செய்தல் :—

காதலர் இருவரைத் தோழி சந்திக்கச்செய்கிறாள். அவர்கள் சந்திக்கிறார்கள். அப்பால் அவள் விலகிவிடுகின்றாள். யுத்தமுனையிற் சந்து செய்பவர்கள்போல் அவள் இடைநடுவில் நிற்பதில்லை. இங்ஙனமே இலக்கிய ஆசிரியனும் புலவனுக்கும் மாணவனுக்குமிடையில் நிற்பதில்லை; சந்திக்கச் செய்கிற அவ்வளவே செய்கிறான். பின் அவர்கள் தங்களுக்குட் பேசிக்கொள்வார்கள்.

சிலர் முன்னுரை என்று பெரிய பிரசங்கஞ் செய்துவிடுகிறார்கள். அதைக்கேட்ட பிள்ளைகள் பாட்டைப் பார்க்க முன்னமே அவ்விஷயத்தில் துறவு பூண்டுவிடுகிறார்கள். ஆசிரியன் புலமையுள்ளவனாயிருந்தால், அவனுடைய முன்னுரை இனிவரும் பாட்டோடு எடை குறையாமலிருக்கும். மாணவன் வெறுக்கான். இப்படிப்பட்ட முன்னுரையை விலக்குவாரில்லை. இலக்கியம் படிப்பிக்கிறவர்களெல்லாம் புலமையுள்ளவர்களல்ல. புலமையுள்ளவர்களுக்கு முறையில்லை. அவர்கள் படிப்பிப்பதுதான் முறை. முறை சாதாரணமானவர்களுக்கு. சாதாரணமானவர்கள் முன்னுரையில்லாமலே பாட்டைக் காட்டி, அவர்கள் அவதானித்ததன்மேல், சந்தர்ப்பம் முதலியவைகளை அப்பிள்ளைகளின் வயாத்திரும் வாயிலறிந்து நடத்தலாம்.

## 8. வாசிப்பு :—

இலக்கியம் சமன் செய்யுள். அது இசை வடிவம். கற்கண்டைக் கண்ணுற் சுவைக்க முடியாது. அவ்வாறு இலக்கியச் செய்யுளை மௌனமாய்க் கண்ணுற் பார்த்துச் சுவைக்க

முடியாது; காதாற் சுவைக்க வேண்டும். ஒருவர் பாடக் கேட்டுச் சுவைக்கலாம்; அல்லது பாடிச் சுவைக்கலாம். இசைத்தட்டை யாராவது கண்ணுற் பார்த்து மகிழ்வதுண்டா? பாட்டுக்கள் இசைத் தட்டுக்கள்.

உபாத்தியாயரே வாசித்துக்காட்டவேண்டும். பாத்திரங் களி னியல்பும், உணர்ச்சியும் குரலிற் ருேன்றவேண்டும். வாசிக்கிறவருக்கு, தமது வாசிப்பில் மகா நம்பிக்கை — ஈடுபாடு இருக்கவேண்டும்.

வாசிக்கிற வேலை, கேட்கிறவர்களின் இருதயத்தைக் கிளறுகிற — உயர்த்துகிற — உற்சாகத்தைக் கொடுக்கிற உயர்ந்த படியிலுள்ள வேலை; சாதாரண வேலையன்று.

'ரைக்கர்' வரதாச்சாரிக்குக் குரல் கூடாது. அவருடைய இருதயத்தில் பாட்டுக்கள் முழுகியிருக்கும். கேட்கிறவர்களும் பரவசமடைந்து விடுகிருர்கள். குரல் உயராத, வளையாத இடங்களில் வரதாச்சாரியின் கைகள், விரல்கள் பூர்த்தி செய்து விடுகின்றன.

வாசிக்கிற வேலை, இலக்கியம் படிப்பித்தலிற் பாதி வேலை. இந்த வேலையோடொப்பிட்டால் பாடக் குறிப்பும் மிகுதி வேலையும் சூனியமாம். வாசிக்கிற வேலையினுல் கேட்போருக்கு இலக்கியத்தில் நேசமுண்டாய் விடுகிறது. இந்த நேசத்தைப் பலப்படுத்தி—விஸ்தாரப்படுத்தி—ஆழப்படுத்தி விடுவதுதான் அடுத்த வேலை.

**9 பொருள் விளக்கம் அல்லது கரு உருவாதல்:—**

வாசிப்பைக் கேட்டதனுல்—அதன் முன்னும் பின்னும் அவதானிப்பதனுல் பாட்டுச் சம்பந்தமாக உள்ளத்தில் ஒரு கருவுண்டாகும். அந்தப் பாட்டு அக்கருவிற் சிறிது ஊற வேண்டும். பாட்டு உள்ளத்தி லூறியபோது, பிள்ளை அபிப்பிராயங் கொள்ளுமுன் வியாக்கியானஞ் செய்வது பெரிய அநர்த்தம். ஊறியதன்மேல், பாட்டின் கருத்து உருவங் கொள்ளவேண்டும். உருவம் கை—கால்—மூக்கு என்று தோன்ருமல், முழு உருவமாகத் தோன்றவேண்டும். உறுப்புறுப்பாகச் சிதைக்கக்கூடாது. உருவம் அழிந்துபோம். பிண்டமாக உருவம் தோன்றுதற்கு உபகரிக்கவேண்டும்.

முதலாம் உபகாரம் சந்தர்ப்பம் கூறல். தாடகையின் கண்களில் நெருப்பு எரிகிறது. ஒரு மலை புடைபெயர்ந்து வருவதுபோல எதிரில் வருகின்றாள் தாடகை. அவளுடைய சரித்திரத்தைத்தான் விசுவாமித்திர முனிவர் சொல்லிக் கொண்டு எதிரில் வருகின்றார். ஸ்ரீராமன் அந்த ஆச்சரிய உருவத்தைப் பார்க்கிறான். முனிவர் அவனுடைய வில்லை எதிர் பார்க்கின்றார். அப்பால் என்ன நடக்கின்றது?

"அண்ணன்முனி வற்கது கருத்தெனினு மாவி
யுண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழி ருடங்கியுள ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்.
(கம்பர் - தாடகைவதம் – 53.)

சந்தர்ப்பத்தை விஸ்தரிக்க இடையிடையேயும் சில வினாக்கள் வினவலாம். இப்போது பிள்ளைகளுடைய மனசிலே ஒருகாடு — அதிலொரு சந்திப்பு — ஒருபுறம் தாடகை — மறுபுறம் விசுவாமித்திரர், ராமலக்ஷுவர் — என்ற படம் மனத்திலுண்டாகும். அப்பால், இறுதி வினாவிலிருந்து பாட்டின் கருத்து ஒரு உருவம் கொள்ள ஆரம்பிக்கும்.

பாட்டின் கருத்து உருவமடைதற்குச் சந்தர்ப்பங் கூறுதல் பிரதான அம்சம். இது இலக்கியப் போக்குடையதாய் — சுருங்கிய நேரத்தில் முடிவதாயிருக்கவேண்டும். இச் சந்தர்ப்பம் மாணவரை மற்றொரு உலகத்திற்கு — அஃதாவது இலக்கிய உலகத்திற்கு — கற்பனையுலகெனினுமமையும் — கொண்டு செல்வதென்பதை மறக்கக் கூடாது. வாசிப்பில் முளைகொண்ட விதை, இப்பொழுது சிறிது வளர்ந்து தலைகாட்ட ஆரம்பிக்கிறது. ஆயினும் அது ஒரு நிழல் மாத்திரையே; பலமின்றி மிருதுவாயிருக்கின்றது. அதற்குப் போதிய பெலம் வேண்டும்.

இரண்டாம் உபகாரம் அதற்குப் பெலத்தைக் கொடுப்பது. அதுதான் பிண்டப் பொழிப்பு. இராமன் என்ன செய்கிறான்? என்ன செய்யவேண்டும்? அவள் எப்படிப் பட்டவள்? முனிவர் கருத்தென்ன? கணை தொடுக்காத காரணமென்ன? என்ற வினாக்கள் மூலம் அந்த உருவம் பெலமடைந்து வெளிவரலாம். ஒவ்வொரு வினாவையும் வினா

வும்போது, உபாத்தியாயர், விடைக்குரிய பகுதியை இசை யுடன் படித்துப் படித்து வினவலாம். சில சமயம் குறித்த பகுதியை மாணவன் இசையோடு விடையாகவும் வாசிக்க லாம். இந்த வாசிப்பு, உருவத்தைப் பெலப்படுத்தும்போதும் சுவை குன்றுதிருத்தற்கு உபகாரமானது. இனி, பிள்ளைகள் சம்பவத்தைச் சுருக்கிச் சொல்ல முடியும்.

மூன்றும் உபகாரம் விஸ்தாரப்படுத்துதல். அஃதாவது ஒடி பிண்டப் பொழிப்பை விசாலப்படுத்துதல். அந்நுவயம் வேண்டுமானாற் செய்தும், வாக்கிய விபாகம் செய்தும் வாசித்து, கருத்து விசாலித்தற்கு உபகாரமாகத் தொடர் களை விரிக்கும்படி வினவியும், அரும்பதங்கள் விசேடணங் களை வினவியும் சுவை சிதருமலே விஸ்தரிக்கப்படும்.

இனி, நயம்; அழகையும் அதற்கூடாக உண்மையையும் ஆழ்ந்து அநுபவித்தல். இங்கே ஸ்ரீராமனுக்கு வழங்கிய பெயர் யாது? ஏன் அப்பெயர் வழங்கிற்று? முனிவருக்குக் கொடுத்த விசேடணம் யாது? இவ்விஷயத்தில் இருவரும் நிரபராதிகளாதல் யாங்ஙனம்? என்ற வினுக்களை எழுப்பி, ஆழ்ந்து சிந்திக்கச் செய்வதால், உண்மையின் பெருமையும்—அது குறித்த சொற்கள் தொடர்களின் அருமையும் புலனுகும்.

இங்ஙனம் வேறு சந்தர்ப்பங்களைக் காட்டுவதாலும் இந்த நயங்கள் ஸ்திரமாகலாம். இன்னும், பாத்திரங்களின் குண தோஷங்களை யாராய்தல், வேறு பாத்திரங்களோடு ஒப்பிடல், உலகியலோடு நோக்கல், புலவர்கள் ஒரு விஷயத்தைப் பல வாறு கூறிய சந்தர்ப்பங்களின் தாரதம்மியங்களை யாராய் தல், யாப்பமைதி — அணியமைதிகளை யாராய்தல் முதலிய வற்ருல் நயமூற்றெடுத்துப் பெருகலாம். இதன்மேல், கருத் தும் நயமுந் தோன்ற, ஆசிரியரைத் தொடர்ந்து மாணவர் கள் வாசிக்கலாம். பாத்திரங்களின் குண தோஷங்கள், சொல் தொடர்களின் அழகுகள் இவற்றையும் வெளியிடலாம் இவை பதித்தலாகும்.

பாத்திரங்களின் குணதோஷங்களை யாராய்ந்து கட்டுரை யெழுதல், புலவர்களை யொப்பிட்டு ஆராய்தல் முதலியன பிரயோகமாகலாம்.

10. இப்பொழுதைய தவறுகள் :—

1. ஆசிரியருக்கு அவிச்சுவையன்றிக் கவிச்சுவையில்லை.

2. இலக்கியத்தெரிவு கிடையாது; புலவர்களின் சீவியம் நன்கு தெரியாது.

3. பாட்டுக்கள் சுவைத்தல் தவிர்ந்த கிருத்தியங்களுக்குபயோகிக்கப்படுகின்றன.

4. உபாத்தியாயருக்குப் பாட்டு வாசிக்கத் தெரியாது.

5. தமக்குச் சுவையின்றிச் சுவைப்பிக்க முயலல். இது, வெறும்பானை பொங்குவதாயிருக்கும்.

6. உபாத்தியாயருக்குத் தன்னம்பிக்கையில்லை.

7. தமிழில் சுவையுள்ள பாட்டு இருக்காதென்ற தப்பெண்ணம்.

8. வாசிப்புக்குறைவு — இன்னோரன்ன.

❋

"இந்துக்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வி எத்தகையதாகும் என்பதை முடிவுசெய்யும் உரிமையுடையீர். அதற்காகச் 'சைவ வித்தியாவிருத்திச் சங்க'மொன்றையும் வைத்திருக்கிறீர்கள் என்பது எனக்குச் சந்தோஷம். அச் சங்கத்தை நன்னோக்கத்துடன் உறுதியடையச் செய்வீர்கள் என்பது எனது விருப்பம். அப்படிச் செய்யுங்கால் மற்றைய கிறீஸ்தவ வித்தியாசாலைகளுடன் முரணடைந்து சண்டை செய்யவேண்டியதில்லை. உங்கள் வித்தியாசாலைகளில் தக்க உபகரணங்களை நிறுவி, சிறந்த தகுதிவாய்ந்த ஆசிரியர்களையும் நியமிப்பின், எவ்வித கஷ்டமுமின்றித் தாமாகவே சைவ மாணவர்கள் கல்வி கற்க அங்கு வருவார்கள்"

—மகாத்மா காந்தி

# காவியமும் ஓவியமும்

(ஐ. சிவசம்பு)

காவியம் சொல்லோவியம் அதைப் படிக்கும்போதே உள்ளத்தில் ஓவியக் காட்சி தானே அமைகிறது. உருவம் இல்லாத பொருள்களையும் உணர்ச்சிகளையும் உணரும்படி செய்துவிடுகிறது. உலகிற் காணும் பொருள்களின் குறைபாடுகளைப் போக்கி அதற்கு ஓர் அழகை ஊட்டி நித்தியத்துவத்தைத் தருவதில் காவியமும் ஓவியமும் ஒரே நிலையில் நிற்பவை. இரண்டும் வெறும் உருவத்தை மாத்திரம் காட்டுவதோடு நில்லாமல் உணர்ச்சிகளையும் காட்டும்போது சிறப்பையடைகின்றன.

புலன்களால் நுகரும் இன்பத்தை உதவும் ஏனைய பொருள்களைக் காட்டிலும், நேரே உள்ளத்தால் நுகர்ந்து இன்புறும் கவிதை, போகப் பொருள்களிலெல்லாம் தலைசிறந்தது. பொன்னின் சோதியிலும், பூவினது நறுமணத்திலும், தேனினது சுவையிலும் மயங்காதவர் எத்தனையோ பேரைச் செஞ்சொற்கவியின்பம் மயக்குவதைக் காணலாம். மது கலசத்தையும் பெண்ணணங்கையும் இன்ப வாழ்க்கைக் குறுதுணையாக வேண்டும் உமர்காயமும், காணிநிலமும், பத்துப் பன்னிரண்டு தென்னைமரமும், பத்தினிப் பெண்ணும் வேண்டுகின்ற பாரதியும் அவ்வின்பப் பொருள்களை இன்பமுடையனவாக ஆக்கக் கவிதையையும் வேண்டுகின்றார்கள். கவிதைதான் இன்ப வாழ்க்கைக்கு உயிர். மக்கள் தமக்கு எந்த எந்தப் பொருள்களால் இன்பம் கிடைக்கும் என்றெண்ணிப் பெருமுயற்சி செய்கிறார்களோ, அந்தப் பொருள்கள் சில சமயங்களில் தெவிட்டிவிடும் மது கலசத்தை விரும்பாத சமயமும் உண்டு. மனைவியின்பம் சலிக்கும் பொழுதும் உண்டு. இன்ப வாழ்க்கையினிடையே இந்தச் சலிப்பு ஒரு கணம் இருந்தாலும் இடையறவுபட்டுவிடும். பிறகு அது இன்ப வாழ்க்கையாகாது. ஆதலால் இடையறவுபடாத இன்பத்தை உண்டாக்க ஒரு பொருள் வேண்டும். அதுதான் கவிதை.

மது நுகர்ச்சியால் வரும் இன்பம் உள்ளபொழுதிலும் அந்த இன்பத்தை மிகுவிக்கக் கவிதை உதவுகின்றது. பெண்ணினினிமையை உணரும் செவ்வியிலும் கவிதை அவ்வினிமையை ஒன்று பத்தாகப் பெருக்குகின்றது, எல்லா இன்பங்களும் சலித்துப்போன நிலையிலும் தானே தனிநின்று இன்பத்தை உண்டாக்குகின்றது கவிதை. அந்த இன்பத்துக்குச் சலிப்பு இல்லையா? இல்லை. ஆயுந்தோறும் இன்பம் தருவது கவிதை. மனித வாழ்வில் அவனுடைய குறைகளையெல்லாம் மறக்க வைப்பது கவிதை. உலகத்திலுள்ள பொருள்களின் குறைகளையெல்லாம் அழகுபடுத்திக் காட்டுவது கவிதை. துன்ப நிகழ்ச்சிகளிலுள்ள துன்பத்தை மாற்றி ரசித்து அனுபவித்தற்கேற்ற பொருளாக அவற்றை ஆக்கிவிடுவது காவியம்.

உலகில் உள்ள பாலைவனம் சுடுகிறது, நினைத்தாலும் உள்ளம் வேகுமென்று மனிதர்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் அந்தப் பாலைவனத்தைக் கவிஞன் தன் காவியத்தில் வருணித்திருக்கிறான். அவனுடைய சிருஷ்டியாகிய பாலைவனத்தில் நாம் பலகால் செல்ல எண்ணுகின்றோம். அதோடு நில்லாமல் சென்று சென்று இன்புறுகின்றோம். உலகத்தில் ஈசுவர சிருஷ்டியிலுள்ள பாலைவனத்தின் வெம்மையைப் போக்கி அதற்கு இனிமையை உண்டாக்கிவிடுகிறது கவிஞனது சிருஷ்டியாகிய காவியம்.

கவிஞனது சிருஷ்டியிலே பல மூலப் பொருள்களில்லை. உலக சிருஷ்டிக்காதாரமாக 92 மூலப் பொருள்கள் உண்டென்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். எல்லாம் பஞ்சபூதத்தின் விளைவென்று தத்துவநூல் சொல்கின்றது. ஆனால் காவிய உலகின் மூலப் பொருள்களோ இரண்டே. சொல், பொருள். அவற்றைத் தனித்தனியே பிரித்துச் சொல்வது கூடப் பிழை. சொல் என்றாலே பொருளும் உள்ளடங்கித்தான் இருக்கிறது. சொல்லின்றிக் கவிப்பிரபஞ்சத்தில் பொருள் இல்லை. பொருள் இன்றிச் சொல்லில்லை. இவ்விரண்டைக் கொண்டும் கவிஞன் அமரனைச் சிருஷ்டி செய்கிறான். அசுரனையும் காட்டுகிறான். அழுகைவருகிறது. அதன் பின் இன்பமும் இருக்கிறது.

" சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை "

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

ஓவியக் கலையும் காவியத்தைப் போன்று தனக்கென ஒரு தனியுலகத்தைக் கொண்டது. கண்ணினாலே காணப்படும் பொருளை உள்ளது உள்ளபடியே 'போட்டோ'ப் படமாகக் காட்டுவதைவிட உணர்ச்சியையும் கருத்தையும் புலப்படுத்தும் சிலவகைக் குறிப்பினால் காட்டவேண்டும் என்பது ஓவியப் புலவனது நெறி. கவிதையிலே தளிர்போல் மெலிந்த விரல்களையும், கொடிபோல் நுடங்கிய இடையையும் கண்டு அவற்றின் மென்மையை உணர்ந்துகொள்ளுகிறோம். ஆனால் ஓவியத்தில் விரல்களைச் சற்று நீளமாகவும் துவண்டனவாகவும் கண்டால் 'இது இயற்கைக்கு மாறானது' என்று சொல்லுகிறோம். கவிஞன் 'தளிர்போன்ற விரல்' என்று சொல்வதையே ஓவியப் புலவன் சித்திரத்திலே காட்டுகிறான் என்பதை நாம் சற்று ஊன்றி நோக்கி உணர்ந்தால் அதையும் அநுபவிக்க முடியும்.

நாம் நம்நாட்டுக் கலையை மறந்துவிட்டோம். அதனால் அது புதிதாகவும் இயற்கைக்கு மாறாகவும் படுகிறது. இந்திய ஓவியம் உள்ளுறைப் பொருளோடு நிற்பது. அதுதான் அதற்கு உயிர். இந்த நாட்டுச் சிற்பமும் ஓவியமும், கோலமும் கூத்தும், காவியமும் புராணமும் இந்தக் குறிப்புப் பொருளை உடையனவாக இருப்பதனால்தான் பிறநாட்டினர்க்கு விளங்காத புதிர்களாக உள்ளன. அவர்களுக்கு விளங்காதது தவறன்று. நமக்கே விளங்கவில்லையென்றால் நாம் திருந்த வேண்டுவதை விட்டு அவற்றை இகழ்வது நியாயமாகுமா?

❋

வெய்யோன்ஒளி தன்மேனியில் விரிசோதியில் மறைய
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமரக தமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோர் அழியாஅழ குடையான்.

— கம்பர்

4-ம், 5-ம் வகுப்பு மாணவர்களுக்கு :

# தசமபின்னமும் சாதாரண பின்னமும்

(வ. கந்தையா)

ஆரம்ப பாடசாலைகளிற் கற்கும் பிள்ளைகட்குப் பின்னம் என்பது பெரும்பாலும் சின்னுபின்னமாகவோ அல்லது சிதம்பரசக்கரமாகவோதான் இருந்துவருகிற தென்பதைப் பலரும் அறிவர். இது, கற்பிக்கும் முறைப்பிழையால் வந்ததே யன்றி, மாணவர்களிலுள்ள குறையால் வந்ததென்று கூற முடியாது. இந்தச் சின்னுபின்னத்தைக் கடந்துசெல்ல வகை யறியாது, உபாத்தியாயருடைய நெருக்கடிக்கு — கொடுங் கோன்மைக்கு — பயந்து பாடசாலைக்குச் செல்லாது, வீட்டுக் கும் போகாது, ஒளித்திருந்து கழிந்த நாட்கள் எத்தனை! அதற்காகப் பள்ளிக்கூடத்தையே கைவிட்டபேர்கள் எத்தனை!

ஆதலால், இத்துணை வலிமைவாய்ந்த பின்னத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். பின்னங்கள் தசமபின்னமும், சாதா ரண பின்னமும் என இருவகையின. அவற்றுட் சாதாரண பின்னம் வெகுகாலந் தொடங்கியே வழங்கி வருகின்றது. கி. மு. 1700 வரையிலிருந்த ஒரு எகிப்திய கணிதசாஸ்திரி யால் எழுதப்பட்ட சாதாரண பின்னங்களைப்பற்றிய நூல் இப்பொழுதும் இருக்கிறது. கணிதத்தில் எழுதப்பட்டதா யுள்ள அதி பழைய நூல் சாதாரண பின்னத்தைப்பற்றிய தென்றே கூறிவிடலாம். ஆனுல் தசமபின்னமோ மிகமிகப் பிந்தியது. கி. பி. 1600 வரையிலிருந்த கெப்லர் (Kepler), பேகி (Burgi) — இன்னும் பலருடைய முயற்சியினுல் ஆக்கப் பட்டது.

பின்னங்களின் வளர்ச்சி,

1. ஒன்றைத் தொகுதியாகக் கொண்ட பின்னங்கள். (Unit Fraction).

2. மற்றைய சாதாரண பின்னங்கள்.

3. தசமபின்னம்.

என்ற கிரமத்தில் வளர்ந்து வந்தது. தொடக்க காலத்தில் $\frac{47}{60}$ என்ற பின்னத்தை எழுதவேண்டில் $\frac{1}{3} + \frac{1}{4} + \frac{1}{5}$ என்று எழுதுவார்கள் போலும்.

"சாதாரண பின்னம்" என்பது "Vulgar Fraction" என்ற ஆங்கிலத் தொடரின் நேர் மொழிபெயர்ப்பாகும். (Vulgar என்பதன் பொருள் Common = சாதாரணம். Fraction = பின்னம்).

சாதாரண பின்னத்தில் முதலிற் படிப்பிக்கவேண்டியவை $\frac{1}{2}$, $\frac{1}{4}$ முதலிய பின்னங்கள். அவைகள் சிறுபிராயத்திலேயே பிள்ளைகளுக்குத் தெரியுமாதலின் $\frac{1}{2}$ இருத்தல், $\frac{1}{2}$ ரூபா, $\frac{1}{2}$ மணி, $\frac{1}{2}$ முழம், $\frac{1}{2}$ அவியல் முதலியவைகளை அவர்கள் பிறர் சொல்லக் கேட்டும், தாமே கண்டுமிருப்பார்கள். ஆதலால் அவைகளை ஆசிரியர் தக்க பருவத்தில் எடுத்துக்காட்டி விளக்குதல் வேண்டும். அதனுல் பின்னத்தின் அர்த்த விஸ்தாரம் புலப்படும். அன்றி, அரை, கால் என்ற பின்னங்களையும், உறுப்புக்களையும் ஒப்பிட்டுக் காட்டவும் வேண்டும்.

பொருள் சம கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பது பின்னங்களிலே முக்கியமானவொரு விஷயம். கூறுகள் சமமாக இல்லாவிட்டால் $\frac{1}{3}$, $\frac{3}{4}$ என்று பேசுதல் கருத்தற்றுப் போய்விடுமென்பதை, பொருள்களைச் சமமற்ற பாகங்களாகப் பிரித்துக்காட்டி விளக்கவேண்டும். இந்த அடிப்படையான விஷயத்தை விளங்காத பிள்ளைகட்குப் பின்னந் தெரியுமென்று கூற முடியாது. அது அவர்களுக்குச் சின்னுபின்னமென்றுதான் கூற முடியும். கூறுகள் சமகூறுகளாக இருந்தாலும் அவை ஒருபொருளின் கூறுகளாக இருக்கவேண்டும் என்பது பின்னங்களில் மிக முக்கியமான விஷயம். கூறுகள் ஒரு பொருளின் கூறுகளாயிராவிட்டால் பின்னமென்ற பேச்சுக்கு இடமேயில்லை. '$\frac{1}{3}$ தோடம்பழமும் $\frac{1}{4}$ மாம்பழமும் எத்தனை வாழைப்பழம்? என்று யாராவது கேட்பார்களா? ஒருவயல் 10 பரப்பு. அயலிலுள்ள வயல் 7 பரப்பு. இரண்டும் வேறு வேறு வயல்களாயிருக்கும்போது ஒன்று மற்றதிற்கு 10 : 7

என்று பேசலாம். இரண்டும் ஒன்ருய்விட்டால் இதில் $\frac{7}{17}$ என்னுடைய பங்கு என்று ஒருவன் கூறலாம்.

“பின்னங்களின் பகுதி தொகுதிகளை ஒரே எண்ணுற் பெருக்கினுல் அல்லது பிரித்தால் அவைகளின் விலை வித்தியாசப்படாது” என்ற பின்ன சமத்துவத்தைப் பற்றிய விதி மிகமிக முக்கியமான தொன்ருகும். இவ்விதியை 'The golden rule about fractions' என ஆங்கிலத்திற் கூறுவார்கள். இவ் விதியை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக ஆசிரியர் எவ்வளவும் பாடுபடலாம் அதற்கேற்பக் கூட்டல் கழித்தல்கள் லேசாய் விளங்கும். சதுரக் கோட்டுப் படக் காகிதங்கள், வட்டங்கள், பாண், பூசினிக்காய், தடித்துண்டுகள் என்பவற்றை உபயோகித்து விதியை விளக்கித் தெளிவாக்கலாம். மந்தமான மாணவர்கட்கு இவ்விஷயத்தை விளக்குவதற்கு சமநீளமுள்ள மெல்லிய பலகைத்துண்டுகளை, 2, 3, 4, 5, 6, …… சமகூறுகளாக முறையே பிரித்து வெட்டிவைத்துக் கொண்டு, $\frac{1}{2}$ என்னும் துண்டுக்குச் சமமாக இருப்பதற்கு $\frac{1}{4}$ என்னும் துண்டில் இரண்டு அடுக்க வேண்டும் ($\frac{1}{2} = \frac{2}{4}$), $\frac{1}{6}$ என்னும் துண்டில் மூன்று அடுக்கவேண்டும் ($\frac{1}{2} = \frac{3}{6}$). ஆகவே $\frac{1}{2} = \frac{2}{4} = \frac{3}{6}$ …… என்றிப்படியே செய்துகாட்டுதல்மூலம் விஷயத்தை விளக்கலாம்.

$\frac{1}{3}$ இன் $\frac{1}{4} = \frac{1}{12}$ என்பது போன்ற பின்னத்தின் பின்னத்தைப்பற்றிய விஷய விளக்கம் மற்றெரு முக்கிய பகுதியாகும். சதுரக் கோட்டுப் படங்கள் மூலம் இதனை விளக்கி, பொருள்களில் வைத்து அறிவதற்கும் நல்ல பயிற்சி கொடுக்க வேண்டும். $\frac{1}{3}$ இன் $\frac{1}{4} = \frac{1}{12}$ என்பது பிள்ளைகளுக்கு விளங்கலாம். ஆனல் $\frac{1}{3} \times \frac{1}{4}$ என்பது கருத்தற்றதாயிருக்கும். $\frac{1}{3}$ ரூபா வீதம் $\frac{1}{4}$ இருத்தல், $\frac{1}{3}$ மைல் வீதம் $\frac{1}{4}$ மணியில் நடப்பது போன்ற உதாரணங்கள் மூலம் $\frac{1}{3} \times \frac{1}{4} = \frac{1}{12}$ என்பதை விளக்கிக் காட்டலாம். கீழ் வகுப்புகளிலே விஷயத்தை விளக்குவது அவசியமாயினும், விதியைக் கொண்டு (பகுதியைப் பகுதியாலும் தொகுதியைத் தொகுதியாலும் பெருக்குதல்) செய்யப் பயிற்றுவது முக்கியம் என்பதை மறக்கக்கூடாது.

பின்னங்களைக் கூட்டும்போது முழுத்தானங்களை வேருகவும் பின்னங்களை வேருகவும் கூட்டிப் பின்பு சேர்க்க

370.73
CPI
AR



வேண்டும். தகாப்பின்னமாக்கிக் கூட்டக்கூடாது. இப்படியே கழித்தலிலும் முழுத்தானங்களை வேருகக் கழிக்க வேண்டும்.

உ—ம்:

(i) $3\frac{1}{3} - 2\frac{1}{4} = 1\,\frac{1-3}{12} = 1\frac{1}{12} \times \frac{1}{12}$

(ii) $3\frac{1}{2} - 1\frac{2}{3} = 2\,\frac{3-4}{6} = 1\,\frac{6+3-4}{6} = 1\frac{5}{6}$

இதே போலச் சங்கர பின்னத்தை முழுத்தானத்தாற் பெருக்குவதாஞல் அவற்றை வேறு வேருகப் பெருக்கிக் கூட்டுக.

உ—ம்:

(i) $3\frac{2}{5} \times 2 = 6 + \frac{4}{5} = 6\frac{4}{5}$

(ii) $3\frac{1}{5} \times 8 = 24 + \frac{8}{5} = 25\frac{3}{5}$

சாதாரண பின்னக் கூட்டல் கழித்தல்களை சி. சா. மு. காணுமலே கீழ் வகுப்புகளில் (4–ம், 5-ம் வகுப்புகள்) செய்யப் பழக்கலாம். தொடக்கத்தில் வெகு காலத்துக்கு இம் முறையை உபயோகித்து, பின் வேண்டுமாயின் சி. சா. மு. கண்டு செய்யும் முறையையும் சொல்லிக் கொடுக்கலாம்.

சாதாரண பின்னப் பெருக்கலில் சங்கர பின்னத்தைச் சங்கர பின்னத்தாற் பெருக்கும்போது பின்வரும் முறையை உபயோகிக்கலாம்.

$$2\frac{1}{4} \times 3\frac{1}{3} = 6 + \frac{9}{4} + \frac{2}{3} + \frac{1}{4}$$

$$= 6 + 2\frac{1}{4} + \frac{2}{3} + \frac{1}{4} = 8\,\frac{3+8+3}{12} = 9\frac{1}{6}$$

இனி, பின்னத்தைப் பின்னத்தாற் பிரிக்கும் பொழுது பின்வரும் முறையைக் கையாளலாம். $\frac{\frac{3}{4}}{\frac{2}{3}}$ இது நாலடுக்குப் பின்னம். இதனை இரண்டடுக்காக்க என்ன செய்யலாம்? பகுதி தொகுதிகளை 4 ஆற் பெருக்கினுல்?

(விலை வித்தியாசப்படாது)

$\frac{\frac{3}{4} \times 4}{\frac{2}{3} \times 4} = \frac{3}{\frac{8}{3}}$ ஆகும்.

250050
ARCHIVES

பின் பகுதி தொகுதிகளை மூன்றாற் பெருக்கினால்?

$$\frac{3 \times 3}{\frac{8}{3} \times 3} = \frac{9}{8} = 1\frac{1}{8} \text{ ஆகும்.}$$

இப்படியே பல கணக்குகள் செய்வித்துப் பின்பு விதியை (பிரிக்கும் பின்னத்தை மாற்றிப் போட்டுப் பெருக்கல்)க் கண்டுபிடிக்கச் செய்து, அவ்விதியை உபயோகித்துக் கணக்குகள் செய்விக்கலாம். இந்த முறையையே சங்கர பின்னத்தைச் சங்கர பின்னத்தாற் பிரிக்கவும் உபயோகிக்கலாம்.

$$\frac{8\frac{1}{5}}{3\frac{1}{2}} = \frac{8\frac{1}{5} \times 5}{3\frac{1}{2} \times 5} = \frac{8\frac{1}{5} \times 5 \times 2}{3\frac{1}{2} \times 5 \times 2} = \frac{82}{35} = 2\frac{12}{35}$$

சங்கர பின்னத்தை முழுத்தானத்தாற் பிரிப்பதற்குப் பின் வரும் முறை ஏற்றதாகும் :—

$$4\frac{2}{3} \div 3 = 1 + \frac{5}{3} \times \frac{1}{3} = 1\frac{5}{9}$$

இதுகாறும் சாதாரண பின்னத்தைப் பற்றிய சில விஷயங்களைக் கவனித்தோம். இனி, தசம பின்னத்தைப் பற்றிய சிலவற்றைக் கவனிப்போம்.

தசம பின்னம் கற்பிக்கும்போது ஆரம்பத்தில் அடிமட்டங்கொண்டு ஒரு தசாம்ச அங்குலத்திற்கு அளப்பது, கூட்டுவது, கழிப்பது வரவேண்டும். $\frac{1}{10}$, $\frac{1}{10}$ இன் $\frac{1}{10}$ என்பவற்றை விளங்கிய பிள்ளைகட்குத் தசமம் கற்பிக்கத் தொடங்கலாம். இரண்டு தசம தானத்தைச் சதுரக் கோட்டுப் படங்கள், இலங்கை நாணயங்கள் கொண்டு விளக்கலாம். உ—ம் :—

·75 = 7 தசாம்சக் கோடுகள் + 5 சதாம்சக் கோடுகள்.

3·45 = 3 ரூபா + 4 பத்துச் சதங்கள் + 5 ஒரு சதங்கள்.

நாணயங்களைப் பக்கத்துக்குப் பக்கமாக அடுக்கிக் காட்டி விளக்கலாம்.

தசம பின்னங்களைப் பத்தாற் பெருக்கும்போது பின் வரும் முறையாக விளங்க வைக்கலாம் :—

3·45 × 10 என்பதில், 3 என்பது 30 ஆகும்; ·4, 4 ஆகும்; ·05, ·5 ஆகும். 30 + 4 + ·5 = 34·5 ஆகும். இப்படிச் சில உதாரணக் கணக்குகளைச் செய்து காட்டி, அவற்றிலிருந்து "தசம பின்னங்களைப் பத்தாற் பெருக்கும்

போது இலக்கங்களை ஓரிடம் இடப்புறம் தள்ளி எழுதலாம். அல்லது தசமப் புள்ளியை ஓரிடம் வலப்பக்கம் தள்ளிக் குறலாம்.' என்ற விதியை எடுத்துக் காட்டி விளக்கலாம். இந்த முறையாகவே 100, 1000 இவைகளாலும் பெருக்கு வதற்குச் சுலபமாகப் பழக்கலாம்.

தசமபின்னங்களை முழுத்தானங்களாற் பெருக்கல், பிரித்தல்களைக் கற்பிப்பதற்குப் பின்வரும் முறை மிக உபயோக மானதாகும்.

(i) 3·742 × 3 = 9 ஒன்றுகள் + 21 தசாம்சம் + 12 சதாம் சம் + 6 சகசிராம்சம் = 11·226.

(ii) 84·347 ÷ 8 = 1 பத்து + 0 ஒன்றும் போக, மிச்சம் 4 ஒன்றுகள், அல்லது 40 தசாம்சம், 3 தசாம்ச மும் சேர 43 தசாம்சம் ÷ 8 = 5 தசாம்சம். மிச்சம் 3 தசாம்சம் அல்லது 30 சதாம்சம் ..... என்றிப்படியே போகும்.

தசமபின்னத்தைத் தசமபின்னத்தாற் பெருக்குவதற்குப் பல முறைகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் சாதாரண மாகப் பெருக்கித் தசத்தை எண்ணிக் குற்றுவதுதான் இவ் வகுப்புகளுக்குச் சுலபமானதும் சிறந்ததுமான முறையாகும். இதற்குரிய நியாயத்தையும் ஓரளவிற்குச் சொல்லிக்கொடுக்க லாம். தசமத்தைத் தசமத்தாற் பிரிக்கும்போது, பிரிக்கும் தானத்தை முழு எண்ணுக்கிப் பிரித்தலே பிழையின்றி விரை வாகச் செய்யக்கூடிய சுலபமான முறை.

இனி, சாதாரணபின்னத்தை தசமபின்னமாக்குதலும் ஒரு முக்கிய விஷயமாகும். உதாரணமாக $\frac{1}{8}$ என்பதை எடுத் துக்கொள்வோம் :-

(i) $\frac{1}{8} = \frac{1}{8} \times 10$ தசாம்சம் = $1\frac{1}{4}$ தசாம்சம் ... ·1

$\frac{1}{4}$ தசாம்சம் = $\frac{1}{4} \times 10$ சதாம்சம் = $2\frac{1}{2}$ சதாம்சம் ... ·02

$\frac{1}{2}$ சதாம்சம் = $\frac{1}{2} \times 10$ சகசிராம்சம் = 5 சகசிராம்சம் ... ·005

மொத்தம் ·125

(ii) இதற்குச் சுருக்கமுறை வருமாறு :-

$$\frac{1}{8} = \frac{1\cdot000\ \ldots}{8} = 8\ )\overline{1\cdot000}\quad \cdot125$$

சில சமயங்களில் தசாம்சங்களைத் தசமும் பின்னமுமாக எழுதவும் பழக்கவேண்டும். உ-ம் :-

$\cdot 3125 = \cdot 3\frac{1}{8}$ ; $\cdot 7875 = \cdot 7\frac{7}{8}$

தசமபின்னங்களைச் சாதாரண பின்னமாக்குவதற்குக் கற்பித்தல் மிகச் சுலபம். அதைப்பற்றி ஈண்டுக் கூறவேண்டியதில்லை. சுழல் தசமங்களைப் பின்னமாக்குதல் சிறிது கஷ்டம். அது கீழ்வகுப்புகளுக்குத் தேவையில்லை.

பின்னங்களில் வாய்முறைப் பயிற்சி அதிகமாக இருக்க வேண்டும். சில சில பாடங்கள் தவிர ஏனைய பாடங்களில் ஒவ்வொருநாளும் தொடக்கத்தில் 5 நிமிஷங்களுக்கு வாய்க் கணக்குக் கேட்டால் நலம். பிரதமபாடசாலை எண்பாடம் முக்கியமாய் வாய்முறைப் பயிற்சிக்கே உரியதென்பதை மறக்க வொண்ணுது.

"தசம பின்னமும் சாதாரண பின்னமும்" என்பதை விஷயமாக எடுத்துக்கொண்டு அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அறிந்து கையாளக் கூடிய சில முக்கியமான விஷயங்களை எடுத்துக்காட்டி, இது பின்னமென்றுற் சின்னுபின்னமாகவோ அல்லது சிதம்பரசக்கரமாகவோ எண்ணும் பிள்ளைகட்கு அவ் வெண்ணத்தை மாற்றுதற்கு ஆசிரியர்கட்கு ஒரு கை மருந்தாக உதவும் என்ற நம்பிக்கையோடு இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

❋

## சுந்தரர் கண்ட பரவையார்

"கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்றன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ சிவனருளோ! அறியேன்என் றதிசயித்தார்."

## பரவையார் கண்ட சுந்தரர்

"முன்னேவந் ததிர்தோன்றும் முருகனோ! பெருகொளியாற்
றன்னேரில் மாரனே! தார்மார்பின் விஞ்சையனே!
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே
என்னேஎன் மனந்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்."

— சேக்கிழார்

# சாத்திரம் கற்பித்தல்

(மு. சீவரத்தினம்)

**சா**த்திர சம்பந்தமான விடயங்கள் பிள்ளைகளுக்கு மிகவும் கவர்ச்சியானவை. உலகத்தைப் பற்றியும் சம்பவங்கள் நடக்கும் விதத்தைப்பற்றியும் அறிய வேண்டுமென்ற இயற்கையான ஆசையைச் சாத்திரப்படிப்பு இன்னும் தூண்டிவிடும். சாவதானமாக அவதானித்தல், பட்சபாதமில்லாமல் அவதானித்தல், அவதானித்தவைகளை வெளிப்படுத்தல், அவதானித்தவைகளிலிருந்து சரியான அனுமானங்களைப் பெறுதல் இவையெல்லாம் பிள்ளைகளுக்கு வரவேண்டியவை. (இப் பலன்களெல்லாம் சாத்திரப் படிப்பினால் வரக்கூடியவை.) சாதாரண பாடசாலையிலே சாத்திரத்தின் நுட்பமான பிரயோகங்கள் படிப்பிக்கமுடியாது. ஆனால் சாவதானமாக ஆராய்தல், விதிக்கும் விடயத்துக்குமுள்ள தொடர்பைச் சொல்லுதல் என்பவை படிப்பிக்கப்படலாம். இதற்காகச் சாத்திரத்திலே முதல் முதல் வேலை செய்தவர்கள் பின்தொடர்ந்த முறைகளைப்பற்றியும் தற்கால சீவியத்திலே சாத்திரம் சேர்ந்திருக்கும் வகையைப்பற்றியும், சாத்திர சம்பந்தமான விடயங்களிலே நடந்துகொள்ளும் விதங்களைப் பற்றியும், விவேகமாகவும் ஆரோக்கியமாகவும் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றியும் ஆரம்ப பாடசாலைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப்படலாம். உயிருள்ள பொருளைப்பற்றியும் உயிரில்லாத பொருளைப்பற்றியும் படிப்பிப்பதனாலே பிள்ளைகளுக்குச் சீவியத்தைபபற்றிப் பல விடயங்கள் தெரியவரும்.

**பாலர் பகுதி விடயங்கள்:**

**சா**த்திர சம்பந்தமான அனுபவ அறிவு வரச்செய்தலே இப் பருவத்தினர்க்குப் பிரதானமானது. இவர்களுக்கு விடயங்களைப்பற்றி யறியவேண்டுமென்ற ஆசை இயற்கையாகவுள்ளது. பிராணிகள் இயங்கும்விதம், பிராணிகளின் சத்தங்கள், பிரகாசமுள்ள நிறங்கள், பலவகை வடிவங்கள், பலவகை மணங்கள் இவைகளிலே பிள்ளைகளுக்கு இயற்கையாகவே கவர்ச்சியுண்டு. அல்லாமலும் யந்திர மூலமாக

இயங்கும் விளையாட்டுக் கருவிகள், சவர்க்காரக் குமிழிகள் முதலியவைகளிலேயும் இவர்களுக்குக் கவர்ச்சியுண்டு. மனத்திலே உண்டாகும் எண்ணங்கள் தாங்கள் கண்டு கையாடி அறிந்த விடயங்களி லிருந்துதான் உண்டாகவேண்டும். ஆகையினாலே பல விடயங்களைக்கண்டு கையாடியிராவிட்டால் அவர்களுடைய சொற்கள் கருத்தில்லாதவையாய் இருக்கும். ஆதலால் பிள்ளைகள் பல விடயங்களையும் அவதானிக்க வேண்டும். பல பொருட்களையும் கண்டு கையாடல் வேண்டும். பல பரீட்சைகளையும் செய்து பார்க்கவேண்டும். புதிய விடயங்களைக் கண்டு பிடிக்கவேண்டும். தாம் அவதானித்தவற்றை எடுத்துப் பேசவேண்டும். இந்த முறையிலே பழக்கப்பட்ட பிள்ளைகள் இன்னும் இன்னும் புதிய விடயங்களை அறிய விரும்புவார்கள். தங்கள் சுற்றுடலிலேயுள்ள தாவரங்களையும் மிருகங்களையும் இயற்கையான நிலையிலே அவதானித்திருந்தால் மிகவும் பிரயோசனமாய் இருக்கும்.

படங்களை விபரணங்களை உபயோகித்தல் அவதானிக்கிறதற்கு உபயோகப்படாது. பட்டினப்பிள்ளைகள் பலவகையான போக்குவரத்துக்களையும் அவதானிக்கலாம். இவ்வாருக அவதானித்த விடயங்களை ஆசிரியர் உபயோகித்துக் கொள்ளலாம் பாடசாலைத் தோட்டத்திற் சிறிய தாவரங்களை உண்டாக்கி அவதானிக்கலாம். தோட்ட வேலை முழுவதையும் அவர்களைக்கொண்டு செய்விப்பதனுல் விடயத்திற் கவர்ச்சிகொள்ளச் செய்வதுமல்லாமல் தாவரங்களிற் காலத்துக்குக்காலம் நடக்கும் மாற்றங்களைப்பற்றியும், தொழில்களைப்பற்றியும் அறிந்து கொள்வார்கள். தொட்டிகளிலே நீர் வாழும் பிராணிகளை வளர்த்து அவதானிக்கச் செய்யலாம். பட்சிகளையும், மிருகங்களையும் வளர்த்து அவதானிக்கலாம். இவ்வாருக அவதானித்த விடயங்களை உடனேயே குறித்துக் கொள்ள வேண்டும். அவை யெல்லாம் படவடிவமாக இருக்கலாம். தாங்க ளவதானித்தவற்றைத் தினமும் பேசவேண்டும். பிள்ளைகள் நேரே காணமுடியாத மிருகங்களையும் இடங்களையும் படங்கள்மூலம் காட்டி விளக்கலாம்.

### கனிஷ்ட பாடசாலைப் பருவம்:

பாலர் பிரிவிலே தொடங்கிய விடயம் இன்னுமதிகமாகக் கனிஷ்ட பாடசாலையிலேயே நடைபெற வேண்டும். பிள்ளைக

சைவ வித்தியா விருத்திச் சங்கக்
காரியதரிசி



திரு. சு. இராசரத்தினம் அவர்கள்

ளுக்கு ஆராயும் குணத்தையும், வியப்பென்னும் உணர்ச்சியை யும் விருத்தியாக்க வேண்டும். தாவரங்களுடைய வளர்ச் சியை அவதானிக்கின்றபோது நிலம், காற்று, வெளி முத லியவைகளை எப்படியாக மனிதர் தங்களுடைய தேவைக ளுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கின்றனர்கள் என்பதைப் பற்றியும் படிப்பிக்க வேண்டும். இவ்வாறாகப் பாலர்பகுதி விடயங்கள் இந்தப் பருவத்தினர்க்கு விரித்துப் படிப்பிக்கப் பட வேண்டும். தாவரங்கள், மிருகங்கள் என்பவற்றைப் பற்றி அவர்கள் அவதானித்தவைகளை வைத்துக்கொண்டு ஏதாவது செய்ய விடவேண்டும். படிப்பிக்கும் விடயங்கள் பருவத்துக்குப்பருவம் மாறி மாறிக்கொண்டு திரும்பித்திரும்பி வந்தாலும் வருடத்திற்கு வருடம் வித்தியாசம் வித்தியாச மானவையாயும், உயர்ந்தபடியி லுள்ளவையாயும் இருக்க வேண்டும். வகுப்பு ஏறஏற இன்னும் விஸ்தாரமாகப் பிள்ளை கள் அவதானிக்க வேண்டும். மூச்சு விடுதல், பொருட்களை எரித்துப் பார்த்தல், தாவரங்களின் வளர்ச்சி, இவைபோன்ற வேறும் இலேசான பரீட்சைகளை இப்பிள்ளைகள் செய்து பார்க்கலாம். அவதானித்த விடயங்களைக் கிரமமான பயிற்சி யடையச் செய்யவேண்டும். வசனமாக எழுதவும், திட்டமான படங்கள் கீறவும் பழக்க வேண்டும்.

பாடசாலையிலே காய்கறிச் செடிகளையும், பூஞ்செடிகளை யும் வளர்த்து, புஷ்பங்களுக்கும், வண்டுகளுக்குமுள்ள தொடர்பை அவதானிக்கலாம். இதனால் மேல்வகுப்புகளிலே மகரந்தம் பரவுவதைப்பற்றி அறியக்கூடியதா யிருக்கும். உஷ்ணநிலைக்குத் தக்கவாறு விதைகள் முளைக்கச் செல்லும் கால அளவு வித்தியாசத்தைப்பற்றியும், பிள்ளைகள் அவதா னிக்க வேண்டும். உச்ச நீச உஷ்ணநிலைகளைத் தினந்தோ றும் பதிந்துகொள்ள வேண்டும். மாணவர் தாமே ஊரைச் சுற்றிப் பார்த்துப் பலவிடயங்களை யறிந்துகொள்ளலாம். தாவ ரங்களைப் பற்றியும், பிராணிகளைப் பற்றியும் இன்னும் கிரம மாகப் படிப்பிக்கவேண்டும். விதைகளை வகுப்பிலே வளர வைத்து அவைகளுடைய வளர்ச்சியை அவதானிக்கச் செய்ய லாம். பாடசாலைத் தோட்டம் அமைக்கும் விதத்தையும் வகுப்பிலே படிப்பிக்கலாம். பிரமாணத்துக்கு மாதிரிப்பட மும் கீறப் பழக்கவேண்டும்.

தாவரங்களைப்பற்றிப் படிப்பிப்பதிலும் பிராணிகளைப் பற்றிப் படிப்பிப்பது இந்தப் பருவத்தினர்க்குக் கவர்ச்சியுள்ளதாயிருக்கும். சில பிராணிகளைப்பற்றி வகுப்பிலே படிப்பிப்பதானால் அவைகள் சுயமாய் இயங்கக்கூடியதாயிருக்க வேண்டும். சிறிய குளங்களமைத்து மீன்களையும், மற்றும் நீர் வாழ்வனவற்றையும் வளர்க்கலாம். குளங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சிறிய புழுக்களை வளர்ப்பதானால் அவைகளைத் தக்க பெட்டிகளிலே வளர்க்க வேண்டும். முற்பக்கம் கண்ணாடியா யிருத்தல் நல்லது. தவளை முதலியவைகளை வளர்ப்பதானால் அவைகள் நீந்துவதற்குப் போதிய தண்ணீரும், வெளியேறி உலாவுதற்குத்தக்க இடமும் இருக்க வேண்டும். வளர்க்கும் பிராணிகளுக்குச் சுகாதாரத்துக்குப் பிசகில்லாது உணவுகொடுக்க வேண்டும். பிள்ளைகளும் தங்கள் தங்கள் வீடுகளிற் பூச்சி புழுக்கள், சில பிராணிகள், பட்சிகள் என்பவற்றை வளர்க்க உற்சாகப் படுத்த வேண்டும்.

பிள்ளைகள் அவதானிக்கும் விடயங்களைச் சொல்லும்படி கேள்விகள்மூலம் உபாத்தியாயர் தூண்டவேண்டும். குறிப்புகளாகக் குறிக்கவும் பழக்க வேண்டும். வேண்டிய இடங்களிலே படங்கள் கீறவும் பழக்க வேண்டும். சாத்திர பாடத்திலே அவதானித்த விடயங்களைக் கைப்பணிப் பாடத்திலே உருவங்களாக அமைக்கலாம்.

பட்டினப்பகுதியிலே உயிரில்லாத பொருட்களைப் பற்றிய படிப்புத்தான் பிரதானமாய் நடைபெறவேண்டும். ஆனால் சாத்திரத்திலே ஒருபகுதியைக் குறித்து பௌதிகசாத்திரம், இரசாயன சாத்திரமென்று கீழ் வகுப்புகளிலே படிப்பிக்கக் கூடாது. இன்னும் சம்பவங்களுக்கு நியாயம் சொல்ல அறிதல் இவ் வகுப்பினர்க்குப் பிரதானமன்று. விடயங்களை அவதானிக்க அறிவதும், அந்த விடயத்திலே கவர்ச்சிகொள்ளச் செய்வதுமே பிரதானம். சவர்க்காரக் குமிழிகளுண்டாகும் விதம், கண்ணாடியிலே பிரதிவிம்பம் தெரியும் தூரம், அதன் அளவு என்பவற்றைக் குறிப்பாக அறிதல், முப்பட்டைக் கண்ணாடியில் நிறங்கள் காணும்விதம், காந்தத்தின் தொழில்கள் என்பவை படிப்பிக்கப்படலாம்.

இயங்கும் பாவை ஒன்று எவ்வாறு இயங்குகின்றதென்று அறிவதற்குப் பிள்ளைகளுக்கு விருப்பமிருக்கும். அதை ஆதாரமாகக்கொண்டு பாடத்தை நடாத்தவேண்டும். இப்படியல்லாமல் திட, திரவ, வாயுபதார்த்தங்கள், இலை, வேர் மரம் இவைகளின் தொழில்கள் என்று பாடங்களை நடாத்துவது இந்த வகுப்புக்குப் பொருந்தாது.

பாடசாலையிலே தாவரங்கள் மிருகங்களைப்பற்றிய விடயங்களைப் பிள்ளைகள் வாசிக்கக்கூடிய நல்ல புத்தகங்களும், சித்திரப்படங்களும் இருத்தல் வேண்டும்.

### மேல் வகுப்பு :

மேல் வகுப்புகளிலே சாத்திர ஆராய்ச்சியாளரைச் சிருட்டிப்பது நோக்கமன்று. இயற்கையைப்பற்றிய விதிகள் எப்படிக் கண்டுபிடிக்கப் பட்டனவென்றும், இந்த விதிகளைக் கண்டுபிடிப்பதினுலே மனிதர் என்னென்ன காரியங்களைச் செய்யக் கூடியவர்களாய் இருக்கிறுர்களென்றும், சாத்திர மூலமாக அறிந்த விடயங்களைக்கொண்டு மனிதர் என்ன செய்கிறுர்களென்றும் பொதுவாகப் பிள்ளைகள் அறியச் செய்வதுதான் இந்த வகுப்புகளிலே நோக்கம். படிப்பிக்கப் படும் விடயங்களும், படிப்பிக்கும் முறையும், பிள்ளைகளுக்கும், தமது சமூகத்துக்கும் உபயோகமானவையாயிருக்க வேண்டும். சாத்திரிகள் ஒரு விடயத்தைத் திட்டமாய் அறிவதற்கு எவ்வளவு பாடுபடுகிறுர்களென்றும், அதற்குப் பல வகையான யூகங்கள் உபயோகப்படுகின்றன வென்றும், ஒரு தீர்ப்புச் செய்வதன் முன்னே எவ்வளவு சாவதானம் வேண்டுமென்றும், பரீட்சைகள்மூலம் சரி பிழை அறியவேண்டுமென்றும், நியாயங்களை ஆராய்ந்து முடிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் பிள்ளைகள் இயன்றவரை அறியவேண்டும். இன்னும் சாத்திர முறைகள் வந்ததினுலே சீவியத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப்பற்றியும் பிள்ளைகள் அறிய வேண்டும். பிள்ளைகளுக்குச் சாத்திர சம்பந்தமான இடைநேர வேலையிலே கவர்ச்சி உண்டாக்கிவிட்டாற் பள்ளிக்கூடம் விட்டபின்பும் அவர்கள் சாத்திரசம்பந்தமாக முயற்சி செய்வார்கள்.

சாத்திரம் படிப்பிக்கும் ஆசிரியர் விரிவாக விடயத்தை அறிந்தவராக இருக்கவேண்டும். உபகரணங்களை நன்கு உப

யோசித்தற்கும் அறிந்திருக்கவேண்டும். பரீட்சை செய்யும் போது அபாயங்கள் ஏற்படக் கூடும். ஆதலால், பிரதம சிகிச்சைமுறை நன்கு தெரிந்திருக்க வேண்டும். மற்றப் பாடத் துக்கும் சாத்திரத்துக்கு முள்ள தொடர்புகள் அறியக்கூடிய வராய் இருக்கவேண்டும். ஆசிரியர் தாமறிந்த விடயங்களைச் சுருக்கிச் சொல்வதுதான் தனது கடமை என்று எண்ணக் கூடாது.

இவர்களுக்கு முக்கியமாகச் சேர்க்கப்படவேண்டிய விட யங்கள் தாவரங்கள் பிராணிகளைப் பற்றியவை. பௌதிக சாத்திர விடயங்களும், அதனோடுசேர்ந்த இரசாயனசாத்திர விடயங்களும், வசதியிருந்தால் வேறு விடயங்களும் படிப் பிக்கப்படலாம்.

தாவரங்கள் பிராணியைப்பற்றிப் படிப்பிக்கும்போது மனிதரைப்பற்றியும் படிப்பிக்கப்படவேண்டும். தாவரங்களுக் கும் பிராணிகளுக்குமுள்ள இன்றியமையாத தொடர்பும் படிப்பிக்கப்படவேண்டும். இன்னும் இயக்கம், உணவு உட் கொள்ளுதல், வியர்வை, கழிவுபதார்த்தங்களைக் கழித்தல் என்னும் முக்கிய விடயங்களைப் படிப்பித்துக்கொண்டு, பௌதிகசாத்திர விடயங்களும், இரசாயனசாத்திர விடயங் களும் எடுத்துக் காட்டப்பட வேண்டும். சில பிராணிகள் கூட்டம் கூட்டமாய் வசிப்பதைப்பற்றிப் படிப்பிக்கலாம். குதிரை பகைப் பிராணிகளிடமிருந்து தப்புதற்கு வேகமாய் ஓடக்கூடிய உறுதியான கால்களை இயற்கையிலேயே பெற் றிருப்பதைப்பற்றிப் படிப்பிக்கலாம். இவைகளெல்லாவற்றி லிருந்தும் மனிததேகம் செவ்வையாக இயங்குவதற்கு வேண் டிய நிலைகளைப்பற்றியும் பிள்ளைகள் அறிந்துகொள்ள வேண் டும். இன்னும் உணவைப்பற்றியும், வியாதிகளைப்பற்றியும் படிப்பிக்கவேண்டும்.

சாத்திரத்திலே மற்றப் பகுதிகளிலே கலந்திருப்ப தால் பௌதிகசாத்திர விடயங்கள் படிப்பிப்பது அவசியமாகின்றது. தற்கால சீவியத்திலே யந்திரங்க ளும், மின்சாரக் கருவிகளும் எங்கும் பரவியிருக்கின் றன. இவற்றை விளக்குவதற்கும் பௌதிக சாத்திரம் தேவையானது. ஒரே சக்தி தானே சூடாயும், ஒளியாயும், யந்திரசக்தியாயும், மின்சாரசக்தியாயும், இரசாயனசக்தி

யாயும் இருக்கின்றதென்பதும், அது உயிருள்ள பொருட்களையும் உயிரில்லாத பொருட்களையும் தாக்குகிறதென்பதும், இதை அளக்கவும் விற்கவும் வாங்கவும் கூடுமென்பதும் படிப்பிக்கப்பட வேண்டும். இன்னும் இலேசான யந்திரங்களைப்பற்றியும் படிப்பிக்க வேண்டும். யந்திரத் திறனைக் கணிக்கவும் தெரியவேண்டும். ஒளியைப்பற்றிப் படிப்பிக்கும்போது இயவங்கள், கூட்டியவங்கள், குறும்பார்வைக்காரர் நெடும்பார்வைக்காரருக்கு உபயோகிக்கும் இபவங்கள், அவற்றின் தொழில்கள் என்பன படிப்பிக்கப்பட வேண்டும். சூட்டைப் பற்றியும், மின்சாரத்தைப் பற்றியும் படிப்பிக்க வேண்டும். இன்னும் எதிரொலி முதலியவைகளைப் பரீட்சை மூலமாகவும் காட்டலாம்.

உயிர் நூலோடும் பௌதிக நூலோடும் தொடர்புள்ள இரசாயன சாத்திரப் பகுதிகளைப் படிப்பிப்பது இலகுவானது. அல்லாமல் மரம், சாப்பாட்டுச் சாமான், வெண்ணெய் என்பவற்றைப்பற்றிப் படிப்பிப்பது கடினமான வேலை. அதனாலே அதற்கு அத்திவாரமான விடயங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டி இருக்கின்றது. காற்று, நீர், கரி, சுண்ணம்பு வெண்கட்டி (Chalk) என்பவற்றின் அமைப்பைப்பற்றி உயிர் நூலில் வரும்போது படிப்பிக்கலாம். இன்னும் புளிப்படைதல், சீரணம் என்பவற்றைப் பற்றியும் சுருக்கமாகப் படிப்பிக்கலாம்.

பூமிசாத்திர பாடத்திற் படிப்பிக்கவேண்டிய விடயங்கள் சில சாத்திர பாடத்திற் படிப்பிக்கவேண்டிவரும். உதாரணமாகப் பிரகாசிக்கக்கூடிய நட்சத்திரங்களைக் கண்டுபிடிக்கவும், கிரகங்களின் இயக்கத்தை ஆராயவும், நட்சத்திரக் கூட்டங்களுக்கும் கிரகங்களுக்குமுள்ள தொடர்பை யறியவும் சாத்திர பாடத்திலே படிப்பிக்க வேண்டும். இன்னும் பலவகை மண்கள், மலைகள், சுரங்கங்கள், பூகம்பம், எரிமலை என்பவற்றைப் பற்றியும் படிப்பிக்கலாம்.

ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஏற்ற விடயம் இன்னொரு பள்ளிக்கூடத்துக்குப் பொருந்தாததா யிருக்கும். பள்ளிக்கூடத்து நிலையைப் பார்த்து ஆசிரியர் ஏற்றவிடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். நகரப்பக்கங்களிலே கைத்

தொழில் முதலியவைகளோடு சேர்ந்த விடயங்கள் படிப்பிக்கப்படலாம். ஆனால் தாவரங்களைப்பற்றி முற்றாகப் படிப்பியாமல் விடவேண்டியதில்லை.

படிப்பிக்கும் விடயங்கள் பிள்ளைகளுடைய அனுபவங்களை யொட்டிப் படிப்பிக்க வேண்டி யிருத்தலால் விடயங்களுக் கிடையேயுள்ள தொடர்பையும், பொதுவிதிகளையும் மாணவர் அறியவேண்டும். ஆசிரியர் இன்ன இன்ன பொது விதிகளைக் கொண்டுவர வேண்டுமென்று குறித்துக்கொள்ள வேண்டும். அந்த விதிகளைக் கொண்டுவருவதற்குக் கவர்ச்சியுள்ள சம்பவங்கள், காட்சிகளைப்பற்றித் தொடங்கவேண்டும். விளக்குவதற்குக் கஷ்டமான விடயங்களையும், அதிகம் பிரயோசனமில்லாத விடயங்களையும் சாதுரியமாகத் தவிர்க்க வேண்டும். சிலபகுதிகளிலே கவர்ச்சி கொள்ளச் செய்வதற்கு உபகரணங்களோடு சேர்த்துப் பிரசங்கங்கள் செய்யலாம். மாணவருக்குக் கஷ்டமான பரீட்சைகளை ஆசிரியர் செய்துகாட்டலாம். இலகுவான பரீட்சைகளை மாணவர்கள் செய்துபார்க்க விடலாம். பல விடயங்களைத் திரட்டுவதற்கும், விடயங்களுக்குள்ள தொடர்பை யறிதற்கும் தர்க்கம் செய்விக்கலாம். இங்ஙனம் பலவாறாகவும் அறிந்த விடயங்களைக் குறிப்புகளாகக் குறித்துக்கொள்ளச் செய்யவேண்டும். பரீட்சைகளுக்குக் குறிப்புகள் எழுதும்போது தாங்கள் செய்த விடயங்கள், அவதானித்த விடயங்கள், அனுமானித்த விடயங்கள் என்று தொடர்பாகக் குறிக்க வேண்டும்.

❋

பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்னர்
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை அதனை யின்னே
தந்தனை யாயின் நன்று தருசுவை பக்க ணத்தின்
சிந்தனை நின்ற தென்றான் தெரிவரு மாயக் கள்வன்.

—குசேலோபாக்கியானம்

❋

மாவின் பாலே யன்றி மரபுக் குரிய மைந்தன்
ஆவின் பால்கண் டறியா னதனால் வருந்தி யந்தக்
கோவின் பாலெய் துதலுங் கோமான் யார்நீ யென்ன
நாவின் பாலா னடுங்கி நானுன் நண்ப னென்றேன்.

—பாரதம்

# ‘ அவன் ’

(வ. செல்லையா)

அடிவானத் தேஇருந்த பரிதித் தோற்றம்
அவளிருந்த தோற்றம்போ லமைய வில்லை,
முடிவான அழகுசொலப் பரிதி முன்பு
மொய்த்திருந்த துயிரற்ற முகிலின் கூட்டம்
வடிவான வண்ணமென்று புலவ ரெல்லாம்
வாழ்த்துவதும் வணங்குவதும் வகைகா ணது
குடிபோன பழங்கதைக்கு மெருகு பூசும்
கொள்கைஎன்றே கொளல்வேண்டும்; குறியு மில்லை 1

அவளிருந்த கோலத்துக் கதுவே யன்றி
அவனியிலே இணையாக அறிந்த தில்லை;
அவளிருந்த கோலத்தின் அமைதி தன்னை
அறிஞர்களு மொருநாளும் அறிந்த தில்லை;
அவளிருந்த கோலத்தில் அமைந்தி ருந்த
அற்புதங்கள் அநுபவத்தில் அறிந்த தில்லை;
அவளிருந்தாள், அறிவுலகுக் கெட்டா ஒன்று
அவனியிலே அவதரித்த அழகே போல. 2

எத்திசையும் அவளிருந்தாள்; எனது வாழ்வு
எண்ணரிய சுகக்கடலில் இறங்கக் கண்டேன்;
முத்தியெனும் நிலைகண்டேன்; முடிவில் லாத
முக்குணங்கள் ஒன்ருகி முடியக் கண்டேன்;
பத்தியில்லை; பயமில்லை; பரவ சத்தால்,
பாருலகி லுள்ளதெல்லாம் அங்கே கண்டேன்;
சித்திரம்போல் இருந்தவள்தான் திரும்பிப் பார்த்து
சிரித்திட்டாள்; ஜெனித்திட்ட பயனைக் கண்டேன். 3

‘வா’ என்ருள்; வகைஅறியேன்; வார்த்தை என்னும்
வழக்கொழிந்த நிலைதன்னில் மயங்கி நின்றேன்;
‘மாமன்தான் நீயெனக்கு அத்தை தந்த
மைத்துனன்என் ருலும்அதில் மாற்ற மில்லை;

ஆ'என்றன் அன்பே!என் றழைத்தாள்; அந்தோ!
அப்பொழுதென் நிலைதன்னை அறியே னாகி,
தேவன்றான் ஆனாலும் அறியாத் தெய்வ
சேயிழையைச் சேரஒரு கணத்திற் சென்றேன். 4

மண்ணுலகில் வானகத்து வாழ்வு தந்த
மன்னவனை மனமுருக வாழ்த்திக் கொண்டு,
எண்ணமெலாம் அவளாக, இதயம் பொங்க,
எத்திசையும் இருந்தஎழில் தன்னைக் கண்ணால்
உண்ணுமொரு கவிஞனைப்போல் உறுதி கொண்டு,
உயிர்இருந்த இடம்நாடி ஓடிச் சென்றேன்
பெண்ணவளைக் காணவில்லை! பித்தங் கொண்டேன்;
பேதைஎன்றன் கனவுநிலை பெயர்ந்ததையோ! 5

ஒரு வழக்காளி நீதிஸ்தலத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது அவனுடைய எதிரியின் நியாயவாதி அவனைப்பார்த்து: "நீ ஏன் நாய்போற் குலைக்கிறாய்?" என்றான். அதற்கு அந்த வழக்காளி "ஐயா! கள்வனைப் பார்த்தால் நாய் குலையாதா?" என்றான். இதைக்கேட்ட நியாயவாதி அங்கிருந்த பலரும் நகைக்க அவமானம் அடைந்தான்.

* * *

வித்துவான் ஒருவர் மேல்வகுப்பொன்றுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். ஒவ்வொருநாளும் பாடம்படிக்காமல் வகுப்பு இறுதியில் இருக்கும் சண்முகம் என்ற பையனைக் கோபித்து "நீ என்ன பிள்ளை" என்றார். அவன் 'நான் செட்டிப்பிள்ளை" என்றான். ஆசிரியர் "அதனாற்றான் நீ என்றும் கடையில் இருக்கிறாய்" என்றார்.

* * *

ஒரு புலவர் மைசூர் அரசனிடம் சென்றார். புலவர் மிகவும் கறுப்பு நிறமுடையவராய் இருந்தமையால் அரசன் அவரைப் பார்த்து "இவர் அண்டங்காக்கைக்குப் பிறந்தவரோ" என்று பரிகாசமாகக் கூற, புலவர் "அண்டங்காக்கைக்குப் பிறந்தவன் நானல்லன், தாங்களே" என்று கூறினர். சபையோர்களும் அரசனும் புலவரை வியந்து பாராட்டினர்.

# வார்தா கல்வித் திட்டம்

(தா. சுப்பிரமணியம்)

தேசீய விஷயங்களின் புண்ணிய ஸ்தலமாகிய வார்தா நகரிலே தயாரிக்கப்பட்ட கல்வித் திட்டத்தையே வார்தாத திட்டமென அழைக்கின்றனர்கள். பலர் படித்தும் வேலையில்லையே என்று திண்டாடுவதையும் இந்த இந்திய நாட்டில் பலருக்குப் போதிய படிப்பில்லை என்ற குறையையும் நீக்க முற்படுவதுதான் வார்தாக் கல்வித் திட்டத்தின் நோக்கம். மகாத்மா காந்தியை வழிகாட்டியாகக்கொண்டு பலதுறைகளில் அநுபவமும் அறிவுமுடைய வார்தா கல்வித்திட்ட சபை இதை அமைத்திருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் எழுத்தறிவுக்காக வந்துசேரும் பிள்ளைக்கு எழுத்தறிவோடு கைத்தொழில் திறமையையும் போதித்து ஜீவனத்துக்காக வேலைசெய்து பிழைக்கும் சக்தியையும் கொடுக்கிறது.

பள்ளிக்கூடத்தில் கைத்தொழில்மூலம் கல்வி போதிக்கப்படும். இம் முறை எல்லா அம்சங்களிலும் மற்றக் கல்வி முறைகளைவிடச் சிறந்தது என்பதை இத்திட்டம் எடுத்துக் காட்டுகிறது. கைத்தொழில் கற்றவனுக்கும் பட்டம் பெற்றவனுக்கும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் இத் திட்டத்தின்படி இல்லாமற் போய்விடுகிறது. அதாவது இக் கல்விமுறையில் படிப்பும் தொழிலும் ஒன்றுகவே போதிக்கப் படுகின்றன. இத் திட்டத்தின்படி மாணவர் பாடசாலையை விட்டு வெளிவரும்போது குடியானவர்களாயும் தொழிலாளிகளாயும் உள்ள தங்கள் ஏழைத் தந்தைக்கு உதவி புரியக் கூடியவர்களாகவே வெளியேறுகிறுர்கள். இதனுல் ஆரம்ப கல்வியின்மூலம் சிறிது எழுத்தறிவு பெறுவதைவிடத் தன்னேடிருந்து தொழிலைக் கற்றுக்கொள்வதுதான் நல்லது எனத் தகப்பன் கருதமாட்டான்.

இக்காலப் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்கும் மாணவன் புத்தகங்களின்மூலம் தன் அறிவை விருத்தி செய்வதினுல் அவனுடைய அநுபவங்களுக்கு வேலையில்லை. வயிற்றுப் பிழைப்புக்காக வேலை கற்றுக்கொள்ளும் சிறுவன் யந்திரம்

மாதிரி வேலை செய்கின்ருனே ஒழிய அவனுடைய மூளைக்கு வேலையில்லை. இத்திட்டத்தின்படி கல்வியிலும் மாணவன், தொழிலின் நுணுக்கங்களை அறிந்து தன் மூளையின் வளர்ச்சியைத் தொழிலின் வளர்ச்சியோடு இணைக்கவேண்டியவனுகின்ருன். இதனுல்தான் வார்தா கல்வித்திட்டத்தில் கைத்தொழிலை நடுநாயகமாக வைத்திருக்கிருர்கள்.

ஆசிரியர்களின் சம்பளம் இருபத்தைந்து ரூபாய் என விதிக்கப்பட்டுள்ளது. பள்ளியில் சிறுவர்கள் கற்றுக்கொள்ளும் கைத்தொழில்மூலம் உற்பத்தியாகும் பொருள்கள் ஆசிரியரின் சம்பளத்திற்குப் போதியதாய் இருக்கும். மாணவர் உற்பத்தியாக்கும் பொருள்களை வாங்கவும் விற்கவும் வேண்டிய பொறுப்பை அரசாங்கத்தில் உள்ள ஓர் இலாகாவே ஏற்றுக்கொள்ளு மாதலின் சம்பளத்திற்காகப் பிள்ளைகளை ஆசிரியர் நெருக்கி வேலைசெய்விக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படமாட்டாது. அன்றியும் ஆசிரியர்கள் தாங்கள் சேவை செய்கின்ருேம் என்ற மனப்பான்மை உடையவர்களாகப் பயிற்சிபண்ண வேண்டியவர்களாய் இருப்பார்கள்.

இத்திட்டம், ஆராய மேற்கொண்டது அடிப்படையான ஆரம்பக் கல்வியையே. இதற்குப் பின்புதான் தனித் தொழிற் கல்விப் பாடசாலைகளும் உயர்தர கல்விச்சாலைகளும் ஆராயப்படும். தனித் தொழிற்கல்விப் பாடசாலையில் வாழ்க்கைக்கு உபயோகமான ஒரு தொழிலை அவன் கற்றுக்கொள்கிருன். தொழிலை அடிப்படையாகக்கொண்ட இக் கல்வியினுல் தோன்றும் விவசாயிகள், தச்சர்கள், படிப்பறிவுள்ளவர்களாய் அறிவாளிகளாய்த் தோன்றுவார்கள்.

இத்திட்டம் மூன்று அம்சங்களை ஒன்ருக இணைக்கிறது. அவை பையனின் சுற்றுப்புற அநுபவம், பையன் வாழும் சமூக சம்பந்தமான விஷயங்கள், பையன் கற்றுக்கொள்ளும் கைத்தொழில் என்பன. கல்வியும், கற்கும் கைத்தொழிலும் ஒன்ருேடொன்று வித்தியாசமின்றி இணைகிறது. சமூக சாஸ்திரம் என்பதன்கீழ் பூமிசாஸ்திரம், சரித்திரம் என்னும் பாடங்கள் தொடர்புபடுகின்றன. இப்படிச் செய்வதனுல்தான் அந்நிய நாட்டுப் பூமிசாஸ்திரம் நன்ருகக் கற்றிருந்தும் உள்ளூரிலே ஓடும் நதி எங்கேஉற்பத்தியாகிறது என்பதை அறியாமல் இருக்கும் பிள்ளைகள் இல்லாமற் போவார்கள்.

சமூக சாஸ்திர விஷயங்களும் விஞ்ஞான சாஸ்திர பாடங்களும், சித்திரவேலையுடன் இணைக்கப்படுகின்றன. பூமிசாஸ்திரமும் சரித்திரமும் மாணவனை உற்சாகமடையச் செய்கின்றன. பூமிசாஸ்திரத்தில் மலைப்பிரதேசங்களைப் பற்றிய பாடம் நடக்கும் வாரத்தில் இக்காலக் கல்விமுறைப்படி பாத்திரங்களை வரைவதை விட்டுவிட்டு மலைகளை வரைவதன் மூலம் உற்சாகமடைகிறான். இப்படியே சரித்திரபாடத்திலும் அந்தந்தக் காலத்து ஆபரணங்களையும் உடைகளையும் வரைவதன்மூலம் பாடத்தில் கவர்ச்சிகொள்கின்றான். தோட்டவேலையும் விவசாயக் கல்வியும் திட்டத்தின் முக்கிய அம்சமாய் அமைகின்றன. ஆகவே பள்ளிக்கூடத்தில் சுறுசுறுப்பும் உற்சாகமும் குடிகொண்டிருக்கும்.

சமூக சம்பந்தமான பாடங்களுள் ஒன்றாகிய குடிஇயல் இத்திட்டத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. இந்தப் பாடத்தினால் பையன் தற்காலப் பிரச்சினைகளை அறிவதோடு சமூக சம்பந்தமாயும் பொது அறிவு சம்பந்தமாயும் சரியான மனப்பான்மையை வளரச்செய்ய வசதி ஏற்படுகிறது. மற்றொரு முக்கிய பாடமான கணிதம் கைத்தொழிலோடு இணைக்கப்படுவதால் அவனுக்குக் கணித பாடத்தில் அலுப்பு ஏற்படாமல் இருக்கின்றது. உதாரணமாகத் தான் நூற்கும நூல்களின் அளவுகளை ஆதாரமாகக்கொண்டு யார், அடி, அங்குலப் பயிற்சி பெறுகின்றான். விவசாயம் பண்ணும் நிலங்களின் அளவு அறியும்போது பரப்புக் காணவும், பணம் கடன் வாங்கல் என்பவற்றின்மூலம் வட்டி விதமும் அறிகிறான். இதனால் குமாஸ்தாக்கள் வேலை செய்யும் வீண் வேலைக் கணக்குகளும் பின்னமாக விடைவரும் மனிதர்களின் எண்ணிக்கையும் இல்லாமற்போகும்.

இந்தக் கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்று தேசப் பொதுப் பாஷை ஹிந்தி ஆதல். ஹிந்தி பொதுப் பாஷை ஆதல்மூலம் ஒன்றாகிற ஒருவித சந்தர்ப்பம் ஏற்படுவதானால் வகுப்புக் கலவரங்கள் ஒழிந்து ஒருவித ஒற்றுமை நிலவக்கூடும். பள்ளிசெல்லும் வயது 7 முதல் 14 வயதுவரை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஐந்தாவது வகுப்புவரை சிறுவர்க்கும் சிறுமியர்க்கும் பாடத்திட்டம் ஒன்றாகவே இருக்கும். (ஏனெனில் இக்கால எல்லைக்குள் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் அதிகமாகத் தோன்றமாட்டாது.) ஐந்தாம் வகுப்பின்மேல் சில மாறுதல்கள் செய்து குடும்ப சாஸ்திரம் போன்றவற்றைப் பெண்கள் பயில்வார்கள். ஏழாம் வகுப்பில் பெண்களுக்குக் குடித்தனப் பாங்கான பயிற்சியைக் கட்டாயமாக்கி வேறு தொழிற் பாடங்களைக் குறைக்கலாம்.

# குழந்தை உள்ளத்தின் வளர்ச்சி

## அதன் தடைகளும் துணைகளும்

(நா. சிவராசா)

பிறந்து சிலதினம் மாத்திரம் சென்ற குழந்தைக்குக் கண், காது முதலிய பொறிகள் தொழிற்பட்டாலும் காட்சி, கேள்வி என்று பகுத்துணர்வு இல்லை. சௌகரியம், அசௌகரியம் என்ற பொது உணர்ச்சிமாத்திரம் உண்டு. ஞாபகசக்தியின் தொழிற்பாடு இல்லை என்றே சொல்லிவிடலாம். துயின்றெழுந்து சுகமாயிருக்கும் குழந்தைக்குப் பசிவரலும் ஒருவகை அசௌகரியம் தோன்றுகிறது. இது வளர்ந்து குழந்தை அழவும் கை காலை யடிக்கவும் தொடங்குகிறது. இது பசியைத் தீர்ப்பதற்காய் அடிப்படையில் நடக்கும் முயற்சியின் பயன். இவ்வடிப்படை முயற்சியை ஊக்கமூலம் என்பர். இவ்வடிப் படை முயற்சியால் எழுந்த செயல்கள் வேறு செயல்களாலும் அவற்றாலொழும் உணர்ச்சிகளாலும் நிறுத்தப்படுவதுமுண்டு. குழந்தை பசித்தழும்பொழுது தாய் பாலூட்டலும் குழந்தை அழுகை நின்றுவிடும்.

இவ்வகை அனுபவங்கள் தொடர்ந்துவரலும் குழந்தை பொறி உணர்ச்சிகளை, வியாக்கியானம் செய்துகொள்ளத் தொடங்குகிறது. பிறந்து சிலவாரம் சென்ற குழந்தை தாயின் குரல் கேட்டதும் அழுகையை நிறுத்திவிடும்; தாய் தன் துன்பத்தை நீக்குபவள் என்று உணர்ந்துகொள்ளுகிறது.

இந்தப் பொறி உணர்ச்சிகள் மூளைச் சிற்றறைகளிலே பதியப்பட்டுத் தெளிவும் ஆழமும் அடைகின்றன. குழந்தையின் செயல்கள் அது அநுபவத் தொடர்ச்சிகளையும் தனி அநுபவங்களையும் உணர்ந்துகொள்ளுகிறதென்பதைக் காட்டுகின்றன. உடுப்பைக் கண்டதும் வெளியே உலாத்தப்போகிறேனென்று குழந்தை அறிந்துகொள்ளுகிறது. ஞாபகசக்தியின் தொழிற்பாடு தொடங்கிவிடுகிறது. சில சில உணர்ச்சிகள்

தெளிவும் திட்பமும் அடைந்துவிடுகின்றன. குழந்தை சில விஷயங்களை அறியத்தொடங்கிவிட்டது.

இவ்வாறு குழந்தை உணர்ச்சிகளைக் கிரகிக்கும் நிலையிலே யிருக்கும்போது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நிலை எதிர் பாராத சந்தர்ப்பங்களையிட்டுத் தொடங்குகிறது. காத்திராப் பிரகாரம் கைபட மேலேதூங்கும் மணி யடிபடுவதைப் பார்த்துக் குழந்தை மேலே தூங்கும் மணியைத் திருப்பித் திருப்பி அடித்து விளையாடத் தொடங்குகிறது. தன் உணர்ச்சியை வெளிப்படுத்தும் சக்தி தனக்குண்டென்பதைக் குழந்தை உணரத்தொடங்குகிறது. தூரம், நிறை, பொருள் என்று குழந்தையறியாவிட்டாலும் பொருளைத் தொட்டும் கடித்தும் உறிஞ்சியும் அசைத்தும் இழுத்தும் பற்பல உணர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளும். இவைகளைப் பின்னர் ஒப்புமை வேற்றுமை கண்டு விஷயங்களைக் குழந்தை படிக்கிறது. செங்கட்டியென்றும் சீலைப்பந்தென்றும் குழந்தை யறியாவிட்டாலும் அநுபவமூலம் கடினமான பொருள்களுக்கும் மிருதுவான பொருள்களுக்குமுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளுகின்றது. தூரத்திலுள்ள வெளிச்சத்தை யெட்டிப் பிடிக்க முயன்று பயன்படாமையைக்கண்டு தூரத்தைப்பற்றி அடிமனத்திற் குழந்தை முதலநுபவம் பெறுகின்றதெனலாம். இவ்வகையிலே சூடு குளிர் என்றும் அறிகின்றது. தன் கை விரலைக் கடித்தும் கால் விரலை இழுத்தும் பெறும் அநுபவங்கள் தன் உடம்பும் தானும் மற்றைய பொருள்களின் வேறு என்று பிற்பருவத்தில் உணர்வதற்குத் துணையானவை.

படிப்படியாய் இவ்வாறு அநுபவங்களை ஒப்பிடுவதனுற் குழந்தை பொருள்களைப்பற்றிய கருத்துக்களைப் பெறவும் பொருள்களை வகுப்புகளாக வகுக்கவும் தொடங்கும். முன்னேயுள்ள பொம்மையும் தாயும் வேறு வேறு இனம் என்று குழந்தை இயல்பாகவே அறிந்துகொள்ளுகிறது. இவ்வாறு குழந்தைகாணும் வகுப்புக்கள் மிகத் திட்டம் குறைந்தவை. தகப்பனைக்கண்டு 'அப்பா' என்று சொன்ன குழந்தை ஆண்களையெல்லாம் அப்பா என்றே சொல்லும். நாற்கால் மிருகங்களையெல்லாம் நாய் என்றே சொல்லும். படிப்படியாய் இந்தப் பொது வகுப்புக்களைச் சிறு வகுப்புகளாக வகுத்துக் கொள்ளும். குதிரையும் நாயும் வேறென்று அறிந்துகொள்

ளும். ஆனாலும் நாயும் செம்மறியாடும் வேறென்று தெரியாமலிருக்கும்.

புதிய அநுபவங்களைக் குழந்தை முந்திய மிக நெருங்கிய ஒற்றுமையுற்ற அநுபவங்களோடு தொடர்புபடுத்திக்கொள்ளும். முதல் முதல் ஒரு தோடம்பழத்தைக் காணும்போது அதைப் 'பந்து' என்றும்; முட்டையை 'உருளைக் கிழங்கு' என்றும் இவ்வாறு புதிய அநுபவங்களைப் பழைய வற்றோடு தொடர்புபடுத்திக் கிரகித்தல் முன்னுணர் காட்சி எனப்படும்.

தெளிவின்றிக் கிடக்கும் உணர்ச்சிகளை ஒப்பிட்டுப் பாகுபடுத்துவதற்கு முதியோர் வழங்கும் சொற்கள் துணையாகும். 'பந்து', 'உருளைக்கிழங்கு' என்று தான் சொன்னவற்றைத் 'தோடம்பழம்', 'முட்டை' என்று முதியோர் சொல்வதைக் கேட்டுக் குழந்தை பந்துக்கும் தோடம்பழத்துக்கும் உருளைக் கிழங்கிற்கும் முட்டைக்கும் உள்ள வித்தியாசங்களை யறிந்து கொள்ளும். பிள்ளையின் மற்ற வளர்ச்சிக்குப் பாஷை செய்யும் துணை மிகப் பெரிதே. முதியோர் வழங்கும் பாஷையைக் கேட்டுக் குழந்தை நேரம், வெளி, பொருள் என்பவற்றை மனதில் அமைத்து உணர்ந்துகொள்ளுகிறது.

காலம் செல்லச் செல்லக் குழந்தை தான் அல்லாத பிற பொருள்கள் தன் விருப்பத்துக்கு இசையாமையையும், தான் ஆகிய உடம்பு தன் விருப்பத்துக்கு இசைவதையும், தான் அல்லாத பிறபொருள்களை ஓரளவுக்குத் தன் விருப்பத்துக்கு இசைக்கும் திறன் தனக்கு உள்ளதென்பதையும் அறிந்து கொள்ளும். தொட்டிலின் பக்கங்கள் தான் விரும்பியபடி அசைவதற்குத் தடையாயிருக்கின்றன; தன் கை, கால்களைத் தான் விரும்பியபடி அசைக்கலாம்; தான் அல்லாத தூரத்திலுள்ள பந்தையும் முயன்று பிடிக்கலாம்.

இவ்வாறு தான் அல்லாத பிறபொருள்களாலே தனது விருப்பங்கள் தடைப்படடுப்பட்டுவரத் தான் என்ற உணர்ச்சி மூன்று நாலு வயசுவரையிற் குழந்தைக்கு வரும்.

புறத்தேயிருந்துவரும் உணர்ச்சிகளைக் கிரகிக்கவும் வகுத்துக்கொள்ளவும் உள்ளீடான வெளிச்சம் ஒன்று தத்தம்

திருப்தியை நாடும். ஊக்க மூலங்களின்வழியே தொழிற்படும் உள் ஊக்கப் பெருக்கொன்று முக்கிய காரணமாயுள்ளது.

உள்ளவளர்ச்சியில் ஞாபகம் முதற்றொடங்கியே தொழிற் படுகின்றது. இதன் துணையால் உணர்ச்சிகள் பதிதல், சேர் தல், உபயோகப்படல் என்பன நடக்கும். உணர்ச்சி படும். ஒவ்வொருமுறையும் மூளைச் சிற்றறைகளிலும் நார்களிலும் சில மாற்றங்கள் நடக்கும். எனவே வேறு கோளாறுகள் இல்லாதுவிட்டால் உணர்ச்சி திரும்பத் திரும்பப் படுவதனால் ஞாபகத்திற் றரிப்பும் விரும்பியபடி நினைவுகூர்தலும் ஏறு மென்று சொல்லலாம்.

மெய்ப்பாடும் ஞாபகத்தோடு நெருங்கிய தொடர்புள் ளது. தன் துன்பத்தைத் தீர்க்கும் தாயைக் குழந்தை சில வாரப் பருவத்திலே இலேசாய் அறிந்துகொள்ளுகிறது.

கண்ணும் கருத்துமுள்ள விஷயத்திலே அவதானம் கஷ்ட மின்றிச் செல்லும். ஏனைய விஷயங்களில் அவதானத்தை இறக்க வழிவகைகளை வகுக்கவேண்டும்.

ஞாபகத்தையும் அவதானத்தையும் தொடுக்கும் சங்கிலி கரிசனை. இயல்பிலே கரிசனை பிறவாவிட்டால் ஏதோ ஒரு வழியிற் கரிசனை பிறப்பிக்கச் செய்வதுண்டு. ஏனெனிற் கரிசனையிருந்தாற் குழந்தை இலகுவாய் ஆழமாய் அவதா னிக்கும்; ஞாபகத்தில் ஆழமான பதிவுண்டாகும்; அறிவு விரைவாய் வளரும். எனவே திருப்பித் திருப்பிப் படித்தலாற் காரியம் முடிந்துவிடுமென்று சொல்லக்கூடாது. கரிசனை யின்றிக் கேவலம் திருப்பித் திருப்பிப் படித்தலிலே அவதானம் இல்லையெனலாம்; அரிகண்டமே பலனாகும்.

ஒருபொருளை அவதானிக்கும்போது அந்தப் பொருளே முன்னிற்கிறது. மற்றையவெல்லாம் தூரத்திலே போய்விடும். அவதானம் பழக்கத்தால் வளர்வதும், முயன்று வந்ததும், முயற்சியின்றி வந்ததும் என மூவகைப்படும். கரிசனை குறைந்த பொருள்களை முயன்றவதானிக்கவேண்டும். முயற்சி யின்றி வரும் அவதானமும் முயன்று வரும் அவதானத்துக்கு ஆதாரம். பழக்கத்தால்வரும் அவதானம் முயன்று தொடங்கி அப்பியாசத்தால் முயற்சியின்றி வரும். விஷயம் சுவையானதா

யில்லையேல் முதியோர்களும் தனித்துத் தொடர்ந் தவதானிப்பது கஷ்டம். அதற்கு அதிக தன்னாட்சி வேண்டும். அதனாற் குழந்தைகளுக் கிது வெகு கஷ்டமென்பது விளங்கும். அவதானிக்கப்படும் பொருள்களை மாற்றினால் அல்லது நோக்கு முகத்தால் மாற்றினால் அன்றி அவதான விஷயத்திலிருந்து கலையும்.

குழந்தைகளை அவதானிக்கும்படி நெருக்க முடியாது. அவர்களுக்கு முழுச்சுவையளிக்கும் பொருள்களை அகற்றிச் சுவையில்லாத பொருள்களை ஒருவிதமாகப் புகுத்தி அதிலே சுவையேற்றச்செய்து இலகுவாய் அவதானிக்கும் நிலையை யாக்கவேண்டும்.

அவதானத்தையாள்வது உள்ளேயிருந்து எழும் கரிசனையே. எனவே குழந்தையை அவதானிக்கச் செய்யவேண்டுமானால் அதன் கரிசனையை யெழுப்பவேண்டும்.

குழந்தையின் அநுபவங்கள் தாமே இனம்; இனமாய்ச் சேர்ந்துகொள்ளுகின்றன. இதற்கு உள்ளீடாய் ஊக்கம் துணையெனலாம். தாயென்றும் தகப்பன் என்றும் பாடசாலையென்றும் விளையாட்டென்றும் சில சில கருத்துக்களைச் சூழ்ந்து மெய்ப்பாடுகளாற் கட்டப்பட்டுப் பெலந்துத் தனித் தன்மையடைந்து 'சிக்கல்கள்' அல்லது 'உணர்ச்சித்தொகுதிகள்' எழும். டாக்டர் றிவோஸ் கொள்கைப்படி தனி அநுபவமே சிலசமயம் மெய்ப்பாட்டுக் கூர்மைசேர்ந்து அடிமனதிற் கிடந்து நமக்குத் தெரியாமல் எமது இச்சை செயல் எண்ணங்களைப் பாதிக்கும். தடைப்பட்ட சில விருப்பங்களும் சிறு பிணக்குகளும் துன்பகரமான மெய்ப்பாட்சி பெற்று அடியிலே கிடந்து எமக்குத் தெரியாமலே எமது செயலையும் சிந்தனையையும் தாக்கும். இவ்வாறு தோன்றாது அடியிலே கிடக்கும் திரட்சிகள் அடக்கப்பட்ட சிக்கல்களெனப்படும்.

'உணர்ச்சித் தொகுதிகள்' அல்லது 'சிக்கல்கள்' ஒன்றோடொன்று தாக்குவதனாலேயே 'மானதசமத்துவம்' உண்டாகிறது. இதுவே ஆரோக்கியத்துக்கும் சந்தோஷத்துக்கும் காரணம். அடக்கப்பட்ட சிக்கல்கள் சென்று தாக்குவதில்லை.

கரிசனையின்றி அவதானமின்றி இயந்திரம்போற் செய்யும் செயல்கள் ஞாபகத்தில் நில்லா. கரிசனையும் அவதானமும்

சேர்ந்தாலே மீட்டுச் செய்வதால் ஞாபகம் பெலப்படும். எனவே, குழந்தை தான்செய்யும் எதையும் முழுமனத்தோடு செய்தல் விரும்பப்படும்.

பிள்ளைகளை அவதானத்தோடு கட்டளை நிறைவேற்றப் பழக்கவேண்டும் இதனாற் சரியான பழக்கங்கள் வருவிக்கலாம். மீட்டுச்செய்வதற்கு நியாயத்தைப் பிள்ளை கிரகிக்கக் கூடுமானாற் பிள்ளைக்கு மீட்டுமீட்டு அப்பியாசித்தல் சந்தோஷகரமான வேலையாகும். கட்டளைகளை, பாஷையை மாற்றி மாற்றி யிடுதலும் மீட்டுச்செய்தல் அவதானத்தோடு நடப்பதற்குத் துணையாகும்.

இயல்பிலே கரிசனை செல்லாத காரியங்களைச் செய்ய வேண்டி யிருக்கும்போது இயன்றவரை ஏதோ ஒருவகைக் கரிசனையை வருவிக்கவேண்டும். பழைய சுவைகளைத் தொட்டுப் புதிய சுவைகளை யாக்கிக்கொள்ளலாம். வீடுகட்டி விளையாடுவதிலே ஈடுபட்டிருக்கும் குழந்தையை ஒரு கதையிலே ஈடுபடச்செய்ய விரும்பினால் அந்தக் கதையிலே குழந்தை கட்டும் வீட்டைப் புகுத்தலாம். குழந்தை வீடு கட்டுவதை விட்டுக் கதையைக் கேட்கவரும்.

பெரியவர்களைப்போல் ஆக விரும்பும் குழந்தைக்கு இப்படிச் செய்து பழகினாற்றான் அப்படி ஆகமுடியும் என்றாற் குழந்தை கஷ்டப்பட்டும் காரியங்களைச் செய்து பழகும். கதை கேட்க விரும்பும் குழந்தைகளுக்கு வாசிக்கப் பழக்கினால், பல கதைகளை வாசித்தறியலாமென்று சொன்னாற் குழந்தை கஷ்டப்பட்டும் வாசிக்கப் பழகும். இதற்கெல்லாம் குழந்தைக்கு எந்தெந்த விஷயங்களில் இயல்பான கரிசனையுண்டென் றறியவேண்டும்.

கரிசனையும் அவதானமும் களைப்பை உண்டாக்கும். ஒரு நாடகத்தைச் சுவையோடும் அவதானத்தோடும் பார்த்தவர்கள் சத்தமிட்டுக் குழப்பஞ் செய்வார்கள். இது நாடகம் பார்ப்பதில் உண்டான களைப்பை நீக்குவதற்குதவியாகும். அவதானத்தாலுண்டான மனக்களைப்புத் தேகத்தைக் காக்கும். முயற்சியின்றிப் பிறக்கும் அவதானமும் களைப்பையுண்டாக்குவதே. இது தாய்மாரால் நன்கு சிந்திக்கப்படவேண்டிய விஷயம். குழந்தைக்கு மந்தமுமாகாது; தொடர்ந்த மனக் கிளர்ச்சியுமாகாது.

அதிக கவர்ச்சியுள்ள சுற்றுடலிற் கவர்ச்சி குறைந்த வேலையைச் செய்வது செவ்வையாக நடைபெறவும் மாட்டாது; நேரமும் அதிகம் பிடிக்கும். அவதானத்தோடு தொடர்ந்து செய்யவேண்டிய வேலையிருந்தால் வேறு கவர்ச்சிகளைக் குறைக்கவேண்டும். தனிமை, நேரவகுப்பு, வேலைச் சீரைப் பேணும் பழக்கம் எல்லாம் அவதானத்தைத் தூண்டற் கேற்றவை. அதிகாலையிற் படித்தலும் அவதானத்தோடு படித்தலுக்குத் துணையாகும். அப்பொழுது மூளையும் தெளிவாயிருக்கும். வேறு கவர்ச்சிகளும் இல்லை. கூரிய அவதானம் முயன்று படிப்படியாய்ப் பழகும் பழக்கம். இந்தப் பழக்கத்தைப் பழகும்போது நேரம் இடம் வகுத்துக்கோடலும் அவதானத்துக்குள்ள தடைகளை நீக்கலும் அவசியமாகும்.

ஒரு விடயத்தை அவதானிக்கப் பழகுவதுபோல் ஒரு விடயத்தை அவதானியாது விடவும் பழகலாம். துக்ககரமான விடயங்களை அவதானியாது விட்டுவிடலாம். தலையிடித்தால் அதைப்பற்றித் திருப்பித் திருப்பிப் பேசுவதாற் பயனில்லை; தாங்கக்கூடுமானால் மறந்துவிடலாம்; அல்லது படுத்துக் கொள்ளலாம். செய்த பிழையை அவதானிப்பதனாலே திருத்தத்துக் கிடமிருந்தாலொழிய அதை அவதானிப்பது சீர்கேட்டுக்குக் காரணமாகும். தங்கள் தங்கள் சீவியத்திலே சீரான பகுதியை எடுத்து அவதானித்தலும் கூட்டாளிகளின் சீரான நடைப் பாகங்களைப் பார்த்து மகிழ்தலும் குழந்தைப்பருவத்திலே முயன்று பழகக்கூடியவை.

இளம்பருவத்திலே தொடங்கி நன்கு முயன்றால் நாம் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் துணையானவற்றை மாத்திரம் அவதானிக்கவும் தடையானவற்றை மறந்துவிடவும் பழகிக் கொள்ளலாம்.

குழந்தைவளர்ச்சியிலே குழந்தைக்கு 'ஏழைமைச் சிக்கல்' உண்டாகாமற் சாவதானமாயிருத்தலும் அவசியமாகும். 'நீ சின்னப்பிள்ளை; இது செய்யமாட்டாய்' எனலும், 'நீ சின்னக் குழந்தை; வீட்டிலே பெரிய ஆட்கள் உடுத்த பழம் சீலையிலே சட்டை தைத்தாற் போதும்' எனலும் கூரிய உணர்ச்சியுள்ள குழந்தைக்கு ஏழைமைச் சிக்கலை வருவிக்கும்.

# சைவாசிரிய கலாசாலைப் புராணம்

(பண்டிதர் சு. இராசையா — பழைய மாணவன்)

காப்பு

சைவம் வாழத் தமிழ்மறை ஓங்கிட
வையம் போற்ற வளரெங் கலாசாலைக்
கெய்து மிக்கதை யின்கவி யாற்றரச்
செய்வி நாயகன் சேவடி சிந்திப்பாம்.

அவையடக்கம்

கண்ணி லாதொரு சித்திரங் கண்டதை
வண்ணந் தீட்டி வரைதல் நிகர்க்குமால்
எண்ணில் நற்கவி எங்கணுங் கண்டிதில்
நண்ணுஞ் செய்கை நகையும் விளைக்குமே.

## உற்பத்திப் படலம்

நாட்டு வருணனை

வேறு

வான்றொடு வரைக டோறும் வளர்பெரு நதிகள் யாவும்
தான்றரு மணிக்குத் தக்க தரளமும் பிறவும் வீசி
ஆன்றவர் தகைமை காட்டு மாழியாற் சூழு நாட்டில்
தோன்றிய ஈழ நாடு தொன்மையில் மிளிரு நாடு.

நகர வருணனை

செந்தமிழ் வளனு மெங்குஞ் சிவநெறி வளனுந் தங்கும்
நந்தலில் திருவும் நாடும் நானில வளனுங் கூடும்
செந்திரு வனையார் வைகுஞ் செய்மணிக் குன்று போன்றே
இந்தமா நிலமீக் கூர யாழ்நக ரிருக்கு மாதோ.

ஸ்தாபனம்

ஒவ்வொரு சமயத் தோர்க்கும் ஒவ்வொரு பயிற்சிச் சாலை
செவ்விதி னிருப்பச் சைவர்க் கிலாமையா லவர்க்குச் செய்த
திவ்வித மென்ன லாமோ யேசுவின் மதத்தோ ரின்னல்
எவ்வித மெனினுஞ் சைவா சிரியர்க்கோர் பயிற்சிச் சாலை

வைத்திடக் காரை தீவு வருமரு ணாச லப்பேர்
மெய்த்தவன் செய்த தொண்டு மேதினி மறக்கற் பாற்றே
ஐக்கிய மாகக் கோப்பாய் அரசினர் பயிற்சிச் சாலை
வைத்தனர் தனித்துச் சைவ மதத்தினர்க் கில்லை யந்நாள்.

நாவலர் காட்டு நல்ல வழியினிற் செல்லச் சைவக்
காவல ரான இராம நாதரும் பிறருங் கூடி
ஆவலாய்ச் சைவ வித்தி யாவிர்த்திச் சங்கந் தன்னைக்
காவலாய் வைத்தார் சைவக் கல்வியை வளர்க்க வென்றே.

ஸ்தாபகர்

எத்திசை தனிலும் இராச ரத்தின மாகப் போற்றும்
அத்தகு நாமத் துள்ளோன் அத்துவக் காத்து வாவோன்
மெய்த்தவ முடையோன் சட்ட சபையினில் மேவுங் காலை
வைத்தனர் பெரியோர் சங்க மனேஜரராய்த் தொண்டு செய்ய.

அன்னவன் செய்த சைவத் தொண்டினுக் களவு முண்டோ
பன்னெடுங் காலஞ் சைவர்க் கிலாதவோர் பயிற்சிச் சாலை
மன்னிய திருநெல் வேலி மாண்பதி வைத்தான் சைவர்
என்னமா தவமோ வென்ன இருபத்தெட் டாண்டா மெல்லை.

## ஆசிரியப் படலம்

அதிபனாய் முதலில் வந்தான் அமைந்தநற் குணமுங் கல்வி
நிதியமும் படைத்தோன் கிருஷ்ண பிள்ளையாங் கரவை வாசன்
புதியன காணு வோர்க்குப் புதியவன் இரண்டாண் டின்பின்
அதிபனாய் வந்தோ னாற்றல் அளவிடற் பால தாமோ.

சற்குணன் கலைவ லாளன் சரித்திரப் புலமை பெற்றோன்
சொற்பொழி வாளன் சுவாமி நாதனும் நாம முற்றோன்
மற்றவர் மதிக்க வாழ்வோன் மயிலிட்டி வாசன் மேலோன்
விற்பனன் கழக *மென்றும் விளங்கிட மேவு கின்றான்.

எங்கள் கலாசாலை அதிபர்



திரு. சி. சுவாமிநாதன் B. A., அவர்கள்

வித்துவான் முதலா யுள்ள விற்பனர் கணித நூலோர்
சித்திரம் வல்லோர் பாலர் பயிற்சியிற் சிறந்த வீரர்
எத்திசை தனிலும் போற்ற இருந்தனர் உதவி யாக
இத்தினம் மேவு கின்ற இருவரை எங்ஙன் சொல்வேன்.

வேறு

செந்தமிழு மாங்கிலமுஞ் சேர்ந்த வீரன்
சிந்தாந்த சாத்திரத்திற் சிறந்த தீரன்
அந்தமிலா யோசனையி லாழ்ந்து தோன்றும்
அளவெட்டி எனுநகரில் எழுந்த ஞானி
எந்தமுளம் விட்டகலான் எதிலும் வல்லான்
எமதுகலா சாலைக்கோ ரச்சா யுள்ளான்
சந்ததமுங் கலையமுத முண்ணுந் தேவன்
கைலாச பதியென்னு நாமத் தோனே.

சீரியநற் குணங்கள்பல சேர்ந்த ஆழி
செந்தமிழ்த்தேன் மழைபிலிற்றுஞ் சிறந்த மேகம்
ஆரியமுஞ் செந்தமிழும் அமைந்த குன்றம்
ஆசிரிய கலாசாலைக் கேற்றுந் தீபம்
ஓரியல்பு மில்லாத வென்னைத் தானும்
ஒருபொருளாய் மதித்துதவி செய்த வள்ளல்
பாரிலுயர் மட்டுவிலைப் பதியாக் கொண்ட
பண்டிதனுங் கணபதிப் பிள்ளை மற்றோன்.

**வாழ்த்து**

செந்தமிழு மாரியமுஞ் சிவணி வாழி
சிவசமய நெறிவளர்க்குஞ் சங்கம் வாழி
சந்ததமுஞ் சைவர்பயில் கழகம் வாழி
சாருமிரு பாலாருந் தழைத்து வாழி
எந்தமொடு நானூற்றைம் பதின்ம ரீங்கே
இன்றுவரை கலைபயின்றோர் என்றும் வாழி
அந்தமிலாக் கருணையனல் ஆழி ஞாலம்
அல்லலிலா தென்றென்றும் வாழி வாழி.

# இலக்கணம் கற்பிக்கும் முறை*

நான்காம் வகுப்பாரும், அதற்கு மேல்வகுப்பாரும் தத்தம் தகுதிக்கேற்ப வசனங்களையும் செய்யுள்களையும் பொழிப்பாகவன்றி, வாக்கியங்கள் சொற்கள் தொடர்களின் பொருளை வரையறுத்துப் படிக்கவேண்டியவர்கள். இவற்றின் பொருளை வரையறுத்துப் படித்தலாவது இவற்றின் இலக்கணங்களை யறிதலாம். மாணவர்கள் முதலிற் பயிலுவது வாக்கியங்களாதலின், வாக்கிய இலக்கணங்களை முன்னும், சொற்கள் வாக்கிய உறுப்பாதலின், வாக்கியத்தோடு தொடர்புபடுத்திச் சொற்களின் இலக்கணத்தை யதன்பின்னும், தனிச் சொற்களின் பொருள்கொண்டு தொடர்ச் சொற்களின் பொருள் வேறுபாடுகளை உணர்தல் கூடாமையான் அதன்பின் தொடரிலக்கணத்தையும், தொடர்ச் சொற்களின் பொருள் வேறுபாடுபற்றிப் புணர்ச்சிவிதியும், புணர்ச்சிவிதிபற்றிப் பொருள் வேறுபாடும் நிச்சயிக்கப்படுமாதலின் அத் தொடரிலக்கணத்தோடு தொடர்புபடுத்தி முன்பின்னாகப் புணர்ச்சியிலக்கணமும் படிப்பித்தல் முறையாகும். ஒரு மொழி இலக்கணமாகிய பகுபத முடிபு படிப்பித்தற்குச் சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், புணர்ச்சி விதி மூன்றும் வேண்டுமாதலின் அது அவ்விலக்கணங்கள் மூன்றும் படித்தபிறகுதான் படிப்பிக்கவேண்டும். வாக்கியம், சொல், தொடர், புணர்ச்சி, பகுபதம் என்ற கிரமத்திற் படிப்பிக்கும்போது அவ்வவ்விடத்திற்குவேண்டிய எழுத்திலக்கணங்களை அவ்வப்போது எடுத்தாளலாம். வாக்கியத்திலிருந்து தொடங்கும் இந்தக் கிரமந்தானே [பகுபதந் தவிர] நான்காம் வகுப்புத் தொடக்கம் மேலேயுள்ள எல்லா வகுப்புக்களுக்கும் பொருத்தமானது. ஆனால், ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு பகுதியிலும் ஏற்ற அளவை உபாத்தியாயர் வரையறுத்து நிச்சயிக்கவேண்டும்.

நான்காம் வகுப்புக்கு வாக்கியத்தின் எழுவாயும், பயனிலையும் மாத்திரம் படிப்பித்தாற் போதும். ஐந்தாம் வகுப்புக்கு அவற்றோடு செயப்படுபொருள், விசேடணம் என்னுமிவைகளும், ஆறும், ஏழாம் வகுப்புக்களில் எழுவாய் முதலியவற்றின் சிறப்பியல்புகளும், தொடர் வாக்கியங்களும், எட்டாம்வகுப்பிலும், அதற்கு மேல்வகுப்புக்களிலும் பயனிலையை எடுத்துக்கொண்டு அதனோடு வேற்றுமைகளும், எச்சங்

* இது பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய விரிவுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட சில குறிப்புக்களின் தொகுதி.

களும், முடியும் முடிபுவிதிகளும், தனி வாக்கியங்களைத் தம்முளடக்கிய மகாவாக்கியங்களும் படிப்பிக்கத்தக்கவை.

பங்கேரணம் என்று வழங்குகின்ற எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றின் விசேடணங்கள் படிப்பிக்கும் முறை, கீழ் வகுப்புகளில் சிறுச்சிறு வாக்கியங்களாலான வசனங்கள் செய்யுள்கள் படிப்பித்தற்குத்தான் பொருத்தமானது. மேல்வகுப்புக்களில் நீண்ட வசனங்கள், செய்யுள்கள் படிப்பிக்கும்போது பயனிலையை எடுத்துக்கொண்டு அதனோடு சொற்கள் தனித்தும், தம்முட் டொடர்ந்தும் வந்து முடியும் முடிபுகள் படிப்பிப்பதே முறையாகும். அதில் முதலாம் அம்சம் பயனிலை.

இரண்டாம் அம்சம் பயனிலையை அவாவுவன. [எட்டு வேற்றுமைகளும், எச்சங்களும். எச்சங்கள் இருவகை. பெயரெச்சம், வினையெச்சம். பெயர்ப் பயனிலையாயின் பெயரெச்சமும், வினைப் பயனிலையாயின் வினையெச்சமும் வரும்.]

மூன்றும் அம்சம் அவாவுவனவற்றைத் தனித்தும் தொடர்ந்தும் அவாவுவன. ஒன்பது வகையுள் ஒன்றை மற்றொரு ஒன்பது அவாவலாம். அவற்றுள் ஒன்றை மற்றொரு ஒன்பது அவாவலாம். இப்படியே தொடர்ந்து நடக்கலாம்.

நான்காம் அம்சம் விசேடணம். அவாவுவன வேறு, விசேடணம் வேறு. கருங்குதிரை என்ற இடத்தில் 'கருமை' விசேடணம்.

ஐந்தாம் அம்சம் வாக்கிய உறுப்பு. அவாவுகின்ற ஒன்பது வகை யுறுப்புக்களுட் சில வாக்கிய ரூபமாகவும் வரலாம். அவை கிளைவாக்கியம் எனப்படும். அவையும் பயனிலையை யெடுத்துக் கொண்டு பின் முடிவுசெய்யப்படும்.

ஆறும் அம்சம் முடிவு வேண்டாத சொற்கள். இனி, மற்று போல்வன.

## இரண்டாவது சொல்லிலக்கணம்

**சா**தாரண வழக்கிலுள்ள பெயர்களும் தெரிநிலை வினைகளும் நான்காம் வகுப்புக்குப் படிப்பிக்கத்தக்கவை. பெயர்கள் படிப்பிக்கும்போது ஐம்பொறிகளாலும் மனத்தாலும் நாம் அறிகின்ற பொருள்களை உணர்த்தும் சொற்கள் பெயர்கள் என்று படிப்பித்து வாசித்த வசனங்கள் செய்யுள்களில் அப்பியாசங்கள் கொடுக்க வேண்டும். பெயர்களின் வகை வேண்டியதில்லை. கூடுமானல் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர் என்ற கூறுபாடு படிப்பிக்கலாம்.

இந்தப் பெயர்கள் எழுவாய்களாயிருக்கப் பயனிலையாய் வரக்கூடிய தெரிநிலைவினை முற்றுக்களை இவ்வகுப்புக்குப் படிப்பிக்கத் தக்கவை கள். இடைநிலையைப் பிரித்துக்காட்டாமல் அவ்வினை மூன்றுகாலங் களிலும் வரும் ரூபங்களைக் காட்டலாம். ஒவ்வொரு திணைப்பெய ருக்கும் அவ்வத் திணைக்குரிய வினை வருதலை வற்புறுத்தவேண்டும். வினைகளில் உடன்பாடு, எதிர்மறை, வினா ரூபங்களும் படிப்பிக்கத் தக்கவை. ஒவ்வொரு சிறு அம்சம் படிப்பித்த முடிபிலும் அப்பி யாசம் எழுத்திலும் வாய்முறையிலும் விஸ்தாரமாக நடாத்த வேண்டும்.

ஐந்தாம் வகுப்புக்கு மேற்காட்டியவைகளோடு, குணப்பெயர் தொழிற்பெயர்களைச் சேர்த்துப் பெயரில் மூன்றுவகையும், இருதிணை ஐம்பாற் பாகுபாடுகளும், வேற்றுமை ரூபங்களும், தெரிநிலைவினைப் பெயரெச்ச வினையெச்சங்களும் படிப்பிக்கத்தக்கவை. பெயரில் குணப்பெயர், தொழிற்பெயரைச் சேர்க்கும்பொழுது பெயரின் சிறப்பிலக்கணத்தை விஸ்தாரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஆறும் வகுப்பிற்குப் பொருட்பெயரைப் பொருள்—இடம்— காலம்—சினை என நான்குவகைப்படுத்திக் குணம், தொழில் இரண் டையும் கூட்டி அறுவகைப் பெயரும் அவ்வறுவகைப் பெயரிலிருந்து பிறக்கும் பொருளால் வருபெயர் முதலிய அறுவகைப் பெயரும் ஆகப் பன்னிரண்டுவகைப் பெயரும் திணைப் பாகுபாடு, இடப் பாகு பாடுகளும், வேற்றுமை, ஆகுபெயரென்பனவும், தெரிநிலை வினை முற்றுப் பெயரெச்சம், வினையெச்சம் இவற்றின் உடன்பாடு எதிர் மறைகளும், ஏ, ஓ, உம் என்ற இடைச்சொற்களின் ஆவசியகமான பொருள்களும் படிப்பிக்கத்தக்கவை.

பொன் என்ற பொருளின் பெயரும் பொன்னன் என்ற பொரு ளால் வருபெயரும் பொருட்பெயர் எனப்படுமென்றும் இவ்வாறே பன்னிரண்டுவகைப் பெயரும் ஆறு வகைகளாய் வழங்குமென்றும் படிப்பித்தல்வேண்டும். திணை பால் இடம் காட்டிப் பெயர்ச்சொல் லிலக்கணங்களும் இவற்றோடு காலமும் சேர்த்துத் தெரிநிலை வினை முற்று இலக்கணமும் சொல்லப் பயிலவேண்டும். வேற்றுமையில் பொருளின்றி உருபுமாத்திரம் படிப்பித்தல் போதியது.

ஏழாம் வகுப்புக்கு இடையடியால் பிறந்த பெயரும் மேற்காட் டிய பெயர்களோடு சேர்ந்து அறுவகையாய் அடங்குமாறும்; திணை, பால்களில் சிறப்பாகப் பொதுப்பெயர் வேற்றுமைப் பொருள்களும் வினையின் விசேட இலக்கணமும், தெரிநிலை குறிப்புவினை என்ற வகைகளும், எச்ச வாய்ப்பாடுகளும், மேற்காட்டிய இடைச்சொற் களின் பொருண்முழுவதும் படிப்பிக்கத்தக்கவை.

வேற்றுமை படிப்பிக்கும்போது. பொருளின் வேறுபாடுதான் வேற்றுமையென்றும் அவ்வேறுபாட்டை உணர்த்தும் உருபும் வேற்றுமையெனப்படுமென்றும் விளக்கவேண்டும். வினை படிப்பிக்கும்போது பொருளின் புடைபெயர்ச்சிதான் வினையென்பதைப் பல உதாரணங்கள்மூலம் காட்டவேண்டும். சிறப்பாகத் தெரிநிலை வினையையும் பொதுவாகக் குறிப்பு வினையையும் படிப்பிக்கலாம். தெரிநிலை வினைக்கும் தொழிற்பெயருக்கும் பேதம் விளக்கல் வேண்டும்.

வினையெச்ச வாய்பாடுகளில் முக்காலத்துக்கும் பிரதானமான மூன்று வாய்பாடு போதுமானது. செயவென் வாய்பாடு முக்காலத்துக்கும் பொதுவாக வழங்குவதை வழக்கிலும் இலக்கியங்களிலும் காட்டவேண்டும். தெரிநிலை வினைமுற்றுப் படிப்பிக்கும்போது சாதாரண முன்னிலை வினைமுற்றிற்கும் ஏவல் வினைமுற்றிற்கும் பேதம் காட்டல்வேண்டும். தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினைகளும் விளக்கவேண்டியவைகள்.

எட்டாம் வகுப்புக்கு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், இடை, தொழிற்பண்பு, தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என்ற பத்துத் தானங்களிலிருந்து பெயர் வருமாறும், ஒவ்வொரு வேற்றுமைக்கும் உரிய பொருள்கள் ஒவ்வொரு பிரதான பொருளில் அடங்குமாறும், பொருண்மயக்கம், உருபு மயக்கங்களும் தொழிற் பண்பிலிருந்து பிறக்கும் வினை முதற்பெயர் செயப்படு பொருட்பெயர் கருவிப் பெயர்களினியல்புகளும், தெரிநிலைவினை குறிப்புவினை வேறுபாடும், தெரிநிலை வினையெச்ச வாய்பாடுகளும், எச்ச முடிபுகளும், இடைச்சொல் வகைகளும், பிரதான இடைச்சொற் பொருள்களும், உரிச்சொற்களும் படிப்பிக்கவேண்டியவை. குறிப்புவினை படிப்பிக்கும்போது அதற்குப் புடைபெயர்ச்சியின்மையும், தெரிநிலை வினையிலிருந்தன்றிப் பெயரிலிருந்து வேறுபாடும், குறிப்புவினை பிறக்குமடிகளும் படிப்பிக்கவேண்டும்.

இந்தக் கிரமத்தில் படித்து வளரும் மாணவர்கள் எட்டாம் வகுப்புக்கு மேல்வகுப்பில், 'நன்னூற் காண்டிகையுரை'யில் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல்களை உரையுடன் படிக்கலாம். இவ்வாறு படிப்பவர்கள் காண்டிகையுரையில் வரும் பரீக்ஷை வினாக்களுக்கு விடையும், சொல்லிலக்கண சூசிக்குப் படித்த இலக்கியங்களில் உதாரணமும், அப்பியாசங்களுக்கு இலக்கண விதிகளும் தவறாது எழுதிப் பயிலல் வேண்டும். வினாக்களுக்கு விடையெழுதும்பொழுது, வினா வசனத்திலிருந்து விடைக்குக் கொள்ளக்கூடிய பகுதிகளைக் கொண்டு, சேர்க்கவேண்டிய பகுதியை எவ்வளவுக்குச் சுருக்கிச் சேர்க்கமுடியுமோ அவ்வளவுக்குச் சேர்க்கும்

முறையை மாணவர்கள் எழுதிய விடையைத் திருத்தியதன்மூலம் ஆசிரியர் பயிற்றவேண்டும். இதனால் இலக்கண விதிகளை யறிதலே யன்றி இலக்கணத்தின் பயனாகிய பாஷைத் திட்பமும் சித்திக்கும்.

## மூன்றாவது தொடரிலக்கணம்

நான்காம் ஐந்தாம் வகுப்பாருக்கு எழுவாய்த்தொடரும், ஆறும் ஏழாம் வகுப்பாருக்கு அதனோடு விளித்தொடரும், வேற்றுமைத் தொடர்களும், பெயரெச்ச வினையெச்சத் தொடர்களும் படிப்பிக்கத் தக்கவை. ஒவ்வொரு தொடரும் படிப்பித்தபிறகு படித்த இலக்கியங்களிலே போதிய அப்பியாசம் கொடுக்கவேண்டும். எட்டாம் வகுப்பாருக்கும், அதற்கு மேல்வகுப்பாருக்கும் தொடர் படிப்பிக்குங்கால் புணர்ச்சிக் காரணங்களாகிய மயக்கவிதியின்மை, பொருளுணக்கம் என்னும் இரண்டையும் விளக்கி, பொருளுணக்கத்தின் அல்வழி வேற்றுமை வகைகளையும், அவற்றின் விரியாகிய இருபது தொடர்களையும் படிப்பிக்கவேண்டும். புணர்ச்சிக் காரணம் படிப்பிக்கும்போது எழுத்து இலக்கணத்தின் இன்றியமையாமையை விளக்கவேண்டி வரும். தொடர்கள் தழுவுதொடர், தழாத்தொடர் என இருவகைப்படுமென்பதும் விளக்கவேண்டும்.

## நான்காவது புணர்ச்சிவிதி

நான்காம் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் உடம்படுமெய்த் தொடர்கள், உயிரொடு புணர்ந்த குற்றியலுகரத் தொடர்களைப் பிரிக்க அறியவேண்டும். ஆறும்வகுப்பு மாணவர்கள் அவற்றோடு ண, ள, ன, ல இவற்றின்முன் த, ந க்கள் புணர்ந்த புணர்ச்சிகளைப் பிரிக்கப் பயிலவேண்டும். ஏழாம் வகுப்பு மாணவர்கள் எழுத்து இலக்கணத்தில் முதனிலை, இறுதிநிலைகளை அறிந்து இருபத்துநாலு ஈற்றோடு நான்கு கணமும் புணருகின்ற பொதுவிதிகளை அறிந்திருக்கவேண்டும். பொதுவிதிச் சூத்திரங்களை மனனம் செய்விக்கலாம். இறுதிநிலை படிப்பிக்கும்போது எழுத்திலக்கணத்தில் குற்றியலுகரம் படிப்பிக்க நேரிடும். அளபெடைகள் இலக்கியங்களில் வரும்போது கீழ்வகுப்பிற் பொதுவாகவும், மேல்வகுப்புக்களில் இசைநிறை, இன்னிசை, சொல்லிசை, இயற்கை என்னும் பேதங்களை விளக்கிச் சிறப்பாகவும் படிப்பிக்கவேண்டும். இவ்வகுப்பிற் போலிகளும் படிப்பிக்கப்படலாம். எட்டாம் வகுப்புக்குப் புணர்ச்சிக் காரணங்களும், பொதுவிதி, சிறப்புவிதிகளின் இயல்புகளும், நிலைமொழிச் செய்கை, வருமொழிச் செய்கைகளின் இயல்புகளும் முதலில் விளக்கவேண்டும். இருபத்துநான்கீற்றோடும் நாற்கணமும்

புணரும் பொதுவிதிகளைத் தொகுத்து முதலிற் படிப்பித்து, அதன் மேல் அப்பொதுவிதியி லடங்காத ஆவசியகமான சிறப்பு விதிகளைப் படிப்பிக்கவேண்டும். விதிகளை, படிக்கும் இலக்கியங்களில் ஆளாவழி அவைகள் பயன்படா. இவ்வகுப்பினர் தமிழில் வந்து வழங்கும் வடமொழித் தொடர்களு மியல்புகளு மறிந்திருத்தல் வேண்டும்.

எட்டாம் வகுப்புக்கு மேலேயுள்ள வகுப்பார் புணரியல்களில் சூத்திரங்களையும், உரைகளையும் படித்துப் பரீக்ஷை வினாக்களுக்கு விடையும், அப்பியாசங்களுக்கு விதிகளும் எழுதிப் பயிலவேண்டும்

## ஐந்தாவது பகுபதமுடிபு

தனிச்சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், புணர்ச்சிவிதி, பெயர்வினையடிகள், விகுதிகள் அறிந்தவர்கள் பகுபதங்களைப் பகுத்துப் புணர்த்தி முடிபுசெய்தற்கு அருகர்களாவர். பெயர்ப் பகுபதமும் குறிப்பு வினையும் உண்டாக்குவதற்குப் பகுதியும் விகுதியும்; தெரிநிலை வினைப் பகுபதம் உண்டாக்குவதற்கு அவற்றோடு இடைநிலையும் கொடுக்கவேண்டியவைகள். சாரியை இவ்வுறுப்புக்கள் வழக்கில் இயையாதவழி இடையில் சேர்த்து இயைத்தற்குரியது. அவ்வப் பகுபதங்களை உண்டாக்குவதற்குரிய உறுப்புக்களை ஒன்றோடொன்று புணர்ச்சி விதிப்படி புணர்த்தும் வழிவரும் தோன்றல், திரிதல், கெடுதல்கள் சந்தியெனப்படும். புணர்ச்சி விதியின்றி வரும் தோன்றல், திரிதல், கெடுதல்கள் விகாரமெனப் படும். இந்த விகாரங்கள் விரியால் ஒன்பது வகைப்படும். பகுபத முடிபில் சந்தியும் விகாரமுமே பிரதானமாக விளக்கவேண்டிய உறுப்புக்கள்.

இனி, விசேடமாகப் பொருளிலக்கணத்தில், நிலம், பொழுது இவற்றின் பாகுபாடுகள், இன்றியமையாத சில கருப்பொருள்கள், கிளவித்தலைவன், பாட்டுடைத்தலைவன், தோழி, தலைவி இயல்புகள், சிலதுறைகள் என்னும் இவைகளும், யாப்பிலக்கணத்தில் எதுகை, மோனை, வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, விருத்தம் இவற்றினியல்புகளும், அணியிலக்கணத்தில் தன்மை, உவமை. உருவகம், சிலேடை, தற்குறிப்பேற்றம், ஒட்டு, வேற்றுப்பொருள் வைப்பு, உயர்வுநவிற்சி என்னும் அணிகளும் மேல்வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் படிக்கும் இலக்கியங்களுக்கு உபகாரப்படும் வகையில் நல்லாசிரியர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும்வழிப் படிப்பிக்கக் கடவர்.

# பூமிசாஸ்திரபாட உபகரணங்கள்

(நா. குணரத்தினம்)

ஒரு பாடம் இலகுவாகவும் ருசிகரமாகவும் கற்பிப்பதற்கு உபகரணங்கள் இன்றியமையாதன. அதேபோன்று பூமி சாஸ்திரபாடம் கற்பிப்பதற்கும் உபகரணங்கள் இன்றி யமையாதன. பாடத்திற்கேற்ற போதிய உபகரணங்கள் இருத்தல் வேண்டும். அதனை ஆசிரியர் மிகச் சாவதான மாய் உபயோகித்தல் வேண்டும். உண்மைப் பொருட்களை நேரே காட்டிப் படிப்பித்தல் நல்லது என்பர் ரூசோ. பொருட் கள் கிடையாவிடத்து மாதிரி உருவங்கள், படங்கள் முதலி யன உபயோகிக்கப்படலாம். உபகரணங்கள் உபயோகிப்ப தால், விஷயம் ஐயந்திரிபற விளக்கலாம்; விஷயத்தை வாழ்க்கையோடு தொடர்புறுத்தி நல்ல விளக்கமேற்படுத்த லாம்; புதிய விஷயங்களை மாணவர் தாமாகவே காண்பர்; விஷயங்கள் மனத்தில் ஆழமாய்ப் பதியும்; மாணவர்களின் ஆர்வம் இலகுவில் இழுக்கப்படும். இலக்கியத்தைப்போ லாகாமல் பூமிசாஸ்திர உண்மை உலகைப்பற்றியது. உல கையும் சனங்களையும் அவதானித்துப் பல இயற்கைக் காட் சிகளையும் அறிதல்மூலம் பூமிசாஸ்திரம் உண்மையை உரைப்ப தென்பதை மாணவ ரறியவேண்டும். மாணவர் உண்மை யைக் காண எப்படி வழிநடத்தலாம்? பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் நேரே காட்டல் ஒரு வழி. அதற்கு உபகார மானது சுற்றுப் பிரயாணம். சுற்றுப் பிரயாணமூலம் மாண வர் ஆழமானதும், கழங்கமற்றதுமான பூமிசாஸ்திர அறி வைப் பெறுவர். சுற்றுப் பிரயாணமூலம் எல்லா இடத்தை யும், எல்லா விஷயத்தையும் காட்ட முடியாதவிடத்து, உப கரணமூலமாகப் பொருட்களைக் காட்டிப் பூமிசாஸ்திரபாடம் உண்மையை அடிப்படையாகக் கொண்டதென்பதைக் காட்ட லாம். இதற்காய முக்கிய பூமிசாஸ்திர உபகரணங்கள் :- பூகோள உருண்டை, தேசப் படம், சித்திரப் படம், மாதிரி உரு வம், புள்ளிவிபர அட்டைகள், சாஸ்திரக் கருவிகள் என்பன,

## பூகோள உருண்டை :-

இது பூமிசாஸ்திரம் படிப்பதற்கு மிக அத்தியாவசியமான கருவிகளுள் ஒன்று. பிரதம பாடசாலைக்கு மிகவும் வேண்டியது. பூமியின் உருவத்தைப் பிள்ளையின் மனத்தில் பதிக்க வல்லது. இயன்றவரை இதனை உபயோகிக்க வேண்டும். அடிக்கடி இது பிள்ளையின் கண்ணுக்குப் புலப்பட வைக்கவேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு அடி விட்டமுள்ள ஒரு கோளம் இருத்தல் அவசியம். இதனை ஆசிரியரே ஆக்கலாம்.

*உபயோகங்கள் :-* 1. நிலமும் நீரும் பூமியின் மேற்பரப்பிற் பரந்திருப்பதைக் காட்டுதல் 2. கண்டங்களின் பருமனை ஒப்பிட்டுக் காட்டுதல். 3. குறித்த கண்டம் அல்லது குறித்த இடம் பூமியின் எவ்விடத்திலிருக்கிறது என்பதை அறிதல். 4. படங்களை உபயோகிப்பதனுலே உண்டாகும் பிழையான விளக்கத்தைத் தவிர்த்தல். 5. பெரிய தூரங்களை அளக்க உபயோகப்படல். 6. பூமியின் தோற்றத்தைச் சரியாய் அறிதல். 7. பகல் இரவு, சீதோஷ்ண வேறுபாடு உண்டாவதன் காரணத்தைக் காட்டல். 8. சீதள வலைய பருவ வேறுபாட்டைக் காட்டல். 9. ஆகாயப்பாதை கடற்பாதைத் திசைகளைக் காட்டல்.

இரண்டாம் வகுப்பிற் பூமியின் தோற்றம், பகல் இரவு காட்ட இது உபயோகப்படுதல் கண்கூடு. மேல் வகுப்பார்க்குக் கோடையிற் பகல் கூடுவதன் காரணத்தை விளக்கலாம். ஒருகோளத்தை அதன் அச்சு பூமியின் அச்சுக்குச் சமாந்தரமாக வைத்தால் அவ்வச்சுத் துருவ வெள்ளியை நோக்கி நிற்கும். இப்படியாக ஒருகோளத்தை வெயிலில் வைத்துப் பார்த்துக்கொண்டு வந்தாற் பகல் கோடையிற் கூடுவதன் காரணத்தை யறிவர். இன்னும் வெவ்வேறு தேசங்களில், வெவ்வேறு காலங்களிற் பகல் வித்தியாசப்படுவதன் காரணத்தையு மறிவர். பெரிய வகுப்புகளில் இவ்விஷயத்தைச் சிறிய 'றபர்'க் கோளங்களின்மூலம் விளக்கலாம்.

## தேச படங்கள் :-

பூமிசாஸ்திரபாட உபகரணங்களுள் தேச படங்கள் முக்கியமானவை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், பாட

மாகாணப்படம், இலங்
சாலையின் தரைப்படம், கிராமப்படம்,
கைப்படம், இந்தியாப்படம், உலகப்படம் ஆகியவை ஆவசியகம்
தேவையாகும். இயற்கை அமைவு, சீதோஷ்ணம், மழை வீழ்ச்சி,
வியாபாரப் பாதைகள் முதலியவற்றைக் காட்டத் தனித்தனி
படம் தேவையாகும். தேசப்படங்கள் இடங்கள், பரப்புக்களைத்
திட்டமாய் அறிவிப்பன. அவைகளைக் கண்ணாலே பார்க்கத்தக்க
தாய் எடுத்துக் காட்டுவன. படம் எம்முன் இருந்தால் இலங்கை
உருவம் எம்முன்வரும். தேசப்படம் இல்லாது நிலையத்தையும்,
பங்கீட்டையும் அறிதல் இயலாது. கொழும்பு — லண்டன் ஆகா
யப்பாதை படிப்பிப்பதாயின் தேசப்படம் உபயோகப்படும்.
பார்த்தவுடனேயே இது செங்கடல், இது அலெக்சாந்திரியா என
அறிவர். எனவே தேசப்படம் பூமிசாஸ்திரத்தைப் பூரணப்
படுத்துகிறது.

## கீழ்வதுப்பில் படங்களின் உபயோகம் :-

வீடு அல்லது கிராமப்பகுதிப் படம், பூமிசாஸ்திரக் கதைப் படம் பிள்ளைகளைக்கொண்டே கீறுவிக்கலாம். வடக்குத்திசை வடக்கே இருக்கும்படி வைத்து, இடத்தொடர்பைப் பிள்ளைகளறியும்படி விடலாம். பூமியின் ஒருபகுதியை எடுத்துக் காட்டுவது படம் என்பதைப் பிள்ளைகளறிந்திருக்கவேண்டும். கோளத்திலேயுள்ளதைப் பெருப்பித்த தென்பதையும் அறியவேண்டும்.

## மேல்வகுப்பில் படங்களின் உபயோகம் :-

இவ்வகுப்பிலே காற்றுக்கள், மழைவீழ்ச்சி, உஷ்ணநிலை, தாவரம் முதலியவைகளைக் காட்டும் விசேட படங்கள் உபயோகிக்கவேண்டும். சம உஷ்ணநிலை ரேகைகளைக் காட்டும் படங்களும், சம பவன அமுக்கப் படங்களும் வெவ்வேறு பிரதேசங்களைப் பிரித்துக் காட்டுவதற்கு உபயோகப்படுத்த வேண்டும்.

படங்களைப் பார்த்துக் கீறுவதிலே அதிகம் பிரயோசனமில்லை. காகிதத்திலே படம் பதிக்க விடலாம்; அச்சடித்துக் கொடுக்லாம்; காகித அட்டையில் வெட்டிய புறஉருவத்தைக்கொண்டு புறஉருவம் பதிக்கலாம். இப்படியான புறஉருவப் படங்களில் தனித்தனி மழை, உஷ்ணம், தாவரம் சம்பந்தமாகக் குறிக்கச் செய்யலாம் மேல்வகுப்பார் ஞாபகத்திலேயே புறஉருவமும், அதில் ஒவ்வொரு அம்சமும் குறிக்கத் தெரியவேண்டும். படப் பிரமாணத்தைக்கொண்டு தூரங் கணிக்கவேண்டும். தூரங்கொடுத்தாற் பிரமாணம் ஆக்கவேண்டும்.

அட்ச தேசாந்தரமும், ஒருதேசத்தின் பரப்பு, தூரம் நிலையமும் அறிய உதவும் என்பதும் படிப்பிக்கவேண்டும் உப்புத்தாளிலே ஒவ்வோர் அம்சமும் கீறி வைத்திருந்தால், ஒவ்வொரு அம்சத்தையும், நிலத்தோற்றப் படத்தின் மேலே வைத்து, இந்த அம்சங்களுக்கிடையேயுள்ள தொடர்பை அறிந்துகொள்ளலாம்.

**சித்திரப் படங்கள் –**

காட்சிகளைப் போய்ப் பார்க்க இயலாதவிடத்து இவை மிக உபயோகப்படும். உலகத்தையே எங்கள் முன் கொண்டுவருபவை. இவை, புத்தகத்தைப் படித்து மூலாதார விதிகளை அறிவதைப் போல இதுவும் அறிவிக்கும். ஆசிரியரின் சொற்களுக்கு நிறம் ஊட்டுவது; உயிர்கொடுப்பது. கொழும்புப் படத்தைக் காட்டியதும் எங்கும் மாடமாளிகைகள் உள்ள நகரம் என நினைக்கச் செய்கிறது.

வகுப்பிலிருக்கும் பிள்ளைகள் தங்கள் இடத்தி லிருந்தபடியே பார்த்து அறியக்கூடிய விதமாகப் பெரிய அளவில் தயாரிக்கப்பட்ட தேசபடங்கள் சுவரிலே தொங்கவிடப்படவேண்டும். நிலத்தோற்றத்தைக் காட்டும் நிறப் படங்கள் வேண்டும் படங்களையும் கோளத்தையும் மாணுக்கர்கள் எப்போதும் ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். தாமிருக்கு மிடத்தின் அட்ச தேசாந்திரம் அறிந்திருக்க வேண்டும். மேல்வகுப்பார் சுற்றுப் பிரயாணம் செய்யும்போதே, படங்களை வைத்துத் தொடர்பறிந்து விளங்கலாம். ஒவ்வோர் இடத்தின் இயற்கைக் காட்சிகள், தாவரம், வியாபாரம், போக்கு வரவுச் சாதனங்கள் ஆகியவற்றைக் காட்டும் சித்திரப் படங்களைச் சேகரித்து வைப்பது நலம். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவை சம்பந்தமாக வரும் சித்திரப் படங்களைக் கத்தரித்தெடுத்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைத்துக்கொள்ளவேண்டும். பூமிசாஸ்திர பாடப் பயிற்சிக்கென்று பெரிய அளவில் அச்சிட்ட படங்கள் விலைக்குக் கிடைக்கின்றன. அவைகளை வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. அல்லது அவைகளைப்போற் கையால் வரைந்தாவது பெரிய படங்களாகச் சுவரில் தொங்கவிடலாம். பூமிசாஸ்திரபாடப் போதனையில் இவைகள் கட்டாயமாக உபயோகப் படவேண்டும். படங்களிற் கண்ணுற் பார்க்கப்படும் விஷயம் தெளிவுபெற்று மனத்தில் நிலைத்து நிற்கும்.

**மாதிரி உருவங்கள் :-**

மலைகள், பள்ளத்தாக்கு, ஏரி, அணைக்கட்டு, துறைமுகம் முதலாய விஷயங்களைக் கற்பிக்க மாதிரி உருவங்கள் மிக அவசிய

மானவை. இதனால் விளங்கும், அனுபவிக்கும் தன்மை மாணவரில் ஸ்திரப்படும். உலக பூமிசாஸ்திரத்தை ஸ்திரப்படுத்த இது பேருதவியாகும், நெல்வயலை அறியாத பிள்ளைக்கு, அவனதை அறிவான் என நினைத்துச் சில ஆசிரியர் கற்பிப்பர். மாதிரிப்பொருள் இருந்தாற் பிள்ளைக்குக் கஷ்டம் இல்லை. மத்தித்தரைக் கடற் சுவாத்தியப் பழங்களைப் பற்றிப் படிக்கும் ஒரு மாணவன், ஒவ்வொரு பழத்தினதும் மாதிரி உருவங்களைப் பார்த்தால் இலகுவில் அவற்றைப் படிப்பான். வாயால் எவ்வளவு கூறினும் அவை மனதில் உருவாகமாட்டா. இலங்கை. யாழ்ப்பாணம் இவற்றினது உயரத்தைக் காட்டும் உருவங்களும், கால்வாய், மலை, அணைக்கட்டு இவைகளின் மாதிரி உருவங்களும் தயாரித்து வைத்துக்கொள்ளவேண்டும். மரத்தூள், களிமண் முதலிய பொருள்களைக்கொண்டு பல்வேறு உருவங்கள் ஆக்கலாம். அட்டைகள், வர்ணக்கடுதாசி, நூல் முதலியவைகளைக்கொண்டும் பலவித உபகரணங்களைத் தயாரிக்கலாம்.

## புள்ளி விபர அட்டைகள் :-

இவைகளைச் சேகரிக்கப் பத்திரிகைகள் மிகவும் உதவுகின்றன. தினசரி உஷ்ணம், மழை, சூரியோதயகாலம், அஸ்தமனகாலம், கடற் பெருக்கு வற்றுவிபரம், விமானம், புகையிரதம் புறப்படுங்காலங்கள் இவற்றுக்கு அட்டவணைகள் சேகரிக்கவேண்டும். வெள்ளப்பெருக்கு, புயல், பூகம்பம், தொழில் சம்பந்தமான புள்ளி விபரங்களையும் சேகரிக்கலாம்.

## சாஸ்திரக் கருவிகள் :-

இக்கருவிகளை ஆசிரியர் செய்தும், விலைக்கு வாங்கியும் வைத்திருக்கலாம். வாயுமானி, மழைமானி, திசை அறி கருவி, உஷ்ணமானி ஆதியன தேவையாகும். இதுகாறும் கூறியவற்றால் பூமிசாஸ்திரம் படிப்பிப்பதற்கு உபகரணங்கள் இன்றியமையாதன என்பது பெறப்படுகின்றது.

❋

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே.

— திருக்கோவையார்

எங்கள் கலாசாலை உப - அதிபர்



திரு. பொ. கைலாசபதி B. SC., அவர்கள்

# இயற்கையின் சுவை

(சி. சங்கரப்பிள்ளை)

இயற்கையைச் சுவைத்தல் மனித இயற்கை. புலவர்கள் இயற்கையைச் சுவைக்கின்றனர். இயற்கை யென்பது கடவுள். இயற்கையை அவ்வாறே தெரிவிப்பது தன்மை. இங்ஙனம் உணர்த்தப்படுந் தன்மை சுவைதரும். இது ஆற்றெழுக்குப் போலச் செய்வதில் ஒரு அழகு இருக்கிறது. இயற்கையை வாசித்து இன்புறுவது உலக இயற்கைப் பொருள்களைக் கண்டு இன்புறுவது போலிருக்கும்.

பெரும்பாணாற்றுப்படையில் பாலைநிலத்து எயிற்றியர் செயலைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பின்வருமாறு இயற்கைச் சுவை மலியத் தெரிவிக்கிறார். எயிற்றியர் குடியிருக்கும் வீடுகள் ஈத்திலையால் வேயப்பட்டிருக்கின்றன. அக்குடிசைகள் அதனால் முள்ளம் பன்றிபோலத் தோற்றமளிக்கின்றன. அப்படியான குடிசைகளில் மான்றோற் படுக்கையில் அண்மையிற் குழந்தையைப்பெற்ற எயிற்றி ஒருத்தி தன் சேயுடன் முடங்கிக்கிடக்க அவளை ஒழிந்த மற்றைய எயிற்றியர் வலிய இரும்புப்பூணைத் தலையிலேயுடைய உளிபோன்ற வாயினையுடைய பாரைகளினாலே சிற்றெறும்புப் புற்றுகளைக் கட்டிகள் கீழ்மேலாகுமாறு குத்தி அக்கரம்பை நிலத்துப் புழுதியில் அளைந்து எறும்புகள் தேடிவைத்த புல்லரிசியை வாரியெடுத்துக் கொண்டுவந்து பழக்கமற்ற காட்டுமான்களை வரவழைப்பதற்காகத் தங்கள் வீட்டுமுற்றத்தில் பழக்கப்பட்ட மான் கட்டிநின்ற தாள் தேய்ந்து கழுந்துபட்ட விளாமரத்தினது நிழலையுடைய வீட்டு முற்றத்திலே நிலத்திலே தோண்டிய நிலவுரலிலே அப்புல்லரிசியை இட்டு சிறிய வயிரமான உலக்கையினாற் குத்தி ஆழ்ந்த கிணற்றிலுள்ள அரிதாக ஊறுகின்ற உவர்நீரை அள்ளி வந்து பழைய ஓறுவாயான பானையிலே வார்த்த உலையை முரிந்த அடுப்பிலே ஏற்றி அரியாமல் ஆக்கின சோற்றைத் தேக்கிலையிலே கொட்டி விருந்ினரை உண்பிப்பர் எனக் கூறும்பகுதி பின்வருமாறு:

“ நீளரை இலவத்து அலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது
யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்

ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிணவு ஒழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்பல் லெயிற்றியல்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழல் முன்றில் நிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை ஓச்சி நெடுங்கிணற்று
வல்லூற்று வரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்'' (பெரும்பாணாற்றுப்படை)

என்று கூறப்பட்டிருக்கிறது.

இதிற் புலவன் பிறிது நவிற்சியாகவோ தற்குறிப்பேற்ற மாகவோ யாதும் கூறிற்றிலனெனினும் இது இயற்கைச் சுவை யாய் இன்பந்தருவது

---

**சிறுகதை:**

# மனோராச்சியம்

(பொ. விசுவலிங்கம்)

இலக்ஷ்மி ஒரு ஏழைப்பெண். விவாகம் ஆகாதவள்; தாய் தகப்பனை இளமையில் இழந்துவிட்டாள்; சகோதரர்களு மில்லை. இலக்ஷ்மிக்கு இனத்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களுடைய குடிசையொன்றில் அவர்களோடு இலக்ஷ்மி வசித்துவந்தாள்.

இலக்ஷ்மி வெகு சுறுசுறுப்பானவள். எவர்களுக்கும் எவ்வித உதவிசெய்தற்கும் பின்னிற்கமாட்டாள். எல்லாரோடும் இனிமை யாகப் பேசுவாள்; வசீகரமுள்ளவள்; அதனால் அந்தக் கிராமத்தி லுள்ளவர்களின் அன்புக்கு இலக்ஷ்மி பாத்திரமாயிருந்தாள்.

இலக்ஷ்மியின் குடிசைக்குச் சிறிது தூரத்தில் ஒரு பிரபுவின் வீடு இருந்தது. இலக்ஷ்மி நாள்தோறும் அந்தப் பிரபுவின் வீட்

டுக்குப் போய் வீட்டுவேலைகள்செய்து வயிறு வளர்த்துவந்தாள். அந்த வீட்டுக் குழந்தைகளும், பிரபுவும், மனைவியும், அங்குள்ள மற்றவர்களும் இலக்ஷ்மியிடம் பிரியமாயிருந்தார்கள்.

ஒருநாள் காலையில் வீட்டுவாசலில் இலக்ஷ்மி முற்றங் கூட்டிக்கொண்டு நின்றாள். அப்பொழுது அங்கே ஓர் மோட்டோர் ரதம் வந்துநின்றது. அந்தவீட்டுக் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குப் போகப் புறப்பட்டார்கள். பிரபுவும் மனைவியும் குழந்தைகளை மோட்டோர் ரதத்திலேற்றி மிக்க அன்புடன் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த உருக்கமான காட்சியை இலக்ஷ்மி சற்று நேரம் உற்றுநோக்கினாள். அவளுக்கு அவளை யறியாமலே அவள் மனசில் ஒரு ஆசை குடிகொண்டது.

"ஒரு குழந்தை பெறவேண்டும்; ஆண் குழந்தையாகப் பெற வேண்டும்; அழகான குழந்தையாயு மிருக்கவேண்டும்; அந்தக் குழந்தையைப் படிக்க வைக்கவேண்டும்." என்றெல்லாம் இலக்ஷ்மி மனோராச்சியம் பண்ணினாள். அப்பால் அவளுக்கு வேலை ஓட வில்லை. எஜமாட்டியிடம்போய் 'உடம்புக்கு வருத்தமாயிருக்கிறது; நான் வீட்டுக்குப் போகப்போகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தனது குடிசைக்குப் போய்விட்டாள். அன்று பகல் முழுவதும் தன் குழந்தையின் சிந்தனையாயே யிருந்தாள். பொழுதும் பட்டது. அன்றிரவு முழுவதும் இலக்ஷ்மிக்குத் தூக்கம் வரவில்லை. அதே சிந்தனை!

இலக்ஷ்மியின் குழந்தை பிறந்துவிட்டது; ஆண் குழந்தை. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்க் குழந்தை வளர்ந்தது. இலக்ஷ்மி பிரபுவீட்டிற் கொடுக்கிற உணவுகளில் நல்ல உணவுகளை — பலகாரங்களை — தானுண்ணாமல் தன் குழந்தைக்குக் கொண்டுவந்து கொடுத்துக் குழந்தையை நன்கு வளர்த்தாள். சம்பளமாகக் கிடைக்கிற அற்ப பணத்தைச் சேகரித்து ஆடை யாபரணங்கள் வாங்கிக் குழந்தையை அலங்கரித்தாள். குழந்தைக்கு ஐந்து வயதாய்விட்டது. இனிப் பிள்ளையைப் பள்ளிக்கு வைக்கவேண்டும்.

இலக்ஷ்மி தன் குழந்தையை அயலிலுள்ள குழந்தைகளோடு சேர்த்துப் பள்ளிக்குவைத்தாள். குழந்தை பள்ளியிலிருந்து வரும்போது குடிசைவாசலில் நின்று வரவேற்றுக் குழந்தைக்கு நல்ல உணவுகொடுத்து அதன்மேல் விளையாடவைப்பாள். குழந்தை நாடோறும் பள்ளிக்குப்போய்ப் படித்துவருகிறான்.

ஒருநாள் குழந்தை மற்றப் பிள்ளைகளோடு பள்ளிக்குப் புறப்பட்டான். இலக்ஷ்மி அனுப்பிவைத்தாள். பல்லி ஒன்று சொன்

னது. இலக்ஷ்மிக்கு மனம் பதறியது. எப்பொழுது குழந்தை பள்ளியிலிருந்து வருவானென்று இலக்ஷ்மி காத்துக்கொண்டிருந்தாள். நேரமாய்விட்டது. மற்றப் பிள்ளைகளெல்லாம் பள்ளியிலிருந்து வருகின்றார்கள் இலக்ஷ்மியின் குழந்தை வரவில்லை. இலக்ஷ்மி ஒவ்வொரு குழந்தையையும் என் குழந்தை எங்கே? என்று கேட்டாள் உன்மகன் தெருவிலே அங்குமிங்கும் ஓடினான். "மிலிற்றறி" லொறி நெரித்துக் கொன்றுவிட்டது என்று அந்தப் பிள்ளைகள் சொன்னார்கள். இலக்ஷ்மிக்கு மூச்சுத்திணறியது; உடம்புமுழுவதும் நடுக்கங்கொண்டது; இலக்ஷ்மி உடுத்திய வஸ்திரம் வெயர்வையால் நனைந்துவிட்டது; இலக்ஷ்மிக்கு உடம்பைச் சிறிதாயினும் அசைக்கவோ நாக்கைப் புரட்டி யொன்று சொல்லவோ முடியவில்லை; விம்மலும் பொருமலுமாய் அழுகை வந்தது; கண்ணீர் ஆறாய்ப் பெருகினது; விடிகிற சமயம் மெல்ல மெல்ல இலக்ஷ்மி அழுதுகொண்டு கிடந்தாள்; விடிந்துவிட்டது.

சூரியன் உதயம்செய்துவிட்டான். இலக்ஷ்மி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்; அழுகை மாறவில்லை; அது வரவர அதிகரித்தது; ஒப்பாரிவைத்து அழுதுவிட்டாள்; அயல் வீட்டிலுள்ள பெண்களும் இலக்ஷ்மியோடு வந்துசேர்ந்து அழுதார்கள்; அந்தக் கிராமம் முழுவதும் அழுகை ஒலி கேட்டது. அந்தக் கிராமத்திலுள்ள அநேகர் இலக்ஷ்மியின் வீட்டுக்குத் துக்கம்விசாரிக்க வந்துவிட்டார்கள். அந்தப் பிரபுவும் மனைவியும்கூட வந்திருந்தார்கள். சிலர் பந்தலிட்டார்கள். சிலர் கடைக்குப் போனார்கள் சிலர் மரண வீட்டுக்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்தார்கள். பொழுது மத்தியானமானது. ஒரு முதியவரெழுந்து அழுகையை நிறுத்துங்கள். இனிப் பிரேதத்தை முழுக்காட்டவேண்டும் என்றார். சிலர் பிரேதத்தை வெளியில் கொண்டு வருவதற்கு வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். அங்கே பிரேதம் இல்லை. எல்லாரும் திகைத்தார்கள். பிரேதம் எங்கே என்று விசாரித்தார்கள். வீட்டுச் சொந்தக்காரரைக் கேட்டார்கள். இங்கே ஒருவரும் இறக்கவில்லை. பிரேதம் இல்லை என்று வீட்டுக்காரர் சொன்னார்கள். துக்கக் கொண்டாட்டத்தின் காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லை ஒருவரையொருவர் விசாரித்தார்கள். கடைசியாக இலக்ஷ்மியைக் கேட்க நேரிட்டது. இலக்ஷ்மி ஒன்றும் பேசாமல் திகைத்துப்போய்ப் பைத்தியம் பிடித்தவள்மாதிரி யிருந்தாள். பிரபுவின் மனைவி இலக்ஷ்மியைத் தனியே கூட்டிக்கொண்டுபோய் ஒரு இடத்திலிருந்து ஆறுதல்செய்து நடந்ததைச் சொல்லும்படி கேட்டாள்.

இலக்ஷ்மி முதனாட் காலையில் தான் முற்றங் கூட்டிக்கொண்டு நின்றபோது பிரபுவீட்டுக் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குப்

போன காட்சியைக் கண்டதும் அப்பொழுது தான் ஒரு ஆண் குழந்தை பெறவேண்டுமென்று ஆசைகொண்டதும் அப்பால் நடந்ததும் ஆகிய சம்பவம் அனைத்தையும் அழுதழுது சொன்னாள்.

பிரபுவின் மனைவி சிரிப்பையடக்கிக்கொண்டு இலக்ஷ்மியைத் தேற்றி அவ்விடத்திலிருக்கும்படி செய்துவிட்டுப் பிரபுவும் மற்றவர்களுமிருக்கு மிடத்துக்குவந்து நடந்த சம்பவத்தை மெல்ல வெளியிட்டாள்.

அதைக்கேட்ட பிரபு, "ஹிட்லர் இந்த உலகத்தைக் கட்டியாள வேண்டுமென்று மனோராச்சியம்பண்ணித் தம்முடைய ராச்சியத்தையு மிழந்து தாமும் மறைந்துபோனார். நல்லவேளையாக இலக்ஷ்மிக்கு அப்படியொன்றும் நடக்கவில்லை. இலக்ஷ்மியின் மனோராச்சியக் குழந்தைதான் — பிறவாத குழந்தைதான் — இல்லாத குழந்தைதான் — இறந்துவிட்டது. போகட்டும்" என்றார்.

அங்கே வந்தவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் மனோராச்சியத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு போனார்கள்.

பாவம்! இலக்ஷ்மியினிடம் மாத்திரம் என்ன குற்றம்! ஏழை நெஞ்சம்!

> "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
> புண்ணாகப் போனதையோ போதும் பராபரமே."

---

# மொன்ரிசோரி முறை

(சி. கனகசுந்தரம்)

1907-ம் ஆண்டு ரோமாபுரியில் மானத நோய்களைப் பற்றிய வைத்திய சேவையில் மொன்ரிசோரிஅம்மையார் ஈடுபட்டிருந்தார். இவ்வம்மையாராலேயே இம்முறை கொண்டுவரப்பட்டு, அவருடைய நாமத்தினாலேயே வழங்கிவருகின்றது.

ரோமாபுரியிலுள்ள தொழிலாளர் நெருக்கமான — சுகாதார வசதிகளற்ற — வீடுகளில் வசித்துவந்தனர். இதனால், சுகாதார சங்கமொன்று அமைக்கப்பட்டு, வீடுகளைச் சுத்தமாக வைத்திருப்பதற் கேற்ற முயற்சிகள்பல செய்யப்பட்டு வந்தன. தொழிலாளர், தம் பிள்ளைகளை வீடுகளிலே விட்டுவிட்டுத் தொழிற்சாலைக்குச் செல்ல, அப்பிள்ளைகள் அவற்றை

அசுத்தமாக்கிவந்தனர். இதனைக் கண்ணுற்ற சுகாதார சங்கத்தினர் பிள்ளைகளை ஒருங்குசேர்த்து ஒருவரின் மேற்பார்வையில் விட்டனர்.

பிள்ளைகளைப் புறம்பான அறையில்வைத்து மனோவைத்தியஞ் செய்யாதுவிடில், அவர்கள் வளர்ந்தபின் பெருநட்டத்தையும் தொந்தரவையும் கொடுப்பார்களென எண்ணி இளமையிலேயே பிள்ளைகளைத் திருத்துவதற்கு அவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டுமெனக் கருதி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். இதன்பயனாக பாடசாலையும் அமைக்கப்பட்டு, அதில் 3 — 7 வயது வரையுமுள்ள பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். இப்பிள்ளைகளைச் சீரான நிலைமைகளுடன் பாடசாலைக்கு அனுப்புவது பெற்றோர்களுடைய பொறுப்பாகும். அப்பொறுப்பை மீறிநடக்கும் பெற்றோர்களின் பிள்ளைகளைப் பாடசாலையினின்றும் நீக்கப் பாடசாலை அதிகாரிக்கு உரிமையுண்டு.

வறிய பிள்ளைகளுக்கென ஆக்கப்பட்ட இம்முறை செல்வர்களுடைய பிள்ளைகளுக்கும் பொருந்தியதில் ஆச்சரியமென்ன? இப்பாடசாலையின் பொறுப்பு ரோமாபுரித் தலைவரால் மென்ரிசோரி அம்மையாருக்கு அளிக்கப்பட்டது. இவரிடம் மனோவல்லமம் குறைந்த பிள்ளைகள் பலர் ஒப்படைக்கப்பட்டனர். இவர்தம் அநுபவத்தினைக்கொண்டு ஆக்கிய முறைகள் மிகவும் பலனளித்தன. மந்தமானவருக்கென மேற்கொள்ளப்பட்ட முறைகள் சாதாரண மாணவர்கட்கும் உபயோகமாகுமெனக் கண்டார். இம்முறையிற் பூரண வெற்றிபெறுவதற்கு, அவ்வவ் முறையை அவ்வவ் மானத வயதிற்கேற்ற பிள்ளைகளுக்கே உபயோகிக்க வேண்டும். இவர்களுக்குத் தசையசைவு பூரணப்படாதபடியால், நுட்பமான அசைவுகளை உபயோகித்து ஒரு பொருளைப் பிடிக்கமாட்டார்கள். வேண்டாத பல அசைவுகளைச் சேர்த்துக்கொள்வர். அழுத்தமான அசைவுகளைப் பெற்றதும் பிள்ளை, தேவையற்ற அசைவுகளை நீக்கிவிடக்கூடும். தேவையற்ற அசைவுகளைச் சேர்த்துக்கொள்வதற்குக் காரணங்கள் :-

1. பொறிக்காட்சி அநுபவத்திற் பழக்கமின்மை.
2. அவை ஒழுங்குபண்ணப்படாமை.
3. அகமுயற்சி ஒழுங்குபண்ணப்படாமை.

வல்லபம் குறைவான பிள்ளைகளுக்கு உபயோகிக்கும் முறைகளை, குழந்தைகளுக்கு உபயோகிப்பதிலிருந்து இம் முறை யாரம்பமாகிறது. அமெரிக்க அறிஞரும் இதைப் பற்றி யோசித்ததுண்டு. அமெரிக்க அறிஞர் ஒருவர் "முற்றுகத் தீமையென்பதொன்று உலகத்திலில்லை; தீமையொன்றும் முற்றுகத் தீமையுமல்ல" என்று கூறுகிறுர். மந்தமான பிள்ளைகள் இருக்கிறபடியாற் சாதாரண பிள்ளைகளை நன்கு கற்பிக்கக் கூடியதாக இம்முறை அமைந்துள்ளது.

மனக்குறைவான பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு ஒரு பொதுப் பிரமாணமான சூத்திரத்தைக் கண்டுபிடித்துவிட்டால், அது உலகத்திற்கு நன்மை பயக்கும். பிறவிக் குருடரான பிள்ளைகளுக்கு ஸ்பரிசத்தை உதவியாகக் கொண்டு படிப்பிக்கின்றனர். பாடசாலைக்கு வராத பிள்ளைக்கு அறிவு குறைவதன்று; ஆனுல், அவை ஒழுங்குபண்ணப்படவில்லை. சிறுபிள்ளைகளின் கல்வியை மேற்பார்வைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தால் அதன் பலாபலன் தெய்வீகமானதாயிருக்கும்.

## மொன்ரிசோரி முறையின் இரகசியம்:

மந்தமான பிள்ளைகளைப் பயிற்றுவதிலேயே இம் முறையின் இரகசியம் தங்கியுள்ளது. (i) பிள்ளை தன்னிஷ்டமும் சுயமுயற்சியு முடையதாக இருத்தல். (ii) இப் பயிற்சி பொறிகளிலும் பார்க்க விவேகத்திற்கே உரியதாயிருக்கிறது. பொறிப் பயிற்சி குறைந்தவர்களுக்கு அதற்கேற்ற உபகரணம் கொண்டு படிப்பிக்கலாம். பரிச உணர்ச்சியைப் பயிற்சி பண்ணுவதே அம்மையாரின் பிரதான நோக்கம். இப்பரிச உணர்ச்சிகள் மேம்பட்ட இடத்தும் ஆதிச் செந்துவிலிருந்து பரிணமித்த முறைப்படி மீண்டும் வரும் இயல்புடையன.

'கோன்குநூஸ்' என்பார், "பொறியுணர்ச்சிகள் எவ்வாறு படிமுறையாகத் தோன்றியதோ அவ்வாறே மீட்கப் பட்டும் பெலனடையும்" என்று கூறுகிறுர். இக் குறைபாடுகளை, உடற்கூற்று முறைகளால் திருத்தலாம் என்பது அவரது கொள்கை. இது அம்மையாரின் முறையை யொத்து இருக்கின்றது.

'பெஸ்ரலொஜி' என்பவர் கல்வியை உளநூல் சம்பந்தமாகச் சிந்தித்தார். ஆனல், அப்போது உளநூல்கள் இருக்கவில்லை. அதனுல் சடவாதக் கொள்கையாக, அதாவது யந்திரமுறையாக (மெக்கானிசிங்) நடத்தினர். ஆயின் மொன்ரிசோரி முறை பிள்ளையின் நன்மைக்காக—தேவைக்காகப் பயிற்சி கொடுப்பதுமல்லாமல், பாடத்திட்டப்படி அவனது மனத்தில் ஒருமித்துத் திணிக்க முற்படவில்லை. கல்வியால் மாணவரின் வாழ்க்கை விரிவடையக் கூடியதாக ஆசிரியர் உதவி புரிவதுதான் அம்மையாரின் அடிப்படையான கொள்கை. ஒரு பிள்ளைக்கு ஒரு தேவை எப்பொழுது உதிக்கிறதோ, அப்பொழுதுதான் பிள்ளைக்குப் படிப்பிப்பதற்கேற்ற தருணம். பிள்ளை ஒரு விருத்திக்கு ஒரு விடயத்தை எப்போது தேவைப்படுகிறதோ அப்போதே அதை ஊட்ட வேண்டும். அதாவது ஒரு வல்லபம் உண்டாகும்போது, அதற்குரிய பாடத்தைப் படிப்பித்து விடவேண்டும். அந்த வல்லபத்தைத் தவறவிட்டால் மீட்டும் அவ்வல்லபத்தை ஏற்படச் செய்யவேண்டும். ஒரு பாடம் படிப்பிக்கும்போது பிள்ளைகளுக்கு விளங்கவில்லையானல்—பிழைகள் ஏற்படுமானல்—அதை ஒருபோதும் வற்புறுத்தக்கூடாது. வற்புறுத்தினுற் பாடத்தில் வெறுப்புண்டாகும். அப்பாடம் அந்நேரத்துத் தேவைக்குக் கூடிவிட்டது எனக் கருதி, பின் தேவை வரும்போதே அதனைக் கற்பிக்கவேண்டும். பிள்ளை தனது சுயவல்லபம் தொடங்கி அதைத் தானே கைவிடும் வரையும் அப்பாடத்தை நடத்தலாம். நேரசூசியின்படி நடத்தத் தேவையில்லை. இதில் பிள்ளை "நான் ஒரு வல்லபத்தைப் பெறுகிறேன்" என்ற மனத்திடமும் உறுதியும் கொள்வதே இதன் பரிசும் சந்தோஷமுமாகும். பிள்ளைகள் ஏதும் பிழைகள் விட்டால் திருத்துவது ஆசிரியரல்ல; உபகரணங்களே. திருத்தும் உபகரணங்கள் அத்தன்மையன. பழைய காலத்தில் அடக்குமுறைகளைக் கையாண்ட ஆசிரியர் அம்மையாரின் இம் முறையால் மறைந்துவிட்டார். பிள்ளைகளுக்குத் தடை, உபகரணங்களாலே வரலாமொழிய வேறு எவ்வகையாலும் வரக்கூடாது. பிள்ளைக்குள்ள பூரண இஷ்டம் தன்னுடைய மனோவிருத்திக்கு இசைந்து தன்னை நடத்திக்கொள்ளும் இஷ்டமாக இருக்கும். இம்முறைப்படி நடக்கும் பாடசாலையை யாராவது சென்று பார்த்தால்,

அங்குள்ள மாணவரின் சுய அடக்கக் கட்டுப்பாட்டாற் கவரப்படுவர். மாணவர் விரும்பிய ஒவ்வொரு தொழிலைச் செய்துகொண்டிருப்பர். ஆதலின் அநேகருக்கு இக்காட்சி ஒழுங்கீனமானதாகக் காணப்படும்.

கொள்கைப் பிரமாணங்களிலிருந்து செய்கைக்குப் போகும்போது மூன்று படிகளுண்டு: 1. சீவியத்தோடொட்டிய பயிற்சி. 2. புலன் சம்பந்தமான பயிற்சி. 3. சுயதிருத்த உபகரணப் பயிற்சி.

## 1. சீவியத்தோடொட்டிய பயிற்சி:

இது மற்றவர் உதவியை நாடாது தானே தனது வேலையைச் செய்ய அடிப்படையானது. சுத்தம், நகங் களைதல், உடுப்புப்போடல், கழற்றுதல், பல் துலக்கல், தெறிகளைப் பூட்டல், பலவிதமான வளையங்களை மாட்டுதல், கழற்றுதல் முதலியவற்றில் ஒருவித சந்தோஷமும் ஏற்படும். இவற்றைச் செய்யும் விருப்பமும் ஏற்படுகிறது. வீட்டுக் கதிரை வாங்குகளை ஒழுங்கு செய்வதால், தசைநார்களின் தொடர்பு பட்ட அசைவு ஏற்படுகிறது. சாதாரண மனிதருக்குரிய வித்தைகள் சிறுவருக்கு ஏற்றதல்ல. குழந்தைகளின் அசைவைப் படிமுறையாக முதலில் ஆராய்ந்து, அதற்குத்தக்க அப்பியாசங்களை அம்மையார் தெரிந்தெடுத்துள்ளார். உதாரணமாக, படிகள் வழியாய்ச் சரிவாய் ஏறுதல், வட்டம் வட்டமாக ஏறுதல்—அழகிய நடைப்பயிற்சிக்கு உதவும்.

## 2. புலன்கள் சம்பந்தமான பயிற்சி:

புலப்பயிற்சியில் வசதியாயின் குறித்த புலன் தனியே தொழிற்படுதல் விருத்திக்கு நன்றாகும். குருடர் பரிச உணர்ச்சியை நுட்பமாக உபயோகிப்பர். அதனால் மாணவரின் கண் கட்டப்பட்டு பரிச உணர்ச்சியாற் பொருளை யறியச் செய்தார் அம்மையார். அதற்காகப் பலதிறப்பட்ட வடிவங்களை மரம், காகிதம் முதலியவைகளிற் செய்தார். உபகரணங்களிற் பயிற்சி கொடுக்கும்போது ஆரம்பத்தில் நிறம், சத்தம், பாரம் முதலியவற்றில் அதிக வித்தியாசமானவைகளாகப் பொருட்களை உபயோகிக்க வேண்டும். ஒருபொறிக்குப் பயிற்சி கொடுக்கும்போது வேறு பொறிப் பயிற்சிக்குரிய

தொழிலை நிறைவேற்ற வேண்டும். சத்தத்திற்குப் பயிற்சி கொடுக்கும்போது இருட்டறையில் விடலாம்; கண்ணைக் கட்டலாம்.

தனிப்பட்ட பொறிமட்டும் பயிற்சி பெறமுடியாது. மனம் வளர்ச்சியடைய அதனுடன் சேர்ந்தே பொறியும் வளரும். தனித்தனி ஒவ்வொரு பொறியையும் மனத்திலிருந்து பிரித்து அறியமுடியாது. கட்பார்வை குறைந்தோர் பரிசத்தாற் படிப் பார்கள். காது கேளாதவர் காட்சியைக்கொண்டு படிப்பார்கள்.

இவ்விடயங்களைப் படிப்பிக்கும்போது பின்வரும் மூன்று படிகளையும் படிப்பிக்க வேண்டும் :-

1. பொறிக்காட்சிப் பொருளுக்கும் பெயருக்குமுள்ள சம்பந்தம். (சிவப்பு நிறப் பொருளைக்காட்டி இது சிவப்பு எனச் சொல்லல்.)
2. பெயரைச் சொல்ல மாணவர் பொருளை மட்டிடல். (சிவப்பை என்னிடம் தா எனக் கேட்டல்.)
3. பொருளைக் காட்டி அதனுடன் தொடர்புடைய பெயரை வரச்செய்தல். (இதென்ன நிறம் எனக் கேட்டல்.)

இவற்றைவிடப் பொருளைக்கொடுத்து ஒழுங்குபடுத்த விடல், நிறப்பொருள்களின் நிற வித்தியாசத்துக்குத் தக அவற்றை நிரைப்படுத்துதல், வடிவப் பயிற்சி, துவாரங்களை யடைக்க அளவான மரத்துண்டுகள் தெரிதல் என்பனவும் நடைபெற வேண்டும்.

**சுயதிருத்த உபகரணப் பயிற்சி:**

ஓவியத்தோடொட்டிய பயிற்சியைவிடச் சுயதிருத்த உப கரணங்களைக்கொண்டு பாடங்களிற் பயிற்சிபெறவும் இம் முறையில் இடமுண்டு. மொன்ரிசோரி முறையின்படி வாசிப் புக்குமுன் எழுத்துப் படிப்பிக்கப்படும். கைப்பயிற்சியில்லாத பெண்பிள்ளைக்குத் தையல் படிப்பித்து, கையின் அசைவை யாக்கியபின், பல செயலையும் செய்யமுடிந்தது. கேத்திர கணித வடிவங்களைத் தடவி, அரத்தாளிற் பரிசத்துடன் எழுத மாணவர் கற்பிக்கப்பட்டனர். பார்த்துமட்டிட முடி யாத சில எழுத்துக்களை பரிச உணர்ச்சியால் அறிய முடிந் தது. எழுத்து வடிவங் கற்பிக்கும்போது உச்சரிப்பும் அம்மை

யாராற் கற்பிக்கப்பட்டது. இதுவே வாசிப்புப்பாடத்தி னாரம்பமாகும்.

எழுதுகோலைப் பிடிக்கவும், எழுதவும், எழுத்தின் தொனியைக்கொண்டு சொற்களை யாக்கவும் பயின்றபோதே அவர்கள் எழுதத் தூண்டப்படுகின்றனர். இம்முறையின்படி 4 வயதில் எழுதவும், 5 வயதில் வாசிக்கவும் பயிற்றலாம். முதல் கருத்துச்சொல், பின் கட்டளைச்சொல் இவற்றை வாசிக்கலாம்; வாசித்து அதன்படி மாணவர் செய்யவேண்டும் பொருளைக் கிரகித்தலே பிரதானமென்றும், உச்சரிப்புக் கஷ்டத்தைப் பின் திருத்தலாமென்றும் அம்மையார் அபிப்பிராயப்பட்டார்.

எண்பாடத்திலும் இம்முறைப்படி பாடங்கள் நடத்த முடியும். இதில் எண்ணுதலும், கூட்டல் கழித்தல் முறைகளும் கற்பிக்கப்படலாம்.

**இம்முறையின் பயன்கள்:**

1 ஒவ்வொருவரும் சுயநம்பிக்கையுடையவராய்த் தன்னலுவல்களைத் தான் பார்க்கச்செய்தல்

2. நல்ல பழக்க வழக்க முண்டாக்கல்.

3. ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பிள்ளையையும் தனித்தனி அவதானிக்கச்செய்து அவர்களுக்கேற்ற வழியில் நடக்கச் செய்தல்.

**இம்முறையாகக் கற்பிக்கும் ஆசிரியரின் வேலை:**

1. மாணவனுடைய விருத்தியை அவதானித்தல்.

2. தேவையான இடத்தில் மாத்திரம் உதவி செய்தல்.

இதுகாறுங் கூறியவாற்றால், சடசம்பந்தமானவும் மானத சம்பந்தமானவுமான சுயாதீனங் கொடுக்கப்படுமென்பதும், தனிமுறையாகவே படிப்பு நிகழும் என்பதும், சுயதிருத்த உபகரணங்களைக் கொண்டு ஐம்புலன்களும் பயிற்றப்படுவதுடன் பாடங்களும் கற்பிக்கப்படுமென்பதும், சமூக சீவியம் இயற்கையாராய்ச்சி என்பனவற்றில் விசேட கவனஞ் செலுத்தவேண்டும் என்பதும் அறியக்கிடக்கின்றன. அன்றி, இம்முறை மூவகைப் பயிற்சிகளையும், மூவகைப் படிகளையும் கொண்டது என்றும் அறியலானோம்.

ஒரு துமி:

# முதற் றுமி

(க. குழந்தைவேலு)

**க**ம்பர் சரசுவதிதேவியின் திருவருளைப் பெற்றவர். அவரைக்கொண்டு இராமாயணம் பாடுவிக்க வேண்டுமென்பது குலோத்துங்கசோழ மகாராசாவின் விருப்பம். அதனுல் அரசன் அவரை ஒருநாள் தன் அரண்மனைக்கு அழைத்து, இராமாயணத்தைப் பாடியருளும்படி வேண்டிக்கொண்டான். கம்பரும் அதற்கு இணங்கவே, அரசனுக்கு மிகமகிழ்ச்சி. கம்பரும் அரண்மனையினின்றும் நீங்கித் தமது இடத்துக்குச் சென்றுவிட்டார்.

அரசன் பலநாளாகக் கவனித்தும் விசாரித்தும் வந்ததிலிருந்து 'கம்பர் இன்னும் இராமாயணம் பாடத் தொடங்கவே யில்லை' என்பதை அறிந்தான். இதற்கு என்ன செய்யலாம்? என்று சடையப்பவள்ளலோடும் தனது மந்திரிமார்களோடும் ஆலோசனை செய்தான். கடைசியில், ஒரு போட்டியேற்படுத்துவதெனத் தீர்மானித்து, கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் அழைத்து இருவரையும் தனித்தனியே இராமாயணத்தைப் பாடுமாறு வேண்டிக்கொண்டான்.

வீட்டுக்குச் சென்றதும் ஒட்டக்கூத்தர் "ஓலை தேடி, எழுத்தாணி தேடி, ஆள் ஓய்ந்திருக்கும் இடந்தேடி, ஒரு மூலைதேடி, உட்கார்ந்துகொண்டு இராமாயணம் பாடத் தொடங்கிவிட்டார். ஆனுல், கம்பரோ இராமாயணம் பாடுவதற்காக ஓலை தேடவு மில்லை; எழுத்தாணி தேடவு மில்லை. முன்போலவே சும்மா இருந்தார்; திரிந்தார்.

இதனைக் கண்ணுற்ற அரசன் இருவரையு மழைப்பித்தான். முதலில் ஒட்டக்கூத்தரைப் பார்த்து, "இராமாயணம் எந்த அளவில் இருக்கிறது?' என்று விசாரித்தான். அவர் உடனே "இப்பொழுது கடல்காண் படலம் பாடுகிறேன்" என்ருர். பின் கம்பரை நோக்கித் "தங்களுடைய இராமாயணம் எவ்வளவில் இருக்கிறதோ"? என விசாரித்தான்.

உடனே கம்பர், ''இப்பொழுது கடல்காண் படலம் முடிந்தது, சேதுபந்தனம் நடக்கிறது'' என்றார். அரசனுக்குச் சிறிது கோபங்கூடவந்தது. ''அதில் ஒரு பாட்டுச் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றான். அப்பொழுது சரசுவதிதேவியின் திருவருளைப்பெற்ற கம்பர் பாடிய பாட்டு இது:

''குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியுந் திரைக்கடல்
துமித மூர்புக வானவர் துள்ளினர்
அமிர்த மின்னு மெழுமென வாசையால்''

[குமுதன் என்ற வானரம் கொண்டுவந்து போட்ட குலவரையானது திரைகடலின்கண் கூத்தரைப்போல திமிதமிட்டுத் திரிவதனால் உண்டாகிய துமி, தமது ஊரின்கண் புக, இன்னும் அமிர்தம் எழும் என்ற ஆசையினால் வானவர்கள் துள்ளினர்கள்.]

இதனைக் கேட்டதும் அரசனுக்குப் பெரிய சந்தோஷம்; பெரிய வியப்பு; மதிப்பு. ஆனால், ஒட்டக்கூத்தருக்கு இது பிடிக்கவே யில்லை. அந்தப்பாட்டிலே ஏதாவது குற்றங் கூறி விடவேண்டுமென்று எண்ணித் துமியிலே பிடித்தார். ''துமியென்ற சொல்லை யாம் இதுகாறும் கேட்டறியோம், அப்படியொரு சொல் தமிழில் இல்லையே?'' என்று கடாஅயினர் ஒட்டக்கூத்தர். உடனே கம்பர் ''வழக்கிலே இருக்கிறது'' என்றார். ''காட்டுவீர்களா?'' ''ஆம்'' இருவரும் புறப்பட்டு அவ்வூர் வீதிவழியாகச் செல்கின்றனர். ஒரு குடிபோன பழைய வீட்டினண்டை சென்றதும் ''மோர்த்துமி தெறிக்கும் தள்ளியிருங்கள், பிள்ளைகாள்!'' என்று ஒரு வார்த்தை வந்தது. உடனே கம்பர் ''கேட்டீர்களா?'' என்றார்.

இருவரும் உள்ளேசென்று பார்த்தபோது அங்கு ஒருவராவது காணப்படவில்லை. இது சரசுவதியினருள் — என்பது கதை.

இதற்குப் பிறகு அன்று தொடக்கம் இன்றைக்கும் மழை துமிக்கிறது. அந்தப் பாட்டிலே துமித்த துமி; முதற் றுமி. சி. வை. தா. நடையில் முதற் றுமி. டி. கே. சிக்கு முதல்த் துமி.

அந்தப்பாட்டுக்கூடக் கம்பராமாயணப் பெருமழையில், ஒரு துமி; முதற் றுமி.

# மௌன வாசிப்பு

(க. இரத்தினம்)

பாஷை பிறர் கருத்தைத் தானறிதற்கும், தன் கருத்தைப் பிறர் அறிதற்கும் உபகாரமானது. பிறர் கருத்தைத் தானறிதற்கு உபகாரமான பாஷைக்கு மௌனவாசிப்பு என்று பெயர். இங்கே வாசிப்பு என்பதற்குக் கருத்துக்களை யறிகிறபடிப்பு என்று பொருள். இதற்கு மௌனம் பிரதானம் ஆதலின் மௌனவாசிப்பு எனப் பட்டது. இந்த வாசிப்புக்குக் கண்ணும் காதும் பிரதான கருவிகள். கண்ணால் வரும் படிப்புக் கல்வி; அஃதாவது கற்றல். காதால் வரும் படிப்புக் கேள்வி. இக்கல்வி கேள்விகளுக்கு வாய் அநாவசியகம். ஓரேவழி; எழுத்துக்கள் சொற்களிற் றடக்குள்ள வழி; அவற்றைக் கூட்டி உச்சரித்தலினால் பாலப்பருவத்தினருக்குக் கருத்துப் பிறத்தலினாலே, சிறுபான்மைக் கருத்தறிதலுக்கு வாயும் உபயோகப்படுகின்றது. இந்த வாயுபயோகம் பிறர்க்குக் கருத்தறிவித்தலன்மையின் உரத்துவாசிப் பெனப்படாது. இங்கேயும் கண்ணுபயோகம் பிரதானமானது. ஆதலின், இந்த வாயுபயோகம் மௌன வாசிப்பின்பாற்படும்.

## மௌன வாசிப்பு :—

இதன் நோக்கம், கருத்துக்களை யறிதல். இது கல்வி கேள்விகளால் வருமென மேலே காட்டப்பட்டது. இதற்கு மௌனம் பிரதானம். மௌனமாக உதடுகளசையாமல் வாசிக்கப் பயிலுதல் என்ற கருத்தில் இத்தொடரிங்கே உபயோகிக்கப்படவில்லை இப் பயிற்சியும் இதிலடங்கும். தடக்குள்ள இடங்களில் எழுத்துக்கள் சொற்களைக் கூட்டி உச்சரித்தலினாலே, கருத்துத் தோன்றுமாயின் அதுவும் நடக்கவேண்டியதே.

இந்த வாசிப்பில், நியத வாசிப்பென்றும் பிரத்தியேக வாசிப் பென்று மிருவகையுண்டு. அவற்றுள் நியதவாசிப்பு ஒவ்வொரு வகுப்பிலும் நியதமாக நடக்கவேண்டியது. வகுப்புகள் தோறும் இதற்குரிய புத்தகங்கள் இத்தனையென்று பாடதிட்டம் நியதி செய்யும். உயர்தர வகுப்புக்கள் சிலவற்றிற்கு இன்ன புத்தக மென்றும் நியதிசெய்யும்.

**நியத வாசிப்புப் புத்தகம் :—**

இதில் வசனம், செய்யுள் என இருவகையுண்டு. தனித்தனி புத்தகங்களாயு மிருக்கலாம். கீழ் வகுப்புக்களில் வசனப்பகுதி கூடியும் செய்யுட்பகுதி குறைந்து மிருக்கவேண்டும். புத்தக அமைப்பு, அச்சு, பொருளமைதி, நடையமைதி முதலியவைகள் புத்தகத்தி லவதானிக்கப்பட வேண்டியவைகள். கீழ் வகுப்பு மாணவர் கதைகளிலும் கதைப் பாட்டுக்களிலும் மிக்க விருப்புடையவர்களாதலின் அவர்களுக்குரிய புத்தகங்களில் அவை மிக்கு வருதலவசியம்.

பிரபலஸ்தர்களின் சீரிய வரலாறுகள், கைத்தொழில் கமத்தொழில் வரலாறுகள் சரித்திரம் சமயம் இலக்கியம் இவைகளோடு தொடர்புபட்ட முக்கியஸ்தர்களின் கதைகள், நற்குணம் நல்லொழுக்கம் நீதி இவற்றைப்பற்றிய சிறு கட்டுரைகள், இவற்றைப் போதிக்கும் இதிகாசக் கதைகள், இயற்கை வர்ணனைகள், சம்பாஷணைகள் முதலியன கீழ் வகுப்பு வசனபுத்தகத்தில் வரத்தக்கவை.

எளிதிற் றோன்றி மறையும் உணர்ச்சிகளைத் தரக்கூடிய விஷயங்களும், காலத்துக்குக் காலம் மாறுபடக்கூடிய ஸ்தாபனங்கள் பிரமாணங்கள் நாகரீகங்கள் சம்பந்தமான பாடங்களும் இருத்தல் உசிதமன்று. இவை பேச்சுப்பாடங்களில் வரலாம். கிராமசங்கத்தைப்பற்றிய ஒருபாடம் பேச்சாக நடக்காது வாசிப்புப் புத்தகத்தில் வருதலாற் பெரும்பயனில்லை.

பொருள் விளக்கத்திற்கேற்ற படங்கள், அக்ஷரங்களின் பருமை, பந்திப்பிரிவுகளின் அளவு, பாடத்தொடக்கத்தில் அரும்பதங்களின் தொகுப்பு, புத்தக விறுதியில் அரும்பதவிளக்கம், பாடமுடிவுகளி லப்பியாச வினுக்கள், கண்கவர் தோற்றம் முதலியவைகளும் அவதானிக்க வேண்டியவைகள்.

வசனப் பகுதிகள் நல்ல பொருட் செறிவுடையனவாய், முன் மாதிரியான வசனங்களாய், பொருளமைதி நடையமைதிகள் சீவியம் முழுவதும் மனசிலே சுரந்துகொண்டிருந்து நன்மை விளைக்கத் தக்கனவாய், வேறு நூல்களின் பொருளமைதி நடையமதிகளின் தாரதம்மியங்களைக் கிரகிக்கும் ஆற்றலைப் பிறப்பிக்கத்தக்க அளவு கோல்களாய், ஏனைய நூல்கள், பத்திரிகைகளால்வரும் பொருட் டோஷங்களை நீக்கக்கூடியனவா யிருக்கவேண்டும். நாவலர் எழுதிய பாலபாடங்கள் இங்கே குறிப்பிட்ட இலக்கணங்களுக்கு இலக்கியமாதல் மாத்திரமின்றி, ஒழுக்கவரம்பாயு மிருக்கின்றன.

பாடபுத்தகங்கள் எழுதுகிறவர்கள் மனிதசீவியத்தின் உண்மையான அடிப்படை நோக்கங்களை அறிந்தவர்களாய், வேண்டிய

பொருளும் பொருளுக்கேற்ற பாஷை நடையும் கைவந்தவர்களா யிருக்கவேண்டும். புத்தகம் எழுதுகிறவர்கள் அதற்கென்றே பிறக்கிறவர்கள். அவர்கள் புத்தகம் எழுதாது இருக்கமுடியாமல் எழுதுகிறவர்கள். பாடங்கள் அவர்களின் எண்ணங்களின் கனிவுகள்.

நியதவாசிப்பில் ஆளும் செய்யுள்களில் இருவகை அவசியம். ஒருவகை பொருளறிவிற்குரியவை; ஆத்திசூடி தொடங்கித் திருக்குறள் இறுதியானவை. மற்றவகை சொல்லிற்பத்திக் குரியவை; சிலேடைகள், அந்தாதிவகைகள், உலாக்கள், மடல்கள் இந்தவகையைச் சேர்ந்தவை. வகுப்புக்குத் தக்கவாறு தெரிவுசெய்ய வேண்டும். இலக்கியச் செய்யுள்கள், தோத்திரங்கள் இப்பிரிவைச்சேரா. இவைகள் முறையே இலக்கியப்பிரிவு, சமயப்பிரிவைச் சேர்ந்தவை. பள்ளிக்கூடங்களில் இலக்கியச் செய்யுள்களும் பொருளறிவிற்குரிய செய்யுள்களும் பேதமின்றிக் கலந்து நடத்தப்படுகின்றன. இது பாடதிட்டத்திற்கு மாறு. பொருளறிவிற்குத் தெரியப்படும் செய்யுள்கள் படிப்பிக்கிற சாமார்த்தியத்தினால் இலக்கியமாகலாம். ஆனால் பொருளுக்குத்தான் அங்கே கௌரவம். எப்பொருளறிதலை விருத்திசெய்வதற்கு உபகார அங்கங்கள் இரண்டு. அவை, குரலைக் குறைத்தல், வேகத்தைக் கூட்டுதல் என்பன. இவை மிகப் பிரதானமானவை. இவற்றையும் உடனெண்ணிக் குரலைக் குறைத்தல், வேகத்தை அதிகரித்தல் பொருளறிதல் மூன்றும் *மௌன வாசிப்பின் பிரதான அம்சங்களாகும்.

மூன்றுவதற்கு முதலிரண்டும் அங்கங்களாக மூன்றும் ஒருங்கு நிகழ வேண்டுமாயினும், முதலிரண்டையும் பயிற்சிக்காகத் தனித் தனி எடுத்துக்கொண்டு பாடம் நடத்தவேண்டி நேரிடும். முதலிரண்டிலும் தனித் தனியே போதிய பயிற்சி கைவந்த பின்னர் மூன்றுவதுடன் சேர்ந்து மூன்றும் ஒருங்கு நடக்கும். மூன்றுவதற்கு முதலிரண்டும் அங்கங்களென்பதை மறத்தல் கூடாது மூன்றுவதில் வழி முதலிரண்டும் பயன்படாவாம். மூன்றும் ஒருங்கு நிகழ்வதற்கு எடுத்துக்கொள்ளும் பாடங்களும் முதலிரண்டையும் தனித்தனி பயிற்சி செய்ய எடுத்துக்கொள்ளும் பாடங்களும் தம்முள் வேறுபட்டிருக்கும். ஏற்ற பாடங்களை உபாத்தியாயர் தெரிவு செய்து கொள்ளவேண்டும். முதலிரு அங்கங்களையும் பயிற்சி செய்வதற்கு எடுத்துக்கொள்ளும் பாடங்கள் அரும்பதங்கள் ஆழ்ந்த கருத்துக்களின்றி, எளிமையும் தெளிவுமுள்ளனவாயிருக்கும்.

மௌன வாசிப்பின் பிரதான நோக்கம் பொருளறிதலென்று மேலே பேசப்பட்டது. இது நிறைவேறும் காலத்தில் இதன்

---

* இங்கே மௌன வாசிப்பென்றது நியதவாசிப்பில் வரும் வசனப் பகுதியை. இனிவரும் இடங்களிலும் இது இப்பொருளிலேயே வழங்கப்படும்.

எங்கள் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர்



பண்டிதர், சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

காவலன்

பயனுக மற்றென்று பலிக்கும். அது பாஷை ஆட்சி. அதுவும் வளர்க்கப்பட வேண்டியதே. ஆகவே அதனையும் உடனெண்ணி மௌன வாசிப்பின் நோக்கம், பொருளறிதலும் பாஷை ஆட்சியுமென்னலாம். பொருளறிதலிற் பல படிகளுண்டு. நன்றும் தீதும், நோக்காது பொருளறிந்து செல்லும் மாணவன், ஒரு நாளைக்கு நல்லதன் நலனை யுணர்ந்து நல்லதைத் தெரிந்து அதி லார்வம்கொள்வான். அன்றி அதனை ஆழ்ந்தும் சிந்திப்பான். அந்தப் பொருளைத் தன் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, அனுபவப் பொருளுமாக்குவான். ஆகவே பொருளையறிதலில்

(i) (பொதுவாக) பொருளையறிதல்

(ii) நல்ல பொருளி லார்வங்கொள்ளுதல்

(iii) நல்ல பொருளை யாழ்ந்து சிந்தித்தல்

(iv) நல்ல பொருளை யநுபவப் பொருளாக்கல்.

என நான்கு படிகள் வரலாம் (என்றைக்கு நல்ல பொருளிலொருவனுக்கு ரசம் பிறந்து அப்பொருளிலிருந்து அவனைப் பிரிக்க முடியாதோ, அன்றைக்கு, அவனுக்கு அப்பொருள் இலக்கியமாகிறது)

இனி, பாஷை ஆட்சியிலும் பலவகையுண்டு: (i) சொல்லாட்சி (ii) தொடர்மொழி, (iii) வாக்கிய அமைப்பு, (iv) நடை.

(நடை பொருளில் வேருகாதது. பொருள் தெளிவானுல் நடையும் தெளிவாயிருக்கும். பொருள் இலக்கியமானுல் அதனை ஆளும் நடையும் இலக்கியமாய்விடும். நல்ல பொருளை ரசிப்பவன் அதில் வேருகாத பாஷை நடையையும் ரசிக்கிருன்)

பொருளறிய வாசித்தற்குக் குரலைக் குறைத்தல் ஆவசியகம். பாலர் பிரிவில் 10% குரலைக் குறைப்பவன் 6ம் வகுப்பில் 90% குறைக்கவேண்டியவனுகிருன். அவ்வளவு தூரம் அது இன்றியமையாதது. அதனுலேதான் குரலைக் குறைத்தலின் பிரதானம் நோக்கி, பொருளறிய வாசிக்கும் வாசிப்பு மௌன வாசிப்பு எனப்படும்.

மௌனம் கலக நாஸ்தி.

(i) நமது சக்தி முழுவதையும் நல்ல கருத்துக்களிற் சிதருமல் இறக்குதற்கு உதவுகிறது.

(ii) உறுப்புக்களி லிளைப்பின்றி நெடுநேரம் வாசிக்கச் செய்கிறது.

(iii) நமது இருதயத்தை அதிக பொருள்களைக் கொள்வதற் கேற்ற பெரிய கொள்கலமாக்குகிறது.

பொருள் கிரகித்தலின் பிரதானபடிகள் :—

1. முன்னுரை :—முதற் பந்தி விஷயத்தின் இன்றியமையா மையை அவாவுதல் வேண்டும்.

2. பொழிப்பு :—வாசிப்பில் தடக்கில்லாத வழி மௌன வாசிப்பின்மூலம் நிகழும். தடக்குள்ள இடத்து உரத்து வாசித்துப் பொருளறியவேண்டும். இந்த வாசிப்புக்கள் பருப்பொருட்டான பொழிப்புக்கே உபகாரமானவைகள் பொழிப்பைக் காணுதற் கேற்ற வினவோ சந்தர்ப்பமோ முன் நிகழவேண்டும்.

3. விஷயவிளக்கம் :— . விஸ்தாரமான பொழிப்பு :—இதற்கு முந்திய வாசிப்புப் போதாது. வேண்டிய பாகங்களை மௌன மாகவோ உரத்தோ உபாத்தியாயராவது மாணவராவது வாசிக்க நேரிடும். ஒருவர் குறித்த பகுதியை உரத்து வாசித்தால் மற்றவர்க ளவதானிக்க வேண்டும். அவதானிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை உபாத்தியாயர் ஆக்கிவைக்கவேண்டும் அப்பகுதியில் வரும் அரும் பதங்கள் தொடர்களைக் குறித்த பொருளைத் தெளிவதற்கு உபகார மென்ற வகையில் விளக்கவேண்டும்.

b. நியாயித்தல் :—இக்கருத்து இக் காலத்துக்கு - இவ்விடத் துக்கு பொருந்துமா பொருந்தாதா என்று ஆராய்ந்து நியாயங் காட்டுதல். நியாயங்கள் திட்டமும் வரையறையும் உள்ளனவாதல் வேண்டும்.

c. கதைத் தொடர்பு :—அந்தச் சந்தர்ப்பத்துக்கு வேண்டி யது ; இதனை உபாத்தியாயராவது, தெரிந்த மாணவராவது சொல்லலாம். இது ஒரு புறம்பான பாடம் போல இராமல் எடுத்த விஷயத்துக்கு அங்கமாதல்வேண்டும். கூடிய விரைவாக நடைபெறவேண்டும்.

d. விவரணம் அல்லது வர்ணனை :—சுருக்க விடயங்களை வர் ணித்தல் விடயம் மனத்திற் பதிதற்கு உபகாரமானது. விஷயத்தி லீடுபடச் செய்வது. உபமானங்கள், உதாரணக் கதைகள், வர்ண னைக் கதைகள் இதில் வரலாம்.

e. அவாய்நிலை :—இது அடுத்த நிகழ்ச்சியை முந்திய சந்தர்ப் பத்துக்கியையக் கற்பனை செய்வதன் மூலம் அடுத்த பந்தி விஷ

யத்தின் இன்றியமையாமையையும் புலப்படுத்துவது. வெகு சுருக்கமாதல்வேண்டும்.

[. அப்பியாசம்:—சுருக்கம் சொல்லுவித்தல்:—இது ஒரு பந்தியைப் பலவாறு ஆராய்ந்த ஆராய்ச்சித் தெளிவிற் பிறக்கும் சில வார்த்தைகள். சாரம் என்று சொல்லலாம்.

இந்தச் சாரம் முதற்பந்தி முடிவிற்ருேன்றும் தோற்றம் இரண்டாம் பந்தி முடிவில் அதன் சாரத்தோடு சேர்ந்து வருங்கால் முன்னையிலும் வடிவிற் சுருங்கும். 3 ம் 4 ம் பந்தியினிறுதியில் முன்னையவை இன்னும் சுருங்கும்; கருத்துரையாய்விடும். ஆனல் எண்ணஞ் சுருங்காது. அதன் விசாலம் அப்படியே இருக்கும். இங்ஙனமே, ஏனைய பந்திகளின் சாரமும் மற்றைய பந்திகளோடு சேரச்சேரச் சுருங்கி நடக்கும் இறுதியில் முழுப்பாடத்தின் சாரமும் 4 வசனத்திற்கூட அமையலாம் அந்த வசனங்களை விரிப்பித்தலும் அப்பியாசமாம்

(இந்தப்படி முறைகள் மாணவர்களினறிவிற்கும், ஆசிரியனது ஆற்றலுக்கு மேற்ப வேறுபடும். பிள்ளைகளைத் தனது பார்வையினுலே நிலையினுலே, பேச்சுச் சாதுரியத்தினுலே வசீகரிக்க இயலாத, பிள்ளைகளைக்கொண்டு தெளிவாகப் பேசுவிக்க இயலாத, ஆசிரியர்களுக்கு விவரணம் அவாய்நிலை என்றபடிகள் வெகு தூரமானவை. அவர்கள் அந்தப் பகுதியைச் சுருக்கிக் கொள்வது நல்லது.)

பிரத்தியேக வாசிப்பு:—மௌன வாசிப்பில் ஒருவகை பிரத்தியேக வாசிப்பு. பாஷை விருத்திக்கிது முக்கியமானது இதற்கு வகுப்புக்கள்தோறும் தனித்தனி வாசிகசாலைகள், பள்ளிக்கூடத்துப் பொது வாசிகசாலைகள் இன்றியமையாதவை விசேஷ உபந்நியாசங்கள் கேட்டல், விசேஷ வானெலிப் பிரசங்கங்கள் கேட்டல் இவையும் பிரதானம்.

பாலர்களுக்குரிய புத்தகசாலையில் உள்ள புத்தகங்கள்: படங்கள்—உருவங்கள்—நூதனப் பொருள்கள்—வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் என்றிவைகளாயிருக்கும். இவை காலந்தோறும் சேகரிக்க வேண்டியவை. அன்றி, அடிக்கடி புதுக்கப்படவும் வேண்டும். ஒவ்வொரு பொருளின் கீழேயும் பெரிய எழுத்தில் அதன் பெயர் சுருக்கமான விபரம் எழுதப்பட்டிருக்க வேண்டும். இந்த வாசிகசாலையிற் பாலர்கள் பிரவேசித்தவுடன் சரமாரியான கேள்விகள் கேட்பார்கள். உபாத்தியாயர்கள் இளைக்காமல், தாய்மார் போலவும் பாட்டிகள் போலவும், மிக்க ஆறுதலாகவும் சந்தோஷமாக

வும் அவற்றின் விபரங்களைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். பொருட்காட்சி, மாதிரித் தோட்டங்கள், நூதனசாலைகள்—இவைகள் பாலர்களின் விசேஷ வாசிகசாலைகள். படவடிவான பத்திரிகைகள், பாலர் மலர்கள் பாலர்களின் வாசிகசாலைக்கு எடுக்கக்கூடியவைகள்.

கீழ்வகுப்புப் பிள்ளைகட்கு வேடிக்கைக் கதைகள் கற்பனைக் கதைகள், கதைப் பாட்டுகளிலே அதிக விருப்பமுண்டு. தென்னாலி ராமன் கதை, பஞ்சதந்திரக் கதை நவதந்திரக் கதைகள், பஞ்ச தந்திரப் பாட்டுகள், தனிப்பாட்டுகள், புலவர் வரலாறுகளிவர்கட் கேற்றவை கதைகள் நீண்டிருத்தலாகாது. ஒவ்வொரு புத்தகத்தி லும் பல பிரதிகளிருக்க வேண்டும். பாலர் மலர்கள், வாராந்த மாதாந்தப் பத்திரிகைகளில்வரும் சில பகுதிகள். நல்ல சில தொடர் கள் இவ்வகுப்பார் வாசிக்கத்தக்கவை. கீழ்வகுப்பென்றது இரண்டு தொடக்கம் ஐந்து முடிய உள்ள வகுப்புக்களை. மேல் வகுப்புக் குரிய வாசிகசாலைப் புத்தகங்கள் :—சரித்திரம், பூமிசாத்திரம், இலக் கியம், சமயம், அரசியல் விஷயம், உலக புதினம், வரலாறுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், சிறுகதைத் தொகுதிகளெனப் பலதிறப் படும். இவர்கள் யாதாயினும் தினசரிப் பத்திரிகையொன்று, வாராந்த மாதாந்தப் பத்திரிகைகள், விசேஷ மலர்கள் வாசிக்க வேண்டும்.

இந்த நூல்கள் பத்திரிகைகளைத் தெரியும்போது இயன்ற வரை திருத்தமான நடை நன்மை பயக்கத்தக்க விஷயங்கள் அமைந் தனவோ என்று ஆசிரியர் அவதானிக்கவேண்டும். மாணவரின் ஒழுக்கக் கேட்டையேனும் பாஷைப் பிழையையேனும் விளைப்பன வாயிருக்கக் கூடாது.

இந் நூல்கள் பத்திரிகைகள் வாசிக்கும் விஷயத்தில் அவரவர் விருப்பையறிந்து அவரவருக்கேற்ற பகுதிகளைக் குறிப்பிடல், சில பகுதிகளை வர்ணித்துக் காட்டுதல், வாசித்த பகுதிகளை வினவி இடர்ப்பாடுகளை நீக்குதல், பேச்சுப்பாட எழுத்துப்பாட நேரங் களில் வாசித்த பகுதிகளின் சாரம் வரத்தக்கதாகப் பேசுவித்தல் ; எழுதுவித்தல் முதலியன ஆசிரியர் செய்யத்தக்கன.

❊

கல்லைக் கடையர்கள் கைவிட் டெறியக் கனன்றெழுந்து
பல்லைத் திறந்துறு மிக்கவி தெங்கின் பழமுதிர்க்கு
மல்லற் பழனங்கள் சூழ்நல்லை நாதனை வந்தடைந்தோர்க்
கில்லைப் பிரமக் குயவன் வனைவதற் கேதுக்களே.

—குமாரசாமி முதலியார்.

# மாணவர் தேர்ச்சிச் சங்க அறிக்கை

இச்சங்கம் இக்கலாசாலை தொடங்கிய நாள் தொட்டு ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது. இது சில வருடங்களில் மிகவும் முன்னேற்றமாகவும் சில வருடங்களிற் சிறிது சோர்வாகவும் நடந்திருக்கிறது.

சென்ற வருடத்தில் மொத்தம் 26 அங்கத்தவர்கள் இருந்தார்கள். விடுகை வகுப்பில் 13 பேர். முதலாம் வருட வகுப்பில் 13 பேர். ஆக 26 பேர். இவ்வாண்டு பயிற்சி பெறுவதற்குப் புதிய மாணவர்கள் தெரிவு செய்யப்படவில்லை. இதனால் இவ்வருட விடுகை வகுப்பார் 13 பேரே இச்சங்கத்தில் இருக்கின்றனர். அங்கத்தவர் தொகை வர வரக் குறைந்த போதும் எமது சங்கம் முன்னேற்றப் பாதையில் நடந்துகொண்டுதா னிருக்கிறது. இச்சங்கத்தில் எல்லா மாணவர்களும் பங்குபற்றுவதற்காக இவ்வாண்டு ஒவ்வொரு தவணையிலும் புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் முறையை அநுசரித்தோம்,

இவ்வாண்டில் மொத்தம் 14 கூட்டங்கள் நடந்தன. இக்கூட்டங்களில் இலக்கியசம்பந்தமான விஷயங்களும் அரசியல் சம்பந்தமானவிஷயங்களும் கல்விபயிற்றல் சம்பந்தமான விஷயங்களும் பேசப்பட்டன. இரண்டு கூட்டங்கள் பகிரங்கமானவை. அரசினரிடம் ஆசிரியமாணவர் பாரபக்ஷமின்றி உபகாரப் பணம் பெற்றது இச்சங்கம் அடைந்தவெற்றிகளில் ஒன்று.

இதுவரை இக் கலாசாலையின் ஆசிரிய மாணவ பரம்பரை ஒருசங்கிலித் தொடர் போன்றது. ஒவ்வொரு வருட விடுகை வகுப்பினரும், தாம் கலாசாலையை விட்டு நீங்கும் போது, தமக்குப் பின்வந்த பலநாட் பயின்ற சகோதர ஆசிரிய மாணவர் ஒரு தொகையினரைக் கலாசாலையில் விட்டு வைத்துப் போயினர். இவ்வருடம் அப்படிச் செய்வதற்கு எமக்குப் பின்வந்த ஒரு வகுப்பினர் இல்லாமை பெரிய மன வருத்தம். ஆயினும் வருகிற வருடம் 1948-ம் ஆண்டில் புதிய சகோதர சகோதரிகள் பலர் இக்கலாசாலையிற் பிரவேசிப்பார்களென்று அறிந்து மகிழ்கின்றோம்.

இப்பொழுது அறிமுகமில்லாத அந்தச் சகோதர சகோதரிகள் தொன்றுதொட்டு வந்த நமது சங்கத்தை வளர்ப்பதனாலேதான், சங்கத்துக்கு உயிர்போன்ற "நாவலன்" என்கின்ற இவ் வெளியீட்டை வெளியிடுவதினாலேதான் நம்மை எல்லாம் அறிமுகஞ்செய்து, பரம்பரைத் தொடர்பை இடையீடு செய்யாது, வளர்த்து வருவார்களாக. சகோதரத்துவம் வாழ்க,

**சி. சங்கரப்பிள்ளை**
**தா. சுப்பிரமணியம்**
செயலாளர்

| தேதி | தலைவர் | விஷய சூசிகை | பேச்சாளர் |
|---|---|---|---|
| 3- 3-47 | திரு. க. குழந்தைவேலு | உத்தியோகத்தர் தெரிவு. (1-ம் தவணை) | |
| 11- 3-47 | ,, வ. செல்லையா | "தன்மை விருத்தி." | திரு. ஐ. சிவசம்பு |
| | | "வாசிப்பும் இலக்கியமும்." | ,, பொ. விசுவலிங்கம் |
| 18- 3-47 | ,, சி. கனகசுந்தரம் | "தோட்டக் கல்வி." | ,, S. T. V. பொன்னுத் [துரை |
| 13- 5-47 | ,, க. கணபதிப்பிள்ளை | உத்தியோகத்தர் தெரிவு. (2-ம் தவணை) | |
| 29- 7-47 | ,, வை. கந்தையா | "இலங்கையின் பாராளுமன்றத்தெரிவு" | ,, சி. கனகசுந்தரம் |
| | | "இலக்கியம் வாழ்க்கையிற் பிரயோசனப்படும் வகை." | ,, வ. செல்லையா |
| 13- 8-47 | ,, நா. குணரத்தினம் | பத்திராசிரியர் குழுவினர் தெரிவு. | |
| 19- 9-47 | ,, க. குழந்தைவேலு | உத்தியோகத்தர் தெரிவு. (3-ம் தவணை) | |
| 25- 9-47 | ,, க. இரத்தினம் | "ஒப்பந்த முறை." | ,, நா. குணரத்தினம் |
| | | "அவதானம்." | ,, சி. சங்கரப்பிள்ளை |
| 30- 9-47 | ,, சி. சங்கரப்பிள்ளை | "பாடசாலையில் ஆகாயவசனிப் பாடம் கற்பித்தல்." | ,, நா. சிவராசா |
| | | "இந்தியாவின் பூரண சுதந்திரம்." | ,, வை. கந்தையா |
| 7-10-47 | ,, மு. சீவரத்தினம் | "திருட்டாந்த வழிபாடு." | ,, க. இரத்தினம் |
| 15-10-47 | ,, நா. சிவராசா | "வில்லிகண்ட வீமன்." | ,, க. குழந்தைவேலு |
| 21-10-47 | ,, ஐ. சிவசம்பு | "கல்வியும் ஒழுக்கமும்." | , தா. சுப்பிரமணியம் |
| 28-10-47 | ,, தா. சுப்பிரமணியம் | "ஆரம்ப பாடசாலையில் சாஸ்திரக் கல்வி." | ,, மு. சீவரத்தினம் |
| 4-11-47 | ,, பொ. விசுவலிங்கம் | "இயற்கையும் நாமும்." | ,, க. கணபதிப்பிள்ளை |



ஆசிரியரும் (விடுகை வகுப்பு) மாணவர்களும் — 1947

# பத்திராசிரியர் குறிப்பு

**கிருஷிக பாடசாலை :**

சென்ற வருடமும் இவ் வருடமும் கிருஷிக பாடசாலைக்குச் சென்று தோட்டக்கல்வி கற்ருேம். இதற்காக அப்பாடசாலை அதிபர் அவர்கட்கும், விரிவுரையாளர் திரு. செபரத்தினம் அவர்கட்கும் எமது நன்றி உரித்தாகுக.

**விரிவுரைகள் :**

1. பாடசாலை வைத்திய அதிகாரி டக்டர் T. P. தாமோதரம் அவர்கள் சுகாதார சம்பந்தமாகப் பல அரிய விரிவுரைகள் திங்கட்கிழமைகள் தோறும் நிகழ்த்திஞர்கள்.

2. கிருஷிகப்பகுதிப் பிரசாரகர் திரு. S. J. V. பொன்னுத்துரை அவர்களால் கிருஷிக சம்பந்தமாக அரியவோர் பிரசங்கம் செய்யப்பட்டது. எங்கள் சங்கம் இவ்விரு பெரியார்கட்கும் விசேட நன்றி செலுத்துகின்றது.

**நூல்நிலையம் :**

சைவாசிரிய கலாசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உபயோகத்திற்காக இக்கலாசாலை நூல்நிலையத்தில் தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய முப்பாஷைகளிலுமாக மொத்தம் 850க்கு மேற்பட்ட நூல்களுள.

இவைகளேயன்றி, விலையுயர்ந்த சரித்திர, பூமிசாஸ்திர, சுகாதார பாடங்கள் சம்பந்தமான படங்களும் பல இருக்கின்றன.

வாசிகசாலையின் சார்பாக வீரகேசரி, ஈழகேசரி, தினகரன், சுதந்திரன், இந்துசாதனம், சக்தி, தமிழ்முரசு, தமிழ் ஹரிஜன், மறுமலர்ச்சி, வித்தியாபோதினி (Journal of Education), Ceylon Observer, Hindu Organ— ஆகிய பத்திரிகைகள் வரவழைக்கப் படுகின்றன. இவ்வாசிகசாலையை விடச் சைவவிடுதி மாணவர் நூல்நிலையமும் அண்மையில் இருக்கின்றது. இது, சாதனுபாடசாலை விடுதி மாணவர்களாலும், ஆசிரியர்களாலும், ஆசிரிய கலாசாலை மாணவர்களா

லும் நடாத்தப்படுகின்றது. பிரபல தென்னிந்திய-இலங் கைப் பத்திரிகைகள் இருபதிற்கு மேற்பட வரவழைக்கப்படு கின்றன.

**தேகாப்பியாசப் பயிற்சி:**

தேக மனே வளர்ச்சிக்கும் அங்க இலக்ஷணத்திற்கும் சிரமப்பயிற்சி இன்றியமையாதது. அதனுற்போலும் அரசி னரும் இதனைக் கட்டாய பாடமாக்கினர். திரு. இ. வீ. கார்த்திகேசு (Physical Training Instructor) அவர்களால் எங்கட்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. முஷ்டியுத்தம், குஸ்தி, சிலம்பம், பந்தடித்தல், கோலாட்டம், சுதேசவிளை யாட்டுக்கள் ஆதியனவற்றிலும் பயிற்சி பெறுகின்றேம். இப் பெரியாரின் பேருதவிக்குப் பெரிதும் கடப்பாடுடையோம்.

**சங்கீதம்:**

சென்ற வருடம் சங்கீத பூஷணம் திரு. சோமசுந்தரம் அவர்களால் எங்கட்குச் சங்கிதப் பயிற்சியளிக்கப்பட்டது. கைம்மாறு கருதாது செய்த இவ்வரிய உதவிக்கு நாம் என் றும் கடப்பாடுடையோம்.

**பேராசிரியர் பிரமஸ்ரீ ந. கந்தசுவாமி ஐயரவர்கள்:**

மாணவர் குறைவு காரணமாக, சென்ற தைமாதம் தொடக்கம் எங்கள் கலாசாலையை விடுத்து, கல்வியங்காடு-சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றி வருகின்றூர்கள். கலாசாலையை விட்டு நீங்கியபோதிலும் கல்வி சம்பந்தமாகப் பல அரிய உதவிகள் செய்கின்றூர்க ளென்பது குறிப்பிடத்தக்கது.

**அரசினர் உபகாரப்பணம்:**

1945-ம்ஞு ஐப்பசிமீ தொடக்கமாக அரசினரால் அர சினராசிரியசலாசாலை மாணவர்கட்கு ஒவ்வொருவருக்கும் மாதம் 20 ரூபா வீதம் உபகாரப்பணம் அளிக்கப்பட்டு வந் தது: ஆனுல், உதவி நன்கொடை பெறும் கலாசாலை மாண வர்கட்கு இவ்வுதவி கிடைக்கவில்லை. இது எமக்கு மிகவும் வருத்தத்தையளித்தது. இதற்கு முன்னிருந்த மாணவர்களும் இதையிட்டு அதிகம் சிரத்தை கொள்ளவில்லை. எங்கள் மாணவர் சங்கத்தினதும், மற்றக் கலாசாலைகளினதும்

முயற்சியினுல், 1946 ம்ஞு தைமீ தொடக்கமான உபகாரப் பணம், இவ்வாண்டுத் தொடக்கத்தில் எமக்கும் சென்ற வருட மாணவர்கட்கும் அளிக்கப்பட்டது.

**இருபாலார் பயிற்சி:**

1948-ம் ஆண்டு தொடக்கம் ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இருபாலார்க்கும் இக்கலாசாலையிற் பயிற்சி அளிக்கப் படும். ஆண்பாலார் 25 பேர் பெண்பாலார் 25 பேர் ஆக ஐம்பதின்மர் வருகிற வருடப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப் பட்டிருக்கிருர்கள்.

**பெண்கள் ஆசிரிய கலாசாலை:**

சென்ற ஆண்டில் அரசினரால் பெண்களுக்கு ஒரு ஆசிரிய கலாசாலை, சைவ. வி. வி. சங்க ஆதரவில் சைவா சிரிய கலாசாலைக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட்டது. அது இப் பொழுது, கோப்பாயில் அரசினர் கட்டடத்தில் நன்கு நடை பெறுகின்றது.

**தேகவியோகம்:**

கலாசாலைப் பேராசிரியர்களுள் ஒருவராகக் கடமை யாற்றியவரும், இந்தியாவுக்குச் சென்று 'படிப்புக்கு வய தில்லை' என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கி, மிக்க திறமையோடும் B. Sc. பரீக்ஷையிற் சித்தியெய்தியவரும், பின் சில்லாண்டுகளாகத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யிற் கடமையாற்றியவருமாகிய திரு. இ. நடராசா அவர்கள் சென்ற வருடம் தேகவியோகமெய்தினர். அவர்களது ஆன்மா சாந்தியடைவதாக.

**நன்றியுரை:**

இவ்வெளியீட்டைக் குறைந்த செலவில் அழகாகவும் விரைவாகவும் பதிப்பித்து உதவிய 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களின் உதவி என்றும் மறக்கற் பாலதன்று. அன்றி, விளம்பரங்கள் உதவி உபகரித்த வர்த் தகப் பிரமுகர்களுக்கும், கட்டுரைகள், கவிகள் உதவியும், திருத்தங்கள் செய்தும் உபகரித்த பழைய மாணவ்ர்களாகிய ஆசிரியர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக.

---

# கற்றுத் தேர்ந்த மாணவர்கள்

1937-ம் ஆண்டு முடியத் தேர்ந்து வெளிவந்தவர்களின் நாமாவலி ஆண்டுதோறும் வெளிவந்த வெளியீடுகளில் வெளிவந்தது.

இருவருடப் பயிற்சியை மூன்றுவருடப் பயிற்சி ஆக்கியதால் 1941 ம் ஆண்டில், யாரும் வெளிவரவில்லை.

## 1938

| | | |
|---|---|---|
| 1. | ஐ. நாகநாதன் | வேலணை |
| 2. | த. இராமலிங்கம் | சாவகச்சேரி |
| 3. | க. சுப்பிரமணியம் | உடுப்பிட்டி |
| 4. | ப. இராமலிங்கம் | வல்லிபுரக்குறிச்சி |
| 5. | க. கந்தவனம் | மட்டக்களப்பு |
| 6. | க. சோமசுந்தரம் | கொக்குவில் E |
| 7. | சோ. நடராசா | ,, ,, |
| 8. | து. தம்பையா | புன்னாலைக்கட்டுவன் |
| 9. | மா. நவரத்தினம் | அராலி S |
| 10. | வே. கதிரவேலு | நெடுந்தீவு |
| 11. | சு. வல்லிபுரம் | இடைக்காடு |
| 12. | க. திருச்செவ்வேல் | குரும்பசிட்டி |
| 13. | வி. பொன்னுத்துரை | வேலணை |
| 14. | சி. சிதம்பரப்பிள்ளை | ஆனைக்கோட்டை |
| 15. | சி. வல்லிபுரம் | சாவகச்சேரி |

## 1939

| | | |
|---|---|---|
| 1. | பொ. மயில்வாகனம் | காரைநகர் |
| 2. | மு. செல்லையா | புன்னாலைக்கட்டுவன் N |
| 3. | சி. நல்லையா | நயினாதீவு |
| 4. | க. உமாமகேசுவரன் | சாவகச்சேரி |

| | | |
|---|---|---|
| 5. | த. சிவஞானசம்பந்தன் | வேலணை |
| 6. | ஆ. பரமசாமி | மீசாலை |
| 7. | வ. நல்லதம்பி | அளவெட்டி |
| 8. | ச. ஆறுமுகராசா | சுதுமலை |
| 9. | த. செல்வத்துரை | நீர்வேலி |
| 10. | க. முருகேசு | கரவெட்டி |
| 11. | செ. சிவலிங்கம் | வல்வெட்டித்துறை |
| 12. | நா. ஐயம்பிள்ளை | நெடுந்தீவு |
| 13. | சி. பொன்னையா | ஏழாலை N |
| 14. | வி. முருகேசு | ,, |
| 15. | சி சுப்பிரமணியம் | முல்லைத்தீவு |
| 16. | நா. முத்தையா | ஏழாலை E |
| 17. | க. கந்தையா | மூளாய் |
| 18. | ஆ. சுப்பிரமணியம் | நெடுந்தீவு |
| 19. | சு. இராசையா | கைதடி N |
| 20. | க. தியாகராசா | தனியூற்று |
| 21. | ப. மூத்ததம்பி | தையிட்டி |

## 1940

| | | |
|---|---|---|
| 1. | க. சரவணமுத்து | சாவகச்சேரி N |
| 2. | செ. சிவப்பிரகாசம் | வழலாய் |
| 3. | வி. கணபதிப்பிள்ளை | மாதகல் |
| 4. | க. கெங்காதரர் | ஆனைக்கோட்டை |
| 5. | ப. இளையதம்பி | குரும்பசிட்டி |
| 6. | சி. வேலுப்பிள்ளை | கைதடி |
| 7. | சி. செல்லமுத்து | உடுப்பிட்டி |
| 8. | சி. சரவணமுத்து | புங்குடுதீவு |
| 9. | மா. ஆதிரை ஆனந்தி | உடுவில் |
| 10. | சு. ஆறுமுகம் | சங்கானை |
| 11. | க. வேலுப்பிள்ளை | இடைக்காடு |
| 12. | சி. வயிரமுத்து | ,, |
| 13. | ச. கந்தையா | மட்டுவில் |
| 14. | சு. நடராசலிங்கம் (தேகவியோகம்) | தும்பளை |
| 15. | மா. அப்புக்குட்டி | கட்டுவன் |
| 16. | கா. கந்தையா | வறுத்தலைவிளான் |

| | | |
|---|---|---|
| 17. | சி. சோமசுந்தரம் | தொல்புரம் |
| 18. | அ. சச்சிதானந்தமுதலி | திருநெல்வேலி E |
| 19. | மு. கணபதிப்பிள்ளை | மாதகல் |
| 20. | மு. நாகேந்திரம் | சங்கானை |
| 21. | ச. கைலாயபிள்ளை | சரசாலை |
| 22. | வ. இராசதுரை | சுதுமலை |
| 23. | வ. கணபதிப்பிள்ளை | இளவாலை |
| 24. | க. முத்துத்தம்பி | புங்குடுதீவு |
| 25. | ச. சிதம்பரப்பிள்ளை | வேலணை |
| 26. | க. குமாரவேலு | உடுப்பிட்டி |
| 27. | த. சுப்பிரமணியம் | சாவகச்சேரி N |
| 28. | ச. இராசரத்தினம் | வேலணை W |
| 29. | மு. கந்தசுவாமி | இடைக்காடு |
| 30. | சி. சிவசுப்பிரமணியம் | அராலி S |

## 1942

| | | |
|---|---|---|
| 1. | வை. ஆறுமுகம் | நாயன்மார்கட்டு |
| 2. | நா. செல்லப்பு | தாவடி |
| 3. | க. செல்வத்துரை | ஏழாலை |
| 4. | சோ. செல்லையா | முல்லைத்தீவு |
| 5. | ஆ. கணபதிப்பிள்ளை | நெடுந்தீவு |
| 6. | வே. கந்தையா | இளவாலை |
| 7. | நா. கிருஷ்ணசாமி | கொக்குவில் |
| 8. | மூ. நடராசா | புங்குடுதீவு |
| 9. | வ. நடராசா | திருநெல்வேலி |
| 10. | ச. நமசிவாயம் | காரைநகர் |
| 11. | வே. பஞ்சரத்தினம் | அரியாலை |
| 12. | இ. இராமசாமி | வழலாய் |
| 13. | ச. சபாரத்தினம் | மயிலிட்டி S |
| 14. | சி. சின்னத்துரை | புங்குடுதீவு |
| 15. | இ. சிதம்பரப்பிள்ளை | மட்டுவில் |
| 16. | சி. சிவக்கொழுந்து | உடுப்பிட்டி |
| 17. | செ. சிவப்பிரகாசம் | தாவடி |
| 18. | வீ. தெய்வேந்திரம்பிள்ளை | வட்டுக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 19 | வி. தியாகராசா | மட்டக்களப்பு |
| 20. | இ. வேலுப்பிள்ளை | நெடுந்தீவு |
| 21. | சு. வேலுப்பிள்ளை | நாவற்குழி |

## 1943

| | | |
|---|---|---|
| 1. | செ. ஐயாத்துரை | வட்டுக்கோட்டை |
| 2. | சா. பெனுண்டோ | சுன்னுகம் |
| 3. | க. இளையதம்பி | அனலைதீவு |
| 4. | செ. ஏரம்பசர்மா | ஏழாலை |
| 5. | நா. கனகசபை | வட்டுக்கோட்டை |
| 6. | மு. கந்தையா | புலோலி |
| 7. | வி. குமாரசுவாமி | புங்குடுதீவு E |
| 8. | மு. இலட்சுமணன் | ,, |
| 9. | சி. மருதபிள்ளை | வட்டுக்கோட்டை |
| 10. | சி. நாகலிங்கம் | மயிலிட்டி S |
| 11. | செ. இராசா | திருநெல்வேலி |
| 12. | த. இராசேந்திரம் | ,, |
| 13. | பொ. இராமசாமி | நல்லூர் |
| 14. | மு. இரத்தினசிங்கம் | கொளும்புத்துறை |
| 15. | சி. சண்முகநாதன் | வேலணை |
| 16. | கு. செல்லையா | அரியாலை |
| 17. | சு. செல்வத்துரை | புங்குடுதீவு |
| 18. | க. செல்வராசா | ஊர்காவற்றுறை |
| 19. | இ. செல்வராசா | வண்ணார்பண்ணை |
| 20. | க. சிவகுரு | பளை |
| 21. | செ. சிவப்பிரகாசம் | சரசாலை |
| 22. | வே. தம்பியையா | திருநெல்வேலி E |
| 23. | வை. வைத்தியலிங்கம் | மட்டுவில் N |
| 24. | சி. குமாரசுவாமி | ஏழாலை |
| 25. | சி. சத்துருகுலசிங்கம் | புலோலி |
| 26. | வி. சண்முகம் | அச்சுவேலி |
| 27. | பொ. சிவகுரு | ,, |
| 28. | பொ. சிவசாமி | புங்குடுதீவு |
| 29. | சி. சிவசிதம்பரநாதன் | வண்ணார்பண்ணை |
| 30. | சி. சிவசுப்பிரமணியம் | கல்வியங்காடு |

## 1944

| | | |
|---|---|---|
| 1. | சி. கணபதிப்பிள்ளை | உடுப்பிட்டி |
| 2. | சி. குல்ரத்தினம் | கந்தர்மடம் |
| 3. | ச. குமாரசுவாமி | நீர்வேலி |
| 4. | செ. மாணிக்கம் | பருத்தித்துறை |
| 5. | ஐ. மாணிக்கவாசகர் | மீசாலை |
| 6. | சி. சின்னத்தம்பி | கரவெட்டி |
| 7. | வே. சின்னத்துரை | கரவெட்டி N |
| 8. | அ. துரைரத்தினம் | அராலி W |
| 9. | சி. வீரகத்தி | கரவெட்டி W |
| 10. | இ. வேலாயுதர் | நாயன்மார்கட்டு |
| 11. | க. வேலுப்பிள்ளை | மீசாலை S |
| 12. | சி. கந்தையா | மறவன்புலோ |

## 1945

| | | |
|---|---|---|
| 1. | க. ஆறுமுகம் | ஏழாலை |
| 2. | மா. கனகரத்தினம் | வட்டுக்கோட்டை |
| 3. | த. கனகரத்தினம் | தெல்லிப்பழை |
| 4. | வ. கந்தையா | புங்குடுதீவு W |
| 5. | க. கந்தவனம் | கரணவாய் S |
| 6. | ந. கதிரமலை செல்வத்துரை | அல்வாய் S |
| 7. | ச. கைலாயபிள்ளை | வேலணை |
| 8. | வ. குமாரசுவாமி | ஏழாலை N |
| 9 | செ. மயில்வாகனம் | புத்தூர் |
| 10. | க. நடராசா | திருநெல்வேலி E |
| 11. | ஆ. பொன்னம்பலம் | கரணவாய் N |
| 12. | வே. பொன்னையா | சாவகச்சேரி |
| 13. | ஐ. இராசரத்தினம் | சுன்னுகம் |
| 14. | க. இராசரத்தினம் | புத்தூர் E |
| 15. | ச. இராசரத்தினம் | வட்டுக்கோட்டை W |
| 16. | வீ. சண்முகரத்தினம் | சுழிபுரம் |
| 17. | சி. சரவணமுத்து | உசன் |
| 18. | தி. சதாசிவம் | அல்வாய் N |
| 19. | இ. செகசோதி | மாவிட்டபுரம் |
| 20. | இ. செல்வத்துரை | கொக்குவில் E |
| 21. | செ. சின்னத்துரை | ,, |

NOV 12 1947




HADJI SONS

HADJI V.M.M. ABOOSALIH & SONS

57, KANNATHIDDY

JAFFNA

தங்கப்பவுண், நூதன ஜாலர்,
பவுண் நகைகள், எனுமல் கலர்கள்,
கால் சங்கிலி வகைகளும்

நகை வேலைக்குரிய சகல ஆயுதங்கள்,
நகைப்பெட்டி வகைகளும் இன்னும்
ஏனைய பொருட்களும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

●

வெளியூர் ஆடர்கள் உடனுக்குடன்
கவனித்து அனுப்பப்படும்.

●

ஓடர் நகைகள்
கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு
தக்க உத்தரவாதத்துடன் குறித்த
நேரத்தில் முடிப்பித்துக்கொடுக்கப்படும்

ஹாஜி ஸன்ஸ்

ஹாஜி வி.எம்.எம். அபூஸாலிஹ்

அன் ஸன்ஸ்

57, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

# CHELLAPPAH BROS.

GENERAL HARDWARE MERCHANTS
ENGINEERS, BUILDERS & CONTRACTORS

23, Stanley Road, JAFFNA.

★

## கட்டிடத்துக்கு

தேவையான

**சிமந்தும்** மற்றும்
**இரும்புச்சாமான்கள்**

எல்லாம்

● **எங்களிடம் குறைந்த விலையில்**

பெற்றுக்கொள்ளலாம்

## செல்லப்பா பிறதேஸ்

**23, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.**

*Telegraph*:
**CEEBEE**

தந்தி:
**CEEBEE**

| | | |
|---|---|---|
| 22. | சி. சிவானந்தம் | குரும்பசிட்டி |
| 23. | வ. சுப்பிரமணியம் | புங்குடுதீவு W |
| 24. | நா. குருநாதி | நெடுந்தீவு W |
| 25. | த. தருமலிங்கம் | மயிலிட்டி S |
| 26. | க. தம்பையா | கரவெட்டி W |
| 27. | ந. திருநாவுக்கரசு | தொல்புரம் |

## 1946

| | | |
|---|---|---|
| 1. | சி. அம்பலப்பிள்ளை | மாவிட்டபுரம் |
| 2. | க. கந்தப்பு | கரவெட்டி W |
| 3. | பொ. கந்தசுவாமி | துன்னாலை S |
| 4. | இ. கந்தவனம் | வல்வெட்டித்துறை |
| 5. | கா. கதிர்காமநாதன் | சுழிபுரம் |
| 6. | ம. முருகேசு | சாவகச்சேரி |
| 7. | இ. நாகலிங்கம் | கட்டுவன் |
| 8. | எ. நல்லையா | வேலணை |
| 9. | க. சிங்காரவேலு | பருத்தித்துறை |
| 10. | சி. சுப்பிரமணியஐயர் | தாவடி |
| 11. | மு. தம்பையா | முள்ளியவளை |
| 12. | கு. கந்தையா | மாவிட்டபுரம் |
| 13. | பொ. தாமோதரம்பிள்ளை | புன்னாலைக்கட்டுவன் |

## 1947

| | | |
|---|---|---|
| 1. | வ. செல்லையா | இளவாலை |
| 2. | சி. கனகசுந்தரம் | குரும்பசிட்டி |
| 3. | க. கணபதிப்பிள்ளை | புங்குடுதீவு |
| 4. | வ. கந்தையா | தெல்லிப்பழை |
| 5. | க. குழந்தைவேலு | திருநெல்வேலி |
| 6. | நா. குணரத்தினம் | ஏழாலை |
| 7. | க. இரத்தினம் | வேலணை |
| 8. | சி. சங்கரப்பிள்ளை | மீசாலை |
| 9. | மு. சிவரத்தினம் | எழுவைதீவு |
| 10. | நா. சிவராசா | திருநெல்வேலி |
| 11. | ஐ. சிவசம்பு | தாவடி |
| 12. | தா. சுப்பிரமணியம் | அரியாலை |
| 13. | பொ. விசுவலிங்கம் | புன்னாலைக்கட்டுவன் N |

★

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக வுலக மெல்லாம்.

★

UNIVERSITY OF JAFFNA LIBRARY

250050

# புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| நவீன அசேதன ரஸாயனம் 1-ம் பாகம் (Modern Inorganic Chemistry Pt. I) | 4 - 25 |
| நவீன அசேதன ரஸாயனம் 2-ம் பாகம் (Modern Inorganic Chemistry Pt. II) | 3 - 50 |
| பௌதிகநூல் - I (Intermediate Physics) | 4 - 25 |
| பௌதிகநூல்-II (Intermediate Physics Vol.II) | 3 - 00 |
| தாவரநூல் .... .... .... | 4 - 25 |
| நவீன தர்க்கம் .... .... .... | 2 - 60 |
| அகநூல் .... .... .... | 3 - 00 |
| படிப்பிக்கும் முறைகளும் விதிகளும் | 3 - 00 |
| பொது ஞான சாஸ்திரம் 1-ம் புத்தகம் | 90 |
| பொது ஞான சாஸ்திரம் 2-ம் புத்தகம் | 90 |
| பொது ஞான சாஸ்திரம் 3-ம் புத்தகம் | 90 |
| பொது ஞான சாஸ்திரம் 4-ம் புத்தகம் | 1 - 05 |
| பொது ஞான சாஸ்திரம் 5-ம் புத்தகம் | 2 - 10 |
| சோதனைசாலையற்ற ஆரம்ப அனுபவ விஞ்ஞான சாத்திரம்-முதற் புத்தகம் | 30 |
| சோதனைசாலையற்ற ஆரம்ப அனுபவ விஞ்ஞான சாத்திரம்-இரண்டாம் புத்தகம் | 55 |

★

## S. S. சண்முகநாதன் & சன்ஸ்

சண்முகநாதன் புத்தகசாலை

வண்ணார்பண்ணை : : யாழ்ப்பாணம்

கிளை :– 28, அப்பர் சதாம் வீதி, கோட்டை, கொழும்பு

# THAMBY & Co.,

(BANKERS)

ACCEPT

**FIXED DEPOSITS**

of Rupees Five Hundred and over

at the following

**RATES OF INTEREST**

| | | |
|---|---|---|
| 3 months | 4% | per annum |
| ½ year | 4½% | ,, ,, |
| 1 ,, | 5% | ,, ,, |
| 2 years | 6% | ,, ,, |

*Head Office :-* THIRUNELVELY, JAFFNA

*Branch :-* VANNARPONNAI, JAFFNA

[ESTABLISHED IN 1942]

★

# தம்பி அன் கோ.,

[ வங்கிக்காறர் ]

ஐஞ்ஞூறு ரூபாவுக்கும் அதின் மேற்பட்ட தொகைக்கும்

**நிரந்தர சேமப்பணத்திற்கு**

கீழ்க்குறித்தபடி

**வட்டி கொடுக்கப்படும்**

| | | |
|---|---|---|
| 3 மாதம் : | வருடம் | 4 சத வீதம் |
| 6 ,, | ,, | 4½ ,, |
| 1 வருடம் : | ,, | 5 ,, |
| 2 ,, | ,, | 6 ,, |

தலைமை ஆபீஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

கிளைஸ்தாபனம் : வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

[1942-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது]

# P. SUBRAMANIAM & BRO.

Head Office:
**KEKIRAWA.**
Phon-: 8

Branch:
**Stanley Road, JAFFNA.**
Telegrams; "PEYES BRO"

லொறி டிரன்ஸ்போட் ஏஜென்ட்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும்
இடையே நேரடிப் போக்குவரத்து

## சிமென்ற்

## எள்ளு * * கடுகு

மற்றும் தானிய வகைகளும்

தொகையாகவும் சகாயமாகவும்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

## பூ. சுப்பிரமணியம் அன் பிரதர்

கெக்கிராவா ஸ்ரோர்
ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

---

தலைமை ஆபீஸ்:

பூ. சுப்பிரமணியம் அன் பிரதர்
கெக்கிராவா [போன்: 8]

தங்களுடைய இன்றைய வாழ்க்கை
திருப்தியை அளிக்கின்றதா?
இல்லையானல்

தங்களுடைய புகைப்படம்
அதைச் செய்துமுடிக்கும்

★

"பாரத் ஸ்ரூடியோ"

யாழ்ப்பாணத்திலே புகழ்பெற்ற
புகைப்படம் பிடிக்கும் நிலையம்
என்பதை மறக்காதீர்கள்

தற்கால வர்ணவேலைப்பாடுகளுடன்
நிறைந்த அற்புத ஸ்தாபனம்

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்

இரவு பகல் எந்நேரத்திலும் போட்டோ எடுக்கப்படும்

திருமண காலத்திலும் உபசார வைபவங்கள் நடைபெறுங் காலத்திலும் புகைப்படம் பிடிக்கத் தவருதீர்.

★

சினிமா ஸ்லைட்டுக்கள் கலைப்பொலிவுடன் செய்வதிற் தனிப் பண்பு வாய்ந்துள்ளோம். படம் பெருப்பிப்பதுடன் 'கமராக்'களுந் திருத்திக் கொடுக்கப்படும்.

பாரத் ஸ்ரூடியோ

கஸ்தூரியார் ரோட்டு : யாழ்ப்பாணம்

N. B. நவம்பர் மாதம் முதலாக கஸ்தூரியார் ரோட்டிலுள்ள "ஹாஜி ஹமீத்தா" என்னும் கட்டிடத்தில் மாற்றப்பட்டிருக்கிறது

ARCHIVES

University of Jaffna
250050
Library

۵۵۱۹